
www.padippakam.com


# தமிழர் கண்ணோட்டம்

கோப்பு: 14 திபி. 2031 : ஆடவை-கடகம்
மடல் : 7-8 கி.பி. 2000 : சூலை-ஆகஸ்ட் விலை ரூ 5.00

கடத்தலும் கலைந்த அரிதாரங்களும்

படிப்பகம்

www.padippakam.com



# நிறை குறை

சூன் மாத "கருப்பும் சிவப்பும்" கட்டுரையில் பார்ப்பனத் தலைவர்களைப் பற்றிய பெ.ம.வின் கருத்து, ஆய்வு நோக்கில் உள்ளது. ஆதாரம் காட்டி விளக்கியிருக்க வேண்டும்.

- இ. தனஞ்செயன்,திருத்துறைப்பூண்டி.

தமிழ்வழிக்கல்வி ஆணை செல்லாது என்று தீர்ப்பளித்த நீதிபதிகளின் தீர்ப்பை நடுநிலைமையில் ஆய்ந்து எழுதிய புலவர் சா.பன்னீர்செல்வம் கட்டுரையும் தோழர் பெ.ம.வின் கட்டுரையும் அருமை.

-இரா.இரமேஷ், மயிலாடுதுறை

ஈழத்தின் வரலாற்றை விளக்கி ப.சிதம்பரம், உமாநாத் போன்றவர்களுக்கு சரியான சவுக்கடியாக தோழர் கி.வெங்கட்ராமனின் செக்கோஸ்லோவாக்கியா வங்க தேசம் தமிழ் ஈழம் கட்டுரை அமைந்து இருந்தது.

- இராஜேஸ்வரி, தஞ்சாவூர்.

## தமிழ்ச்சான்றோர் பேரவைத் தொடக்கவிழாக்கள்

### சாணூரப்பட்டி(செங்கிப்பட்டி)

தஞ்சை வட்டம், சாணூரப்பட்டியில் 30.07.2000 அன்று தமிழ்ச்சான்றோர் பேரவை தொடக்க விழா நடந்தது. ம.தி.மு.க. பூதலூர் ஒன்றியச் செயலாளர் திரு சின்னையா தலைமையில் நடந்த இவ்விழாவில் தமிழ்ச்சான்றோர் பேரவை நிறுவனர் திரு நா.அருணாசலம், பேரா.பெரியார்தாசன், பேரா.விருத்தாசலம், த.தே.பொ.க. பொதுச்செயலாளர் பெ.மணியரசன், தோழர்கள் குழ.பால்ராசு, இரெ.கருணாநிதி, இரா.பழநிஇராசு, இரா.நந்தகுமார், து.செந்தில்நாதன் ஆகியோர் உரையாற்றினர்.

மாவட்ட அமைப்பாளர் திரு சுந்தரமூர்த்தி நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தார்.

திரளான மக்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

### திருக்காட்டுப்பள்ளி

திருவையாறு வட்டம் திருக்காட்டுப்பள்ளியில் 31.07.2000 அன்று தமிழ்ச்சான்றோர் பேரவை தொடக்க விழா நடந்தது. திரு திருஞானசம்மந்தம் தலைமை தாங்கினார். தமிழ்ச்சான்றோர் பேரவை நிறுவனர் திரு நா.அருணாசலம், புதுக்கோட்டை பாவாணன், பேரா. விருத்தாசலம், புலவர் புகழேந்தி ஆகியோர் உரையாற்றினர். முன்னதாக கோவி.கணேசன் குழுவினரின் எழுச்சி இசை நிகழ்ச்சி நடந்தது.

## உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு

ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் அல்லது தாய்மொழி கட்டாய மொழிப் பாடமாகவும், பயிற்று மொழியாகவும் இருக்கவேண்டும் என்று தமிழக அரசு பிறப்பித்த ஆணையை எதிர்த்து மெட்ரிகுலேசன் முதலாளிகள் தொடுத்த வழக்கில் சென்னை உயர்நீதி மன்றம் மேற்படி முதலாளிகளுக்காதரவாகவும் தமிழ்மொழிக் கெதிராகவும் தீர்ப்பளித்தது தெரிந்ததே.

இத்தீர்ப்பை எதிர்த்து உடனடியாக உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யாமல் மௌனமாக இருந்த தமிழகஅரசு, மேல் முறையீட்டு முடியும் தருவாயில் ஒப்புக்குச் சப்பானியாக மேல் முறையீடு செய்துள்ளது. தமிழ்ச்சான்றோர் பேரவை நிறுவனர் திரு நா.அருணாசலம் அவர்கள் இதே வழக்கில் தாமும் ஒரு வாதியாக தமிழுக்காதரவாக உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளார்.

தமிழ்வழிக் கல்வியைக் கொண்டு வருவதில் குறுக்கே விழுந்துள்ள நீதிமன்றத் தடையை நீக்குவதற்கு நீதித்துறை வாயிலாக எடுக்கும் முயற்சியை தமிழக அரசு இப்பொழுதாவது உண்மையாக, உறுதியாக செய்ய வேண்டும்.

இது ஒருபக்கம் இருக்க தமிழ் உணர்வாளர்கள் தமிழ்வழிக் கல்விக்காக தொடர்ந்து போராட்டங்கள் நடத்த வேண்டும்.

அண்மையில் தமிழகமாணவர் முன்னணி மாணவர்கள் மெட்ரிகுலேசன் வாரியத்தை மூடக்கோரி சென்னை பத்மா சேசாத்திரி பள்ளியை இழுத்துப்பூட்டி கைதான முயற்சி பாராட்டக்குரியது.

படிப்பகம்

www.padippakam.com

தமிழர் கண்ணோட்டம்

ஜுலை - ஆகஸ்ட் 2000

தன்னுரிமைப் போருக்கு முன்னுரிமை கொடுப்போம்

தமிழ்த் தேச வரலாற்றில் புதுயுகம் படைப்போம்

# அரிதார அரசியலும் சந்தன வீரப்பனும்

சந்தன வீரப்பன் கன்னட நடிகர் ராஜ்குமாரையும், அவருடன் இருந்த மற்ற மூவரையும் 30.7.2000 இரவு கடத்திச் சென்றுள்ள செய்தி திரைப்பட கதாநாயகர்களின் அரிதாரத்தைக் கலைத்தது. நடிகரை விடுவிக்க வீரப்பன் முன் வைத்துள்ள பத்து கோரிக்கைகள் தேர்தல் கட்சி கதாநாயகர்களின் அரிதாரத்தை அழித்துள்ளது.

வீரப்பன் தன் சொந்தப் பிழைப்பிற்காகவும் தனக்கு பணம் சேகரிப்பதற்காகவும் சந்தன மரக்கடத்தல், யானைத் தந்தம் கடத்தல் போன்ற சட்ட விரோத தொழில்கள் புரிந்து வந்த நபர். இந்தத் தொழிலில் அவருக்கு தேர்தல் கட்சி பிரமுகர்கள் உதவியாக இருந்தார்கள்.

இக் கடத்தல்கள் முற்றிவிட்ட நிலையில் வீரப்பனைப் பிடிக்கச் சென்ற அதிகாரிகள், காவலர்கள் பலர் வீரப்பனால் சுட்டுக் கொல்லப்பட்டனர். வீரப்பனுக்கு எதிராக காவல் துறைக்கு உதவச் சென்ற பொதுமக்கள் சிலரும் வீரப்பனால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தமிழக, கர்நாடக காவல்துறையினர் குட்டிக் கர்ணம் போட்டும் வீரப்பனைப் பிடிக்க முடியவில்லை. மலைப் பகுதிகளில் வாழும் அப்பாவி மக்களைக் காவல் துறையினர் தேடுதல் வேட்டை என்ற பெயரில் சுட்டுக் கொன்றனர். பாலியல் வன்முறை செய்தனர். சித்திரவதை செய்தனர். கொடுஞ் சிறைக் கூடங்களில் அடைத்தனர். இதுதான் மிச்சம்.

இப்பொழுது கன்னடக் கதாநாயகர் ராஜ்குமாரை வீரப்பன் குழுவினர் கடத்தி வைத்துள்ளனர். திரைப்படமாக இருந்திருந்தால் இந்த ராஜ்குமார் ஒரு வீரப்பனை அல்ல, நூறு வீரப்பன்களை அடித்து வீழ்த்தி வெற்றி மாலையோடு வெளியே வந்து இருப்பார். நடிகர் ரஜினிக்காந்த் ராஜ்குமாரை மீட்க காட்டுக்குள் போகத் தயார் என்று அறிவித்தார். போவதற்குத் தடையொன்றுமில்லை என்று காவல்துறைத் தலைமை இயக்குநர் எப்.சி. சர்மா தெரிவித்தார். ஆனால் சூப்பர் ஸ்டார் போகவில்லை. இதே காட்சி திரைப்படமாக இருந்திருந்தால் இந்நேரம் நூறு ராஜ்குமார்களை மீட்டு வந்திருப்பார் ரஜினிகாந்த்.

காவிரி நீர் உரிமை, பெங்களூரில் திருவள்ளுவர் சிலைக்கு நேர்ந்த அவமதிப்பு, கர்நாடகத் தடாச் சிறையில் துன்புறும் அப்பாவித் தமிழர்களின் விடுதலை, கர்நாடகத்தில் இலட்சக்கணக்கில் வாழும் தமிழர்களுக்கு வசதியாக தமிழை அங்கு இரண்டாவது ஆட்சி மொழியாக்குவது என்பன போன்ற தமிழர் உரிமைக் கோரிக்கைகளை வீரப்பன் நிபந்தனையாகப் போட்டுள்ளார். சந்தன வீரப்பன் தான்

அனைத்துத் தொடர்புகளுக்கும்

**பெ. மணியரசன்**

ஆசிரியர்,

53 அ சமீன்தார் குடியிருப்பு,

புது ஆற்றுச் சாலை

தஞ்சாவூர் - 613 001.

தொ.பே. : 32994

அச்சிட்டோர்

**நீட் பிரிண்டர்ஸ்**

சென்னை - 600 003.

வடிவமைப்பு

**காவிரி கணிப்பொறி அச்சு,**

தஞ்சாவூர் - 613 001.

தொ.பே. : 70018

e-mail: kannotam@md5.vsnl.net.in



படிப்பகம்

www.padippakam.com

இக்கோரிக்கைகளை முன் வைக்க வேண்டும் என்ற நிலை உள்ளது.

சந்தன வீரப்பனை விட சட்ட விரோத காரியங்களில் கூடுதலாக ஈடுபடும் கொடியவர்கள் அமைச்சரவையில், சட்டப் பேரவையில், அரசியல் மேடைகளில் கொலுவிருக்கிறார்கள். இந்நிலையில் வீரப்பனின் சாகசங்கள் மக்களின் கவனத்தை ஈர்க்கின்றன.

தமிழக, கர்நாடக அரசுகள் வீரப்பனுடன் தூதர் மூலம் பேச்சுவார்த்தை நடத்தி உடன்பாடு கண்டு ராஜ்குமாரை மீட்க எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெற வேண்டும் என்பதில் நமக்கு மாற்றுக் கருத்துகள் இல்லை.

ஆனால் இதில் தமிழக உரிமைகளையும், மரியாதைகளையும் பலியிடுவதை நாம் எதிர்க்கிறோம். வீரப்பன் முன் வைத்த கோரிக்கைகளைப் பற்றிக் கூறும் போது பெங்களூரில் திருவள்ளுவர் சிலையும் சென்னையில் கன்னடக் கவிஞர் சர்வக்ஞர் சிலையும் திறக்கப்படும் என்று தமிழக முதல்வர் கருணாநிதியும் கர்நாடக முதல்வர் எஸ்.எம். கிருஷ்ணாவும் கூறுகின்றனர்.

திறப்புவிழா வைக்கப்பட்டு கன்னட வெறியர்கள் தடுத்ததன் பேரில் பத்தாண்டுகளாக பெங்களூர் அல்சூர் ஏரிக்கரையில் முக்காடு போட்டு மூடப்பட்டு திருவள்ளுவர் சிலை நின்று கொண்டுள்ளது. கன்னடக் கவிஞர் சர்வக்ஞர் சிலை சென்னையில் நிறுவப்படவேண்டும் என்ற கோரிக்கையும் எழவில்லை. அதை இங்கு யாரும் தடுக்கவுமில்லை. சர்வக்ஞர் சிலை தயார் நிலையிலும் இல்லை.

பத்தாண்டுகளாக திறக்கப்படாமல் வைக்கப்பட்டிருக்கும் திருவள்ளுவர் சிலையைத் திறக்க வேண்டுமானால் சென்னையில் சர்வக்ஞர் சிலையைத் திறக்க வேண்டும் என்று கர்நாடகம் நிபந்தனை போடுவது திருவள்ளுவரையும் தமிழர்களையும் அவமதிப்பதாக உள்ளது. இந்த நிபந்தனையைக் கலைஞர் கருணாநிதி ஏற்றுக் கொண்டது இழுக்காகும்.

பண்டமாற்று அடிப்படையில் பெங்களூரில் திருவள்ளுவர் சிலையைத் திறக்கத் தேவையில்லை. திருவள்ளுவருக்குச் செய்த இழிவைத் துடைக்கும் வகையில் முதலில் பெங்களூரில் வள்ளுவப் பேராசான் சிலையைத் திறக்கட்டும். அதன் பிறகு சர்வக்ஞர் சிலை திறப்பது பற்றி பரிசீலிக்கலாம்.

அடுத்து, நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்புப்படி காவிரி நீர் திறந்துவிடுவதில் பிரச்சினை ஏதும் இருந்தால் பிரதமர் தலைமையில் உள்ள ஆணையம் தகுந்த முடிவு எடுக்கும் என்று தமிழக முதல்வரும் சேர்ந்து கொண்டு கோஷ்டி கானம் பாடுவது கறிக்குதவாத ஏட்டுச்சுரைக்காயைத் திரும்பவும் சந்தைக்குக் கொண்டு வருவதாகும். "பிரச்சினைகள் இருந்தால்" என்று பேசுவதே சரியில்லை. பிரச்சினைகள் இருக்கின்றன. ஜூலை முடிய விட வேண்டிய தண்ணீரைக் கர்நாடகம் விடவில்லை. கருணாநிதி சொல்லக் கூடிய பிரதமர் தலைமையிலான ஆணையம் என்ன செய்து கொண்டுள்ளது?

நடிகர் ராஜ்குமாரை மீட்க வேண்டும் என்ற உணர்ச்சிப் பூர்வமான நெருக்கடி நேரத்தில் தமிழர்களைப் பலியிடுவதை பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது. பண்டமாற்று அடிப்படையில் சென்னையில் சர்வக்ஞர் சிலை திறந்தால் தமிழர்கள் மறியல் போராட்டம் நடத்தவேண்டி வரும்.

இச் சூழலில் கர்நாடக முதல்வர் கர்நாடகத்தில் வாழும் இலட்சக்கணக்கான தமிழர்களின் பாதுகாப்பைக் கருதி, வீரப்பன் உடன்பாட்டுக்கு வரவேண்டும் என்று கூறியுள்ளார். வீரப்பன் நடிகர் ராஜ்குமாருடன் நான்கு பேரைப் பிணைக் கைதிகளாக வைத்திருக்கிறார் என்றால் நாங்கள் இலட்சக்கணக்கான தமிழர்களைப் பிணைக் கைதிகளாகக் கர்நாடகத்தில் வைத்திருக்கிறோம் என்று மிரட்டுவதாகும் இது. ராஜ்குமார் ரசிகர்களும் மிக மோசமான கன்னட வெறியர்கள்

**கர்நாடகத் தமிழர்கள் மீது கன்னட வெறியர்களின் தாக்குதல் தொடர்ந்தால் தமிழ்நாட்டில் அது எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் என்று எச்சரிக்கிறோம்.**

10.08.2000

## ஏன் வேண்டும் இன்பத் தமிழீழகம்

உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கத்தின் சார்பில் 22.07.2000 அன்று திருச்சி சுமங்கலி அரங்கத்தில் ஏன் வேண்டும் இன்பத் தமிழீழம் என்னும் பொருளில் எழுச்சியான மாநாடு நடைபெற்றது.

காலையில் நடைபெற்ற கருத்தரங்கில் தோழர்கள் இராசேந்திர சோழன், விடுதலை ராஜேந்திரன், க. பரந்தாமன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். மாலையில் நடைபெற்ற அரசியல் அரங்கிற்கு திரு மெல்கியோர் (தலைவர் உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கம்) தலைமையில் திருவாளர்கள் பழ. நெடுமாறன், பெ. மணியரசன், ஆனூர் ஜெகதீசன், சுப.வீரபாண்டியன், கவிஞர் அறிவுமதி, சேவியர் அருள் ராசு, கோவை இராம.கிருட்டிணன் உட்பட பலர் உரையாற்றினர்.

உ.ம.வி.இ. கலைக்குழுவினரின் எழுச்சி இசைப்பாடல்களும், கவிஞர் இன்குலாப் எழுதிய அவ்வை நாடகமும் மாநாட்டிற்கு மேலும் உணர்ச்சியூட்டுவதாக அமைந்தன.



படிப்பகம்

www.padippakam.com

# எதிர்ப்பும் எதிர்பார்ப்பும்

(ம.தி.மு.க. மாநாடு பற்றிய திறனாய்வு)

பட்டியூர்பாவலர்

ஈரோட்டில் ஜூலை 1,2 (2000) ஆகிய நாட்களில் ம.தி.மு.க. மாவட்ட மாநாடு ஒரு முக்கியமான கட்டத்தில் எதிர்பார்ப்புகளுக்கும் எதிர்ப்புகளுக்கும் இடையே நடந்தது.

இலட்சக் கணக்கான தமிழ் மக்கள் குறிப்பாக இளைஞர்கள் இம்மாநாட்டுப் பேரணியில் கலந்து கொண்டது அக்கட்சியின் சக்தியை வெளிப்படுத்துவதாக இருந்தது. தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் படத்தை சட்டையில் குத்திக் கொண்டும் நெற்றியில் கட்டிக் கொண்டும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக முழக்கங்கள் எழுப்பிக்கொண்டும் பேரணியில் அவர்கள் சென்றனர்.

விடுதலைப் புலிகளின் சீருடையில் சிலர் வந்தனர். தினமலர், இந்து பத்திரிகைகளின் நெஞ்சு வெடிக்கும் அளவிற்கு பிரபாகரன் படங்கள் விற்பனையாகியுள்ளன.

இச்செய்திகள், களத்தில் போராடிக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளுக்கு ஊக்கமளிப்பதாகவும், சிங்களப் பேரினவாதிகளின் ஆக்கிரமிப்புப் போரால் உலகெங்கும் சிதறிக் கிடக்கும் ஈழத் தமிழர்களுக்கு நம்பிக்கையூட்டுவதாகவும் அமைந்தன.

ம.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் வைகோ, ஈழத் தமிழர்களுக்கு நெடுங்காலமாக உதவி வருபவர் என்ற முறையிலும் இன்று பா.ஜ.க. கூட்டணி அரசில் உறுப்பு வகிக்கின்ற அவர் பிரதமர், உள்துறை அமைச்சர் போன்றோரை அடிக்கடி சந்தித்து, ஈழத் தமிழர்க்காதரவாக வாதாடி வருபவர் என்ற முறையிலும் அவரது கட்சி நடத்தும் மாநாடு தமிழ் இன உணர்வாளர்களிடையே நல்ல எதிர்பார்ப்புகளை உருவாக்குவது இயல்பே.

அதே வேளை தமிழ் இனத் துரோகிகளும் இந்திய தேசிய வெறியர்களும் இம்மாநாட்டை எதிர்ப்பதும் இயல்பே.

எதிர்ப்புகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் இடையே நடந்த ஈரோட்டு மாநாடு ஏற்படுத்திய விளைவுகள் குறித்துத் திறனாய்வு செய்வது எதிர்காலப் பணிகளுக்கு உதவியாக இருக்கும்.

விடுதலைப்புலிகள் ஆனையிறவு முகாமைக் கைப்பற்றிய பிறகு, ஈழ விடுதலைப் போரில் புதிய திருப்பு முனை ஏற்பட்டது. அடுத்து யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றி விடுவார்கள் என்ற நிலையில் உலகம், விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது பொருள் பொதிந்த பார்வையைச் செலுத்தியது, புறக்கணிக்கமுடியாத சக்தி அது என்பதைப் புரிந்து கொண்டது.

இந்தச் சாதகமான போக்கு தொடங்கினாலும் மறுபக்கம் புதிய ஆபத்தும் தோன்றியது. தனி ஈழம் அமைவதை விரும்பாத இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் விடுதலைப் புலிகளுக்கெதிராக படையணிகளையோ அல்லது படைக் கருவிகளையோ, இலங்கை அரசுக்கு ஆதரவாக அனுப்பி வைக்கக்கூடிய அபாய அறிகுறிகள் தோன்றின.

விடுதலைப்புலிகளுக்கெதிராக இந்திய அரசு படை அல்லது படைக் கருவிகளை இலங்கைக்கு அனுப்பக்கூடாது என்று தமிழ்நாட்டில் முதல் முதலாக தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி அறிக்கை வெளியிட்டது. (தினமணி 2.5.2000 சென்னைப் பதிப்பு)

திருவாளர்கள் பழ. நெடுமாறன், வைகோ, டாக்டர் இராமதாஸ், டாக்டர் கிருஷ்ணசாமி போன்ற தலைவர்கள் இலங்கைக்கு இந்தியப்படையை அனுப்பக்கூடாது என்று அறிக்கை வெளியிட்டனர். வைகோவும் டாக்டர் இராமதாசும் பிரதமரைச் சந்தித்து, இலங்கைக்குப் படை அனுப்பக்கூடாது என்று கோரினர். புதிய தமிழகம் சென்னையில் இலங்கைத்

ம.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் வைகோ, ஈழத் தமிழர்களுக்கு நெடுங்காலமாக உதவி வருபவர் என்ற முறையிலும் இன்று பா.ஜ.க. கூட்டணி அரசில் உறுப்பு வகிக்கின்ற அவர், பிரதமர், உள்துறை அமைச்சர் போன்றோரை அடிக்கடி சந்தித்து, ஈழத் தமிழர்க்காதரவாக வாதாடி வருபவர் என்ற முறையிலும் அவரது கட்சி நடத்தும் மாநாடு தமிழ் இன உணர்வாளர்களிடையே நல்ல எதிர்பார்ப்புகளை உருவாக்குவது இயல்பே.



படிப்பகம்

www.padippakam.com

துணைத் தூதரகம் முன் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது. பா.ம.க.வும் புதிய தமிழகமும் தனித்தனியே தமிழக மெங்கும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகப் பட்டினிப் போராட்டம் நடத்தின.

இந்தச் சூழ்நிலையில், ஈழத்தமிழர்களுக்காதரவாக ஜூன் 5 ஆம் நாள் சென்னையில் மாபெரும் பேரணி நடத்தப்போவதாக வைகோ.. அறிவித்தார். தமிழ் மாநிலக் காங்கிரஸ், காங்கிரஸ் கட்சி உள்ளிட்ட ராஜீவ் காந்தி குடும்ப விசுவாசிகளும் மற்றும் சில இந்திய தேசிய வெறி சக்திகளும் ம.தி.மு.கவின் ஈழத் தமிழர் ஆதரவுப் பேரணிக்கு அனுமதி கொடுக்கக் கூடாது என்று தமிழக முதலமைச்சர்க்கு நிர்ப்பந்தம் கொடுத்தன.



கழுவிய மீனில் நழுவிய மீனாகச் செயல்படும் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தது பிறந்தநாள் வேண்டுகோளாக, இப்பேரணியை நடத்த வேண்டாம் என்று வைகோவைக் கேட்டுக் கொண்டார். ம.தி.மு.கவும் முதல்வரின் வேண்டுகோளை ஏற்று, பேரணியை ரத்துச் செய்தது.

ஈரோட்டில் ஜூலை 1,2 நாட்களில் நடைபெறும் தமிழர் எழுச்சி மாநாடு ஈழத் தமிழர்களின் துன்ப துயரங்களை வெளிப்படுத்துவதாகவும், இலங்கை இனச்சிக்கலுக்கு தனி ஈழம் தான் சரியான தீர்வு எனக் கூறுவதாகவும் இருக்கும் என்று வை.கோ. சூசகமாக அறிவித்தார். ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு என்பது தான் தமிழர் எழுச்சி மாநாடு என்று தந்திரமாகப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது என்று புரிந்து கொள்ளப்பட்டது. தனி ஈழத் தீர்வைப் பிரகடனப்படுத்தும் சுவரெழுத்துகள் ம.தி.மு.க. வினரால் ஈரோட்டில் எழுதப்பட்டன.

அம்மாநாட்டிற்கு அத்வானி, கருணாநிதி உள்ளிட்ட கூட்டணித் தலைவர்களையெல்லாம் அழைத்திருந்தார் வைகோ. தமிழினத் துரோக சக்திகளும் பார்ப்பனிய ஏடுகளும் இம்மாநாட்டைத் தடை செய்ய வேண்டும் என்று கூக்குரல் எழுப்பின. இந்திய உள்துறை அமைச்சர் அத்வானியும் முதலமைச்சர் கருணாநிதியும் இம்மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என்று எதிர்ப்புக் குரல் எழுப்பின.

நெருக்குதல் அதிகமானவுடன், அத்வானி, கலைஞர் போன்ற தலைவர்கள் வந்தால் போதும் என்ற நிலைக்கு ஆளாகி, மாநாட்டின் தலைப்பை மாற்றிக் கொண்டது ம.தி.மு.க. தமிழர் எழுச்சி மாநாடு, தமிழக எழுச்சி மாநாடாக மாறியது.

இருந்தும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஈ.வி.கே.எஸ் இளங்கோவன் தலைமையில் அத்வானிக்கு கருப்புக் கொடி காட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ம.தி.மு.க. மேலும் கீழே இறங்கி, தனி ஈழம் தான் சரியான தீர்வு என்று தீர்மானம் போடுவதில்லை என்ற முடிவுக்கு வந்தது.

மாநாட்டில் பேசிய கலைஞர் கருணாநிதி ஈழச்சிக்கல் குறித்து எதுவும் குறிப்பிடவில்லை. பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர்ந்ததற்கான நியாயங்களை, வாஜ்பாயியின் மேன்மைகளை, தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பிரகடன வாசகங்களை விளக்கி, வை.கோ.வைப் பாராட்டி பேச்சை முடித்துக் கொண்டார்.

உள்துறை அமைச்சர் அத்வானி மாநாட்டில் கலந்து கொண்டு பேசினார். இலங்கைச் சிக்கலில் நடுவண் அரசின் கொள்கையை எடுத்துஇயம்பக் கிடைத்த வாய்ப்பு என்று சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்து விட்டு வந்த அத்வானி, அதே போல் பேசினார்.

"அருகில் இருக்கும் நட்பு நாடான இலங்கையில் பிரிவினைவாதத்தை இந்தியாவிலிருந்து யாரும் ஊக்குவிக்கக் கூடாது"

"தனது ஒற்றுமையையும் இறையாண்மையையும் காப்பாற்ற இந்தியா பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் போது பக்கத்து நாட்டில் பிரிவினை வாதத்தை ஊக்கப்படுத்தும் வகையில் எதையும் செய்வது அறிவுப் பூர்வமானதல்ல."

இலங்கைத் தமிழர்களின் துயரங்கள் களையப்பட இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எல்.கணேசன் கேட்டுக்கொண்டதைச் சுட்டிக் காட்டி, "எப்பொழுதெல்லாம் இந்திய வம்சாவழியினர் பாதிக்கப்படுகிறார்களோ, அப்பொழுதெல்லாம் இந்தியா ராஜதந்திர அழுத்தங்களை செலுத்தும்" என்று பதிலளித்தார். ஈழத்தமிழர்கள் இந்திய வம்சாவழியினரா? இல்லையே!

"இந்திய அமைதிப்படை வழியில் இப்பொழுது நாங்கள் செல்லமாட்டோம்" என்றார்.

ஆக, ம.தி.மு.க. மாநாட்டை இந்திய அரசின் இலங்கைக் கொள்கையை - தனி ஈழம் கூடாது என்ற கொள்கையை விளக்கப் பயன்படுத்திக் கொண்டார் அத்வானி.



படிப்பகம்

www.padippakam.com

கொள்கைகளையும் கோரிக்கைகளையும் தங்கள் உரையில் எழுப்ப முடியாத இம்மாநாட்டை ம.தி.மு.க.வினர் ஏன் நடத்தினார்கள்?
நாடாளுமன்றத்தேர்தலுக்கு முன் காஞ்சியில் மாநில சுயாட்சி மாநாடு, வரும் சட்டப் பேரவைத் தேர்தலுக்கு முன்னால் ஈரோட்டில் தமிழக எழுச்சி மாநாடு என்ற கணக்கிலா?
கூட்டணித் தலைவர்களுக்குத் தங்கள் பலத்தைக் காட்டவா?

பா.ஜ.க. தலைவர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் யாரோடும் கூட்டுச் சேர்வார்கள், எங்கும் போவார்கள், இனிப்பாகவும் பேசுவார்கள், ஆனால் அவர்கள் நிலைபாட்டிலிருந்து இறங்கிவரமாட்டார்கள், தங்கள் நிலையை அழுத்தம் திருத்தமாகக் குழப்பமில்லாமல் கூறி விடுவார்கள். அண்மையில் அத்வானி இஸ்ரேலுக்குச் சென்று அதன் பிரதமர் பராக்கையும் சந்தித்தார், பாலஸ்தீனம் சென்று யாசர் அராபத்தையும் சந்தித்தார்.

ஆனால், யாசர் அராபத்தின் பாலஸ்தீன விடுதலை அமைப்பு (P.L.O.) ஒரு பயங்கரவாத அமைப்பு என்ற எண்ணத்தை அத்வானி மாற்றிக் கொள்ளவில்லை. ம.தி.மு.க. மாநாட்டில் பேசும்போது அவர் குறிப்பிட்டார்.

"வெளிநாடுகள் சென்றிருந்தபோது இஸ்ரேல், இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஊடுருவல், உள்நாட்டுக் கலகம், எல்லை கடந்து வரும் பயங்கரவாதம் போன்றவற்றை எப்படிச் சமாளிக்கின்றன என்பதை அறிந்து வந்தேன்."

இஸ்ரேல், பாலஸ்தீனப் பயங்கரவாதத்தை எவ்வாறு சமாளிக்கிறது என்பதை அறிந்து வந்ததாகப் பகிரங்கமாகக் கூறுகிறார். இதுதான் பா.ஜ.க்.வின் ராஜதந்திரம்.

அத்வானி, படிகாரம் போட்டுத்தெளியவைத்த நீர் போல பளிச்சென்று தனி ஈழத்திற்கு எதிராக ம.தி.மு.க. மாநாட்டில் பேசினார். ஆனால் இலட்சக்கணக்கான தமிழ் மக்களை குறிப்பாகத் தனி ஈழத்திற்கு ஆதரவான மக்களைத் திரட்டி வைத்த ம.தி.மு.க. தலைவர் யாரும் வைகோ உட்பட தனி ஈழத்தை நேரடியாக ஆதரித்துப் பேசவில்லை.

பா.ம.க. நிறுவனர் டாக்டர் இராமதாஸ் ஒருவர் மட்டுமே தனி ஈழத்தை ஆதரித்துப் பகிரங்கமாக அம்மாநாட்டில் பேசினார். அவரும் தனி ஈழம் அமைந்தால், இந்தியாவில் தனித்தமிழ் நாடு கேட்க மாட்டோம் என்று கலைஞர், வைகோ. நான் மூவரும் எழுதிக் கையெழுத்துப் போட்டுத் தருகிறோம் என்று மாநாட்டில் பேசியது தில்லி விசுவாசத்தைப் புதுப்பித்துக் கொள்வதாக அமைந்தது.

தமிழக எழுச்சி மாநாட்டுத் தொடக்கவுரை நிகழ்த்திய பேரா.சபாபதி மோகனும் நிறைவுரை ஆற்றிய வைகோ.வும் மற்ற சில பேச்சாளர்களும் சாதி மறுப்பு பற்றி அழுத்தம் கொடுத்துப் பேசினர். அது பயனுள்ள பேச்சு. மற்றபடி தமிழக எழுச்சிக்கான திட்டங்கள் எதையும் வைகோ தமது நிறைவுரையில் வெளியிடவில்லை. (தமிழகத் தேவைகள் குறித்துத் தீர்மானங்கள் போடப்பட்டுள்ளன. அவற்றைத் தனியே பார்க்கலாம்.)

ஈழத் தமிழர்கள் சிங்கள இனவெறியர்களால் படும் துன்பங்களை உருக்கமாகவும் ஆவேசமாகவும் எடுத்துரைத்த வைகோ தனி ஈழம்தான் தீர்வு என்ற தமது நிலைபாட்டை வெளிப்படுத்தவில்லை. தனி ஈழம் கூடாது என்ற எதிர்க்கருத்து அரங்கேறுகிறது. தனி ஈழம் வேண்டும் என்ற இவர்கள் கருத்து தொண்டைக்குழிக்குள் சிக்கிக் கொள்கிறது.

தனி ஈழம் என்ற தங்கள் கொள்கையைச் சொல்லாததற்கு வைகோ பின்வரும் காரணங்களைத் தமது பேச்சில் குறிப்பிடுகிறார்.

"பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் வருகிறார்கள். எங்கள் கொள்கைகளிலே நாங்கள் உறுதியாக இருப்போம். எங்கள் இலட்சியங்களில் நாங்கள் பின்வாங்க மாட்டோம். இந்த மாநாடு more or less a national conclave (கிட்டதட்ட ஒரு தேசியக் கூட்டரங்கு) பாரதீய ஜனதாக் கட்சி உட்பட பல்வேறு கட்சிகளின் அகில இந்தியத் தலைவர்கள் கலந்து கொள்கிற ஒரு **பொது இடம்** (அழுத்தம் நமது). இங்கு நம் கருத்தை மட்டுமே திணிப்பது சரியல்ல. எங்களுக்கென்று மேடை இருக்கிறது".

தமிழகம் தழுவிய மாநில மாநாடாக நடந்த ஈரோட்டு மாவட்ட ம.தி.மு.க. மாநாட்டைப் பொது இடம் என்றும் எங்கள் கொள்கையைச் சொல்வதற்கு வேறு இடம் இருக்கிறது என்றும் வைகோ. கூறுவது வேடிக்கையாக இருக்கிறது. ஒரு கட்சியின் மாநாடு என்பது அக்கட்சியின் நோக்கங்களைக் கொள்கைகளை அரங்கேற்றும் மேடையாகும். கொள்கைகளைச் சொல்ல முடியாவிட்டால் கோரிக்கைகளையாவது சொல்லலாம் அல்லவா?

கொள்கைகளையும் கோரிக்கைகளையும் தங்கள் உரையில் எழுப்ப முடியாத இம்மாநாட்டை ம.தி.மு.க.வினர் ஏன் நடத்தினார்கள்? நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் காஞ்சியில் மாநில சுயாட்சி மாநாடு, வரும் சட்டப் பேரவைத் தேர்தலுக்கு முன்னால் ஈரோட்டில் தமிழக எழுச்சி மாநாடு என்ற கணக்கிலா? கூட்டணித் தலைவர்களுக்குத் தங்கள் பலத்தைக் காட்டவா?

இந்தக் கேள்விகளுக்கு வைகோவே பதில் அளிக்கிறார். மாநாட்டு நிறைவுரையை முடிக்கும்போது அவர் கூறுகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

"வரப்போகின்ற தேர்தல் களத்தில் நாட்டை நாசமாக்கியவர்களை நாட்டு மக்களுக்கு அடையாளம் காட்டுவோம். கூட்டணிக்கு வெற்றியைக் குவிப்போம். வாகை சூடுவோம். எனது அன்பிற்குரிய தோழர்களே, சாதி சழக்கற்ற சமுதாயத்தை அமைக்க, அமைதித் தென்றல் வீசிடும் தமிழகத்தை அமைக்கப் பாடுபடுவோம். ஆறரையாண்டு காலத்தில் தமிழகத்தில் துளியளவு வன்முறைக்கும் நாங்கள் இடம் கொடுத்ததில்லை. அமைதித் தென்றல் தமிழகத்தில் வீச வேண்டும் என்கிற உணர்வு கொண்டிருக்கிற இயக்கம். இந்தச் செய்திகளை எட்டுத் திசைகளுக்கும் எடுத்துச் செல்லுங்கள். தமிழகத்தை எழுச்சி பெறச் செய்யுங்கள்."

மேலோங்கி நிற்கும் நோக்கம் தேர்தல் வெற்றி என்று புரிகிறது.

தமிழக எழுச்சி மாநாட்டில் இந்திய தேசிய வாதத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் தான் வைகோ பேசியுள்ளார்.

"ஈழத் தமிழர்கள் பற்றி நாங்கள் பேசினால் எங்கள் தேசப்பற்றைச் சிலர் சந்தேகிக்கிறார்கள். இந்திய நாட்டிற்கு ஆபத்து என்றால் உயிர்கொடுக்க வாடா தம்பி என்றார் அண்ணா 1962 இல் சீனப் படையெடுப்பின்போது. அண்ணாவின் வார்ப்படங்கள் நாங்கள். இந்திய நாட்டிற்கு ஆபத்து என்றால் எங்கள் உயிரைக் கொடுப்பதற்கும் தயாராக இருப்பவர்கள் மறுமலர்ச்சி தி.மு.கழகத் தோழர்கள். இந்திய நாட்டின் ஒற்றுமைக்கு ஒருமைப்பாட்டுக்கு முன்னேற்றத்திற்காகப் பாடுபடுபவர்கள் நாங்கள். இது எங்கள் நாடு. கணிப்பொறி யுகத்திலே தலைச் நிமிர்ந்த நிற்கிற நாடு. அமெரிக்காவை விடத் தலைசிறந்த ஜனநாயக நாடு. அற்புதமான நாடு எங்கள் இந்தியா. இதற்காக ஏந்த தியாகத்தையும் நாங்கள் செய்வோம்."

உண்மைதான் இந்திய தேசிய வாதத்திற்காக, வைகோ தமது கொள்கைகளைத் தியாகம் செய்து விட்டார். தனி ஈழக் கோரிக்கைத் தீர்மானத்தையும் தியாகம் செய்து விட்டார்.

இலங்கைப் பிரச்சினை என்ற தலைப்பில் நிறைவேற்றப்பட்ட மூன்றாவது தீர்மானம் இலங்கையின் இனச்சிக்கல் ஈழத் தமிழர்க்கேற்பட்ட இன்னல்களை எல்லாம் விவரித்து விட்டு இந்திய அரசுக்கு நன்றி தெரிவித்து முடிகிறது. முடிவு வாக்கியம் வருமாறு.

"இலங்கைத் தீவில் நிகழ்ந்து வருகின்ற துயரமான இந்தப் பிரச்சினையில் சரியான நிலைப்பாட்டை மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கும் இந்திய அரசுக்கும் இம்மாநாடு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது".

தனி ஈழம் அமையக்கூடாது என்ற இந்திய அரசின் நிலைப்பாடுதான் சரியான நிலைப்பாடா? ரூ450 கோடி இந்திய அரசு இலங்கை அரசுக்கு இத்தருணத்தில் கொடுப்பதுதான் சரியான நிலைப்பாடா?

இலங்கைக்குப் படையோ, படைக்கருவியோ அனுப்ப மறுத்து விட்டது இந்திய அரசு. அதற்கு நன்றி தெரிவிப்பது தவறா என்று கேட்கக் கூடும். ஆணைஇறவு வீழ்ச்சிக்குப் பிறகு இலங்கைப் படைத் தளபதிகள், அமைச்சர்கள் அடிக்கடி வந்து ராணுவ ஆலோசரனை பெறுவது, இலங்கைக்கு மனித நேய உதவிகள் செய்யத் தயார் என்று பிரதமரும் வெளியுறவு அமைச்சரும் அடிக்கடி கூறிவருவது, தனி ஈழத்தை ஒருபோதும் அங்கீகரிக்க மாட்டோம் என்று அடித்துச் சொல்வது, அயல்துறை அமைச்சர் இந்த நேரத்தில் கொழும்பு சென்று குசலம் விசாரித்தது, 450 கோடி ரூபாய் நிதி உதவி அறிவித்தது போன்றவை எல்லாம் வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைக்க சந்திரிகாவுக்குத் தடி எடுத்துக் கொடுக்கும் செயல்கள்தானே!

படையோ படைக்கருவியோ, அனுப்பமாட்டோம் என்று இந்திய அரசு சொன்னதை வரவேற்கலாம். ஆனால் அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன என்பதையும் மக்களுக்குப் புரிய வைக்கலாம்.

ராஜீவ் காந்தியின் அரைவேக்காட்டு அணுகு முறையால் இந்தியப் படை (IPKF) அங்கே போனது. அதனால் ஈழத்திற்கும் இந்தியாவிற்கும் ஏற்பட்ட பெருநாசம். காஷ்மீரிலும் வடகிழக்கிலும் போர் நடத்திக் கொண்டிருக்கும்போது புதிதாக தெற்கே ஒரு போர் முனையைத் திறப்பது இந்திய நலனுக்கு உகந்ததல்ல என்ற புரிதல், ஈழத் தமிழர்களுக்கெதிராகப் படை அனுப்பினால், தமிழகத் தமிழர்களின் வெறுப்பைச் சந்திக்க வேண்டிவருமோ என்ற ஐயம் அச்சம், பாதுகாப்பு அமைச்சராயிருப்பவரின் விருப்பத்திற்கெதிராக் படை அனுப்ப முடியாத நிலை, கூட்டணியிலேயே இருக்கும் தலைவர்களான வைகோவும் டாக்டர் இராம்தாசும் படை அனுப்புவதை எதிர்க்கும் சூழல் என பல காரணங்கள் இருக்கின்றன.

இவற்றையெல்லாம் மூடி மறைத்து விட்டு, படை அனுப்பாததற்காக இந்திய அரசுக்கு நன்றி என்று முடிப்பது தொகை எழுதாத காசோலையில் கையெழுத்துப் போடுவது போல் அல்லவா இருக்கிறது. வாளெடுத்துச் சமர்புரிவது போல் வார்த்தை அம்பு வீசும் வைகோவுக்கு இது அழகல்லவே!

> உண்மைதான் இந்திய தேசிய வாதத்திற்காக, வைகோ தமது கொள்கைகளைத் தியாகம் செய்து விட்டார். தனி ஈழக் கோரிக்கைத் தீர்மானத்தையும் தியாகம் செய்து விட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

**தி.மு.க. பாணியிலேயே ம.தி.மு.க. செல்வதை அக்கட்சித் தொண்டர்கள் ஏற்க மாட்டார்கள் என்றே கருதுகிறோம். தி.மு.க. பாணி சாகசங்கள் அல்லது சாதுரியங்கள் தமிழ் இனத்திற்கும் தமிழ்மொழிக்கும் பெரிதாக ஏதையும் சாதிக்கவில்லை என்பதையும் ம.தி.மு.க. கணக்கி லெடுத்துக் கொண்டால் அதற்கும். தமிழகத்திற்கும் நல்லது.**

கலைஞர் கருணாநிதியின் சர்க்கஸ் சாகசங்களைத் தானே வைகோவும் செய்கிறார்.

தமிழ்வழிக் கல்வி என்ற பெயரில் பத்தாவது தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதில், ஆங்கிலத்திற்கு மாறாகத் தமிழ் மொழியைப் பயிற்று மொழியாக்க வேண்டும் என்று கோருகிற ஒரு வரி கூட கிடையாது. ஐந்தாம் வகுப்பு வரைத் தமிழ் வழிக்கல்வி தரத் தமிழக அரசுபோட்ட ஆணை செல்லாது என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது குறித்த விமர்சனமோ, கருத்தோ எதுவும் கிடையாது. அவ்வழக்கை உச்ச நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்யவேண்டும் என்ற கோரிக்கையும் கிடையாது. ஜூலை 1,2 தேதிகளில் தமிழக அரசு மேல் முறையீடு செய்வில்லை பிறகுதான் செய்தது.

தமிழ் வழியில் கற்றவர்களுக்கு தமிழக அரசு வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு மற்றும் முன்னுரிமை தரவேண்டும் என்று மட்டும் கூறி அத்தீர்மானம் பட்டும் படாமல் ஒதுங்கிக் கொள்கிறது. ஆங்கில வழியை விரும்புவோரின் வாக்குகள் கிடைக்காதோ என்ற அச்சமா? ஆங்கிலத்தின் மேல் உங்களுக்குள்ள மோகமா? இந்த மலட்டுத் தீர்மானத்திற்கு எது காரணம்?

ம.தி.மு.க. மாநாடு பற்றிக் குறிப்பிடும் போது, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஈ.வி.கே.எஸ் இளங்கோவன், எங்களுக்கே வெற்றி, மாநாட்டில் தனி ஈழத் தீர்மானம் போடவில்லை, அது பற்றியாரும் பேசவில்லை என்றார்.

ஈ.வி.கே.எஸ் இளங்கோவன் தமிழினத் துரோகி; தில்லிச் சேவகர். ஆனால் அவர் குத்திக்கர்ட்டும் நிலையில்தான் ம.தி.மு.க. மாநாடு நடந்துள்ளது.

இலட்சக்கணக்கான தமிழ்இன உணர்வாளர்களை தனிஈழ ஆதரவாளர்களைத் திரட்டிவிட்டு, ம.தி.மு.க. தலைவர்கள் தில்லியைத் திருப்திப்படுத்துவதிலேயே முழுக்கவனமும் செலுத்தியிருக்கிறார்கள்.

தி.மு.க. பாணியிலேயே ம.தி.மு.க. செல்வதை அக்கட்சித் தொண்டர்கள் ஏற்க மாட்டார்கள் என்றே கருதுகிறோம். தி.மு.க. பாணி சாகசங்கள் அல்லது சாதுரியங்கள் தமிழ் இனத்திற்கும் தமிழ்மொழிக்கும் பெரிதாக ஏதையும் சாதிக்கவில்லை என்பதையும் ம.தி.மு.க. கணக்கிலெடுத்துக் கொண்டால் அதற்கும் தமிழகத்திற்கும் நல்லது. ■

## தணிகைக்கோ விற்கு வீரவணக்கம்



வடக்கெல்லை மீட்புப் போராட்டத் தளபதிகளில் ஒருவரான தணிகைக்கோ ந.அ.ரசீத் அவர்கள் அண்மையில் காலமானது தமிழ்த் தேசிய சக்திகளுக்கு பேரிழப்பாகும். மங்கலங்கிழார் அவர்களைத் தலைவராக ஏற்று வடக்கெல்லைப் போராட்டத்தில் களம் கண்டவர் ரசீத்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் தம்மை இணைத்துக் கொண்ட அவர், தி.மு.க. நடத்திய போராட்டங்களிலும், கட்சிக்கு அப்பாற்பட்டு தமிழ்த் தேசியப் போராட்டங்களிலும் பங்கு கொண்டார்.

முதல்வர் பக்தவத்சலத்தின் ஆங்கில ஆதரவுப் போக்கை எதிர்த்து அவருக்கு கருப்பு கொடி காட்டியதற்காக ஒரு முறையும், மாநில உரிமைகளை தில்லியில் அடகுவைக்கும் பக்தவத்சலத்திற்கு கருப்புக் கொடி காட்டியபோது மறுமுறையும் சிறையில் அடைக்கப்பட்டார். அப்போதைய தில்லி அமைச்சர் திவாகர் சென்னை இந்திப் பிரச்சார சபைக்கு வந்திருந்தபோது அவருக்கெதிராக, "வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது" என்று முழக்கமிட்டு கருப்புக் கொடி காட்டினார் தணிகைக்கோ. அப்பொழுதும் சிறையில் அடைக்கப்பட்டார். இவ்வாறாக தமிழ் தமிழர் உரிமைக்காகப் போராட்டங்கள் நடத்தித் தணிகைக்கோ 19 முறை சிறை சென்றுள்ளார். அவர் உடல்நலமின்றி சென்னை பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது, தோழர்கள் பெ.மணியரசன், இரா.பாலசுப்பிரமணியன் ஆகியோர் சென்று பார்த்து நலம் விசாரித்து வந்தனர்.

தணிகைக்கோவிற்கு தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சி இறுதி வணக்கம் செலுத்திக் கொள்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# காசுமீர் பேச்சுவார்த்தை

## - ஒரு நோக்கு

பாரதிய ஜனதாவின் இரட்டை நாக்கு அணுகுமுறைக்கு அண்மைக்கால எடுத்துக்காட்டாக காஷ்மீர் சிக்கலை அது கையாளும் விதம் உள்ளது. வழக்கமாக அத்வானி தீவிர இந்துத்துவாவாதியாகவும், வாஜ்பாய் மிதவாத அணுகுமுறை உள்ளவராகவும் முகம் காட்டுவார்கள். ஆனால், இந்த இரண்டு பேருமே முன்னே ஒன்றும் பின்னே வேறொன்றும் பேசி தமது மோசடித் தன்மைகளை வெளிப்படுத்திக் கொண்டனர்.

ஜம்மு காஷ்மீர் சட்டமன்றத்தில் சுயாட்சித் தீர்மானம் ஜூன் 26ல் நிறைவேற்றப்பட்டது. இது பற்றி ஜூன் 27 அன்று பேசிய இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி இந்திய அரசு இந்த சுயாட்சித் தீர்மானம் குறித்து பரிசிலித்து முடிவெடுக்கும். நாடாளுமன்றம்தான் இதுபற்றி இறுதி முடிவெடுக்க வேண்டும் என்றார். எல்லா மாநிலங்களும் இதுபோல் கோருவதற்கு காஷ்மீர் தீர்மானம் வழிவகுத்து விடாதா என்று செய்தியாளர்கள் கேட்டபோது அவ்வாறு நிகழும் என்று நான் நினைக்கவில்லை என்றார் அத்வானி.



தமது வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு இந்தியா திரும்பும் வழியில் பிரதமர் வாஜ்பாய் ஜூன் 30 அன்று விமானத்தில் பேட்டியளித்தார். அது தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பானது. அப்பேட்டியில் ஜம்மு காஷ்மீர் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சுயாட்சித் தீர்மானம் அரசமைப்பு சட்டத்திற்கு உட்பட்டதுதான் என்றார் வாஜ்பாய்.

ஆனால் ஆர்.எஸ்.எஸ் தலைவர் சுதர்சனம் வானத்திற்கும், பூமிக்கும் எகிறிக்குதித்தார். காஷ்மீர் சுயாட்சித் தீர்மானத்தைப் பரிசீலிக்கவே கூடாது. இத் தீர்மானம் நிறைவேற்றிய ஃபரூக் அப்துல்லா ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று கூக்குரலிட்டார். இத்தீர்மானம் நாட்டைச் சிதறடித்து விடும் என்று பா.ஜ.க. தலைவர் குஷபாவ் தாக்கரே அபாயச்சங்கு ஊதினார்.

இந்தப் பின்னணியில் வாஜ்பாயின் விமான பேட்டி குறித்து பிரதமர் அலுவலகம் ஒரு 'விளக்க அறிக்கையை' ஜூலை 2 அன்று வெளியிட்டது. ஜம்மு காஷ்மீர் சட்டமன்றத்தின் சுயாட்சித் தீர்மானம் அரசமைப்பு சட்டத்திற்கு உட்பட்டதென்று பிரதமர் கூறவில்லை என்றும், இத்தீர்மானம் பற்றி அரசமைப்பு சட்டத்திற்குட்பட்டு தீர்மானிக்கப்படும் என்றுதான் கூறியதாகவும் இந்த அறிக்கை 'விளக்கம்' அளித்தது.

இதைத் தொடர்ந்து ஜூலை 4 அன்று கூடிய இந்திய அமைச்சரவை ஜம்மு காஷ்மீர் சுயாட்சித் தீர்மானத்தை ஒட்டுமொத்தமாக நிராகரிப்பதாக முடிவெடுத்தது. பாராளுமன்றத்தில் காஷ்மீர் சுயாட்சித் தீர்மானம் குறித்து அரசு ஏந்த விவாதத்தையும் முன் வைக்காது என்று கூறி பல்டி அடித்தார் அத்வானி.

இப்படி முகத்தில் அடித்தாற்போல் காஷ்மீர் தீர்மானத்தை ஒட்டு மொத்தமாக நிராகரித்தது சரியல்ல என்று அகாலிதளமும், இடதுசாரிக் கட்சிகளும் கூறியதற்குப் பிறகு, பா.ஜ.க. கூட்டணியிலிருந்து விலகுவது பற்றி முடிவெடுக்கப்படும் என்று ஃபரூக் அப்துல்லா மிரட்டியதற்குப் பிறகு வாஜ்பாய் மீண்டும் குரலை மாற்றிப் பேசினார். நாங்கள், சுயாட்சித் தீர்மானத்தை ஒட்டுமொத்தமாக நிராகரிக்கவில்லை. ஏற்கவில்லை (not accepted) என்றுதான் கூறினோம். பேச்சுவார்த்தை நடத்தலாம் என்றார்.

ஜூன் 26 அன்று ஜம்மு காஷ்மீர் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானத்தின் சாரம் என்ன? 1953ஆம் ஆண்டுக்கு முன்பு ஜம்மு காஷ்மீர் பெற்றிருந்த அதிகாரங்களை இந்திய அரசு மீள அளிக்க வேண்டும் என்பதே அது. அதாவது படை, வெளியுறவு, தகவல் தொடர்பு தவிர மற்ற அனைத்து அதிகாரங்களும், எஞ்சிய அதிகாரங்களும் ஜம்மு காஷ்மீருக்கு வேண்டும் என்பதே இத்தீர்மானத்தின் சாரம்.

ஏனெனில் ஜம்மு காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்ததற்கும், மற்ற சுதேசி அரசர்களின் அரசுகள் இணைந்ததற்கும்

**கி.வெங்கட்ராமன்**



படிப்பகம்

www.padippakam.com

வேறுபாடு உண்டு. மற்ற அரசப் பிரதேசங்கள் இந்தியாவில் இணைந்து மொழி வழி 'மாநிலங்களில்' இரண்டறக் கலந்து விட்டன. ஆனால் ஜம்மு காஷ்மீர் இணைப்பு என்பது ஒரு சிறப்பு ஒப்பந்தத்தின் வழி ஏற்பட்டதாகும்.

இதனால், இந்திய அரசமைப்பு சட்டம், விதி 370ன் மூலம் ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு நிலையை அளித்தது. தமது அதிகார எல்லைக்குட்பட்டு தமக்கென்று அரசமைப்புச் சட்டம் இயற்றிக் கொள்ளவும் இம் மாநிலத்திற்கு உரிமை அளிக்கப்பட்டது. இணைப்பு பற்றி இறுதி முடிவெடுக்க ஜம்மு காஷ்மீர் மக்களிடம் கருத்து வாக்கெடுப்பு நடத்தப்படும் என்றும் இந்திய அரசு ஏற்றுக் கொண்டிருந்தது.

இந்த பின்னணியில் 1952 ஜுலையில் ஜம்மு காஷ்மீர் பிரதமர் சேக் அப்துல்லாவுக்கும், இந்தியப் பிரதமர் நேருவுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. 1953லிருந்து இது நடைமுறைக்கு வருவதாக இருந்தது. அது ஜம்மு காஷ்மீர் எல்லைக்குட்பட்ட பகுதியில் இந்திய அரசுக்கு படை, வெளியுறவு, தகவல் தொடர்பு ஆகிய மூன்று அதிகாரங்கள் மட்டுமே இருக்கும் என்பதை உறுதி செய்தது. ஜம்மு காஷ்மீரைப் பொருத்தவரை தில்லி உச்சநீதிமன்றம் மேல் முறையீட்டு - உயர்மட்ட நீதிமன்றமாக இருக்காது.

ஆயினும், ஜம்மு காஷ்மீர் அரசமைப்பு வரைவு அவையில் சேக் அப்துல்லா பேசும்போது, ஒப்பந்தப்படி மக்களிடம் கருத்து வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று அவ்வப்போது வலியுறுத்தினார். இது தில்லி அரசுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியது. சேக் அப்துல்லா நேரு ஒப்பந்தத்தை எதிர்த்து ஆர்.எஸ்.எஸ் துணை அமைப்புகள் ஜம்முவில் கிளர்ச்சி செய்தன. இது கலவரமாக மாறியது.

இச்சூழ்நிலையைப் பயன்படுத்தி நேரு அரசு சேக் அப்துல்லா அரசைக் கலைத்தது. 1953 ஆகஸ்ட் 9ஆம் நாள் சேக் அப்துல்லா கைது செய்யப்பட்டு, 15 ஆண்டுகள் எந்த வழக்கும் தொடுக்கப்படாமலேயே சிறைக்குள் அடைக்கப்பட்டார்.

நேரு அரசு காசுமீர் தேசிய மாநாட்டுக் கட்சிக்கு சையத் மீர்காசிம் என்பவரைத் தலைவராக்கி, மிரட்டல், ஆசைவார்த்தை ஆகியவற்றின் மூலம் சட்டமன்றத்திலும், அம் மாநில அரசமைப்பு அவையிலும் மீர்காசிமுக்குப் பெரும்பான்மையை ஏற்படுத்தியது. அவர் முதலமைச்சராக்கப்பட்டார்.

**நேருவும், பிறகு இந்திரா காந்தியும் காசுமீரில் செய்தது மிகப் பெரிய மோசடி என்று தெரிந்திருந்தாலும், எதிர்கட்சிகளும், பத்திரிகைகளும் இதை எதிர்த்து வாய்திறந்ததில்லை. அதிகபட்சம் சில முணு முணுப்புகளோடு சரி. இந்திய தேசியத்தின் பெயரால் இவை நடத்தப்பட்டதால், இந்த மோசடிகளெல்லாம் நாட்டு ஒற்றுமைக்காக நடந்த தேசபக்த நடவடிக்கை என்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.**

இதன்பிறகு காசுமீருக்கு இருந்த அதிகாரங்கள் ஒவ்வொன்றாக பிடுங்கப்பட்டன, இதற்கு மீர்காசிம் மூலமாக ஜம்மு காசுமீர் அரசமைப்பு அவையின் ஒப்புதலும் பெறப்பட்டது.

நேருவும், பிறகு இந்திரா காந்தியும் காசுமீரில் செய்தது மிகப் பெரிய மோசடி என்று தெரிந்திருந்தாலும், எதிர்கட்சிகளும், பத்திரிகைகளும் இதை எதிர்த்து வாய்திறந்ததில்லை. அதிகபட்சம் சில முணு முணுப்புகளோடு சரி. இந்திய தேசியத்தின் பெயரால் இவை நடத்தப்பட்டதால், இந்த மோசடிகளெல்லாம் நாட்டு ஒற்றுமைக்காக நடந்த தேசபக்த நடவடிக்கை என்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

1968ல் விடுதலையான சேக் அப்துல்லா 1971ல் மீண்டும் கைதாகி 4½ ஆண்டுகள் சிறையிலிருந்தார். சுதந்திர இந்தியாவில் மிக நீண்ட காலம் குற்றச்சாட்டு ஏதுமின்றி சிறையில் வாடிய அரசியல் தலைவர் இவர்தான். நீண்ட காலச் சிறைவாசம் ஏற்படுத்திய சோர்வு, காசுமீர் போராட்டத்தை அடுத்தக் கட்டம் எடுத்துச் செல்வதில் இவருக்கு இருந்த இயலாமை, வங்காளதேச விடுதலை இந்திய அரசின் வலிமை குறித்து ஏற்டுத்தியிருந்த பிரமிப்பு எல்லாம் சேர்ந்து சேக் அப்துல்லாவிடம் பெரிய கலக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அந்த சூழ்நிலையில்தான் 1975ல் இந்திரா காந்தியுடன் ஒரு சரணாகதி ஒப்பந்தம் செய்து கொண்டார் சேக் அப்துதுல்லா கிட்டத்தட்ட எல்லா அதிகாரப் பறிப்பையும் ஏற்றுக் கொண்டார். ஆயினும், பின்னர் எந்தக் காலத்திலும் இந்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்ய ஜம்மு காசுமீருக்கு உரிமை உண்டு என்ற நிபந்தனை மட்டுமே இதில் உருப்படியான பகுதி.

இவருக்குப் பிறகு வந்த இவர் மகன் ஃபரூக் அப்துல்லாவோ தில்லியிடம் அடிபணிந்து நடப்பதை ஒரு நடைமுறைக் கோட்பாடாகவே கொண்டிருந்தார். காசுமீருக்கு சிறப்பு நிலை வழங்கும் விதி 370 ஐ அரசமைப்புச் சட்டத்திலிருந்தே நீக்க வேண்டுமென்பதை பா.ஜ.க தனது அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளது.





படிப்பகம்

இந்த பா.ஜ.கவோடு கூட்டணி சேர்ந்து தில்லி அமைச்சரவையில் தமது மகனை இடம் பெறச் செய்திருப்பதே. ஃபரூக் அப்துல்லா எவ்வளவு பெரிய சந்தர்ப்பவாதி என்பதற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

தில்லி இராணுவத் துப்பாக்கிகளின் நிழலில் முதலமைச்சராக இருக்கும் ஃபரூக் அப்துல்லா திடீரென்று காஷ்மீருக்கு சுயாட்சி என்று குரல் கொடுக்கக் காரணம் என்ன?

கார்கில், போருக்குப் பிறகு அமெரிக்க முற்றாதிக்க அரசு காஷ்மீர் சிக்கலில் தீவிரமாகத் தலையிடத் தொடங்கியது. இந்தியாவும், பாக்கிஸ்தானும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று நெருக்குதல் செய்து வந்தது. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கிளிண்டன் இந்தியாவிற்கு வந்தபோது, காஷ்மீர் அமைப்புகளுடன் இந்திய அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று சூசகமாகக் கேட்டுக் கொண்டார்.

இந்தப் பின்னணியில் காஷ்மீரில் ஆயுதமேந்திப் போராடும் போராளி அமைப்புகளின் ஹூரியத் மாநாட்டு தலைவர்கள் பலர் விடுதலை செய்யப்பட்டனர். அவர்களோடு தில்லி அரசு பேச்சுவார்த்தையைத் தொடங்கியது.

ஏற்கெனவே அரசியலில் செல்லாக்காசாகியுள்ள ஃபரூக் அப்துல்லாவுக்கு இது புதுசிக்கலை ஏற்படுத்தியது. ஹூரியத்தோடு தில்லி பேச்சுவார்த்தை நடத்தினால், தமது அரசியல் இருப்பே இருண்டு விடும் என்று ஃபரூக் அஞ்சினார். விரைவில் சட்டமன்றத் தேர்தலை சந்திக்க வேண்டிய தேவையும் அவருக்கு இருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில், ஏற்கெனவே தான் அமைத்திருந்த மாநில சுயாட்சி பற்றிய ஆய்வுக் குழுவின் அறிக்கையைத் தூசுதட்டி எடுத்து, சட்டமன்றத்தில் விவாதித்தார். சட்டமன்றத்தில் ஃபரூக் அப்துல்லாவின் தேசிய மாநாடு தவிர மற்ற கட்சிகள் எல்லாம் இந்த அறிக்கையை எதிர்த்தன.. எனினும் மிகப்பெரும் பெரும்பான்மை அடிப்படையில் சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன் மூலம் நாடு தழுவிய கவனம் ஃபரூக் அப்துல்லா மீது திரும்பியது. அவரும் பல்வேறு மாநில முதல்வர்களையும், அரசியல்கட்சித் தலைவர்களையும் சந்தித்து சுயாட்சித் தீர்மானத்திற்கு ஆதரவு கோரினார். ஃபரூக் அப்துல்லாவோடு பேச்சுவார்த்தை நடத்த தில்லி அரசு ஒத்துக் கொண்டவுடனேயே, பா.ஜ.க. கூட்டணியில் நீடிப்பது என்ற முடிவுக்கு தேசிய மாநாட்டுக் கட்சி வந்தது. பேச்சுவார்த்தை தொடங்கியதோடு சரி தொடரவில்லை.

நாடாளுமன்றத்தில் பல்வேறு கட்சிகள் பல குரல்களில் பேசினாலும், ஜம்மு காஷ்மீர் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சுயாட்சித் தீர்மானத்தை ஏற்பதில்லை என்பதில் ஒருமித்த முடிவில் இருந்தன. மாநில சுயாட்சிக்கு முதல் குரல் கொடுத்தது எனது ஆட்சிதான் என்று மார் தட்டும் கலைஞரின் தி.மு.க. ஆனந்தபூர் சாகிப் தீர்மானத்திற்கு உரிமை கொண்டாடும் அகாலிதளம், மாநில உரிமைகள் பற்றி வாய்கிழியப் பேசும் சி.பி.எம். சி.பி.ஐ. கட்சிகள் ஆகியனவும் இந்த ஒருமித்த குரலில் அடங்கும்.

ஆனால் இந்த கட்சிகள் காஷ்மீர் பற்றியும், மாநில சுயாட்சி பற்றியும் இதுவரைபேசியதென்ன? காங்கிரசு கட்சியின் பிரதமராக இருந்த பி.வி. நரசிம்மராவ் 1995ல் காஷ்மீர் சுயாட்சியைப் பொறுத்த மட்டில் வானமே எல்லை என்று நாடாளுமன்றத்தில் பேசினார். அடுத்து வந்த ஐக்கிய முன்னணி ஆட்சியின் பிரதமர் ஐ.கே. குஜ்ராலும், உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தாவும் காஷ்மீருக்கு உயர்ந்த பட்ச சுயாட்சி வழங்கப்படும் என பலமுறை உறுதியளித்தனர். இந்த கட்சிகள் எல்லாம் இப்போது அந்த வாக்குறுதிகளை வசதியாக மறந்துவிட்டன.

1983ஆம் ஆண்டில் சிரீநகரில் ஃபரூக் அப்துல்லா முயற்சியில் மத்திய மாநில உறவுகள் குறித்த மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் சி.பி.எம், சி.பி.ஐ. தி.மு.க. அகாலிதளம் உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் கலந்து கொண்டன. அதில் அனைத்து மாநிலங்களுக்கும் சுயாட்சி வழங்க வேண்டும் என்று ஒருமித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி படை, வெளியுறவு, நாணயம், தகவல் தொடர்பு ஆகிய நான்கு அதிகாரங்கள் மட்டுமே தில்லி ஒன்றிய ஆட்சிக்கு இருக்க வேண்டும் மற்ற அனைத்து அதிகாரங்களும் மாநிலங்களுக்கு அளிக்கப்படவேண்டும் என கோரப்பட்டது. தி.மு.க. அடிக்கடிக் கூறிவரும் மாநில சுயாட்சி கோரிக்கையும் இதனையே வலியுறுத்துகிறது.

இதே மாநில சுயாட்சி கோட்பாட்டை காஷ்மீர் நிலைமைகளுக்கு ஏற்ப துல்லியப்படுத்தி கேட்கிறபோது இக் கட்சிகள் ஏற்க மறுப்பது கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதம் ஆகும். அதிகாரப்பரவல் வேறு, சுயாட்சி வேறு, கூடுதல் சுயாட்சி வேறு, முழுசுயாட்சி வேறு என்று சி.பி.எம், சி.பி.ஐ. கட்சிகள் வியாக்கியானம் செய்வது தமது சந்தர்ப்பவாதத்தை மறைக்கப் போட்டுக் கொள்ளும் திரைகளே ஆகும். இவை வேறுவேறு என்று சொல்வதற்கு ஏற்ற எந்த வரையறுப்பையும் அக்கட்சிகள் முன் வைக்கவில்லை.

**நாடாளுமன்றத்தில் பல்வேறு கட்சிகள் பல குரல்களில் பேசினாலும், ஜம்மு காஷ்மீர் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சுயாட்சித் தீர்மானத்தை ஏற்பதில்லை என்பதில் ஒருமித்த முடிவில் இருந்தன. மாநில சுயாட்சிக்கு முதல் குரல் கொடுத்தது எனது ஆட்சிதான் என்று மார் தட்டும் கலைஞரின் தி.மு.க. ஆனந்தபூர் சாகிப் தீர்மானத்திற்கு உரிமை கொண்டாடும் அகாலிதளம், மாநில உரிமைகள் பற்றி வாய்கிழியப் பேசும் சி.பி.எம். சி.பி.ஐ. கட்சிகள் ஆகியனவும் இந்த ஒருமித்த குரலில் அடங்கும்.**



படிப்பகம்

www.padippakam.com

காசுமீர் சுயாட்சித் தீர்மானத்தை தில்லி அரசு ஏற்றுக் கொண்டால் காசுமீர் சிக்கலைத் தீர்ப்பதில் அது முன்னேற்றகரமானபடியாக அமையும்.

ஆயினும் ஃபரூக் அப்துல்லா இத்தீர்மானத்தை வலியுறுத்துவதில் உறுதியாக இல்லை இத்தீர்மானத்தை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை. பேச்சுவார்த்தைக்கு அது ஒரு அடிப்படையாக அமைந்தால் போதும் என்று அவர் பின்வாங்கியுள்ளார். தேசிய மாநாட்டுக் கட்சியை தமது கூட்டணியில் இருத்தி வைத்துக் கொள்வதைத்தாண்டி, இச்சிக்கலில் பா.ஜ.கவுக்கும் உண்மையான அக்கறை ஏதுமில்லை.

**"காசுமீர் மக்களின் மிகமிகச் சிறு எண்ணிக்கையினரே இந்தியாவோடு சேர்ந்திருக்க விரும்புகின்றனர். பாகிஸ்தானோடு இணைய வேண்டும் எனக் கருதுவோர் விடுதலையையே (Azadi) விரும்புகின்றனர்" என்று முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் முச்சுகுந்த் துபே கூறுவது கவனிக்கத் தக்கது. (காண்க :The Hindu - 29.7.2000)**

இதே நேரத்தில் ஹிஸ்புல் முஜாகிதீன் என்ற போராளி அமைப்பு இப்போது போர் நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தைக்கு முன்வந்துள்ளது. இதற்கு சற்று முன்னர் ஜம்மு காசுமீர் விடுதலை முன்னணியும் போர்நிறுத்தம் அறிவித்தது.

இதிலும் பா.ஜ.க. அரசு முன்னுக்குப்பின் முரணாகப் பேசியது. முதலில் நிபந்தனையற்ற பேச்சு வார்த்தைக்கு ஒத்துக் கொண்டார் வாஜ்பாய். அதன்பிறகு பிரதமரின் முதன்மைச் செயலாளர் பிரிஜேஷ் மிஸ்ரா, அரசமைப்பு சட்ட வரம்புக்குள்தான் பேச முடியும் என்று நிபந்தனை விதித்தார். நிபந்தனை விதித்தால் போர் நிறுத்தத்தைத் திரும்பப் பெறப்போவதாக ஹிஸ்புல் முஜாகிதீன் எச்சரித்தவுடன் மனிதாபிமானம்தான் பேச்சுவார்த்தைக்கு அடிப்படை என்று வாஜ்பாய், குரலை மாற்றிப் பேசியுள்ளார்.

அமைதியான சூழல் ஏற்படுத்துவது குறித்த முதல் கட்டப் பேச்சுவார்த்தை ஹிஸ்புல் முஜாகிதீனுக்கும், தில்லி அரசுக்கும் இடையில் நடந்து முடிந்துள்ளது. பேச்சுவார்த்தையைத் தொடர தில்லி அரசு ஒரு குழுவை நியமித்துள்ளது. ஹிஸ்புல் முஜாகிதீனும் ஒரு குழுவை நியமித்துள்ளது.



ஆயினும் ஜம்மு காசுமீர் மக்களின் கருத்தை தில்லி அரசு மதித்து நடக்கும் என்பதற்கு உத்திரவாதம் ஏதுமில்லை. காசுமீரிகள் அன்றாடம் படையாட்களின் தாக்குதலுக்கும், அச்சுறுத்தலுக்கும், சித்திரவதைக்கும் உள்ளாகி வருகின்றனர். சொந்த மண்ணில் சுதந்திரமாக நடமாட முடியாமல் அங்கங்கே சோதனைச் சாவடியில் சோதனையிடப்படுவதை காசுமீர் மக்கள் இழிவாகக் கருதுகிறார்கள். மொத்தத்தில் தில்லி அரசை, தம்மை வல்லாதிக்கம் செய்யும் காட்டுமிராண்டி அரசாகவே சராசரி காசுமீரிகள் உணர்ந்துள்ளனர்.

"காசுமீர் மக்களில் மிகமிகச் சிறு எண்ணிக்கையினரே இந்தியாவோடு சேர்ந்திருக்க விரும்புகின்றனர். பாகிஸ்தானோடு இணைய வேண்டும் எனக் கருதுவோரும் அதிகம்பேர் இல்லை. மிகப்பெரும்பாலோர் விடுதலையையே (Azadi) விரும்புகின்றனர்" என்று முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் முச்சுகுந்த் துபே கூறுவது கவனிக்கத் தக்கது. (காண்க :The Hindu - 29.7.2000)

இந்த நிலையில் படையைக் குவித்து, பலபேரைப் பலிகொடுத்து, பல்லாயிரம் கோடி ரூபாயை வாரியிரைத்து காசுமீர் மக்களை தமது காலடியில் எவ்வளவுகாலம் நசுக்கி வைக்க முடியும் என்பதைத் தில்லி ஆட்சியாளர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தியாவின் பிறபகுதி மக்களும் உணர வேண்டும்.

பொதுவாக, ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் தன்னுரிமை என்பது இறையாண்மை என்பது பிறப்புரிமை. எந்த தேசிய இனத்தையும், அதன் விருப்பத்தை அறிந்து, அந்த விருப்பத்தின் அடிப்படையில்தான் ஒரு நாட்டில் இணைக்கவேண்டும். இது இந்தியாவிற்கும் பொருந்தும். எனினும் காசுமீரின் நிலமை தனித் தன்மை உடையது. காசுமீர் மக்களின் கருத்தை அறிந்த பிறகே இந்தியாவுடனான அதன் இணைப்பு உறுதி செய்யப்படும் என்று இந்தியக் குடியரசுத் தலைவர் கையெழுத்திட்ட ஒப்பந்தம் உள்ளது. அந்த ஒப்பந்த அடிப்படையில் கருத்து வாக்கெடுப்பு நடத்தி முடிவு செய்வதே சட்டப்படியான, நாணயமான நடவடிக்கை ஆகும். சனநாயகப் பூர்வமான நாகரிக வழிப்பட்ட இந்தத் தீர்வை இந்திய அரசு மட்டுமின்றி, எல்லா வண்ண எதிர்க் கட்சிகளும் ஏற்க மறுக்கின்றன. இதனாலேயே இச்சிக்கல் நீடிக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

பா.ஜ.க. அரசைப் பொறுத்தவரை பேச்சுவார்த்தை என்ற பெயரால் காலத்தைக் கடத்தவே விரும்புகிறது. ஃபரூக் அப்துல்லாவுடன் தொடங்கிய பேச்சுவார்த்தையிலாகட்டும், ஹிஸ்புல் முஜாகிதீனுடன் நடந்து வரும் பேச்சு வார்த்தையிலாகட்டும் உருப்படியான முடிவு ஏதும் வருவதற்கு வாய்ப்பில்லை.

ஏனெனில், இந்திய அரசு காசுமீர் சுயாட்சித் தீர்மானத்தையும் ஏற்கவில்லை. கருத்து வாக்கெடுப்பு நடத்துவது பற்றிக் கருதிப் பார்க்கவும் இல்லை. எனவே தீர்வு ஏற்பட வழியும் இல்லை. தீர்வை நோக்கி முன்னேறவும் வழி இல்லை.

பேச்சு வார்த்தை என்ற பெயரால் கொஞ்ச காலம் இராணுவக் கெடுபிடிகள் குறைந்தால் அது மட்டுமே காசுமீர் மக்களுக்குக் கிடைக்கும் பலனாக இருக்கும்.

ஹிஸ்புல் முஜாகிதீன், பாகிஸ்தான் அரசை வைத்துக் கொண்டுதான் இந்தியா காசுமீர் பேச்சுவார்த்தையை நடத்த வேண்டும் என்று நிபந்தனை விதிக்கிறது. . இது ஒரு தேசிய விடுதலை இயக்கத்திற்கு இருக்கக்கூடாத குணம்.

இச்செயல் பாகிஸ்தானின் கைப்பிள்ளைகள்தாம், காசுமீர் போராளி அமைப்புகள் என்ற குற்றச்சாட்டை மெய்ப்பிப்பதாக உள்ளது. ஒரு தேசிய இயக்கம் தற்சார்பும், தானே முடிவெடுக்கும் உரிமையும் பெற்றிருக்க வேண்டும்.

அதேபோல், இந்திய அரசமைப்புச் சட்ட வரம்பிற்குள் நின்று கொண்டுதான் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று தில்லி அரசு நிபந்தனை போடுவது போகாத ஊருக்கு வழிகாட்டுவதாகும்.

இக்கட்டுரை எழுதி முடிக்கும்போது, ஹிஸ்புல்-இந்திய அரசு பேச்சுவார்த்தை முறிந்து விட்டது. இது எதிர்பார்த்ததே♦

## நினைவேந்தல்

காஞ்சிபுரம் டாக்டர் மு.மூர்த்தி அவர்களின் அன்னை பவுனாம்பாள் அவர்கள் 02.07.2000 அன்று விழுப்புரத்திலுள்ள தமது இல்லத்தில் காலமானார். அன்னாரின் நினைவேந்தல் நிகழ்வு 16.07.2000 அன்று விழுப்புரம் நபிநாயகம் தெருவில் உள்ள அன்புவயல் அரங்கத்தில் நடந்தது. பேராசிரியர் த.பழமலய் அவர்கள் தலைமையில் நடந்த நிகழ்ச்சியில் தோழர் இராசேந்திரச் சோழன், வழக்கறிஞர் அ.தேவநாதன், புலவர் மா.செ. தமிழ்மணி திரு.சே.நடராசன், திரு கு.அருளானந்தம், திரு.க. கோதண்டம், திரு அரங்க ஜானகிராமன், திரு பூங்கன்றன், திரு அ.கோபால் ஆகியோர் நினைவுச்சிறப்புரையாற்றினர்.

டாக்டர் விமுனாமூர்த்தி நன்றி உரையாற்றினார்.

## மெட்ரிக்குலேசன் பள்ளி இழுத்துப் பூட்டும் போராட்டம்

### விளக்கத் தெருமுனைக் கூட்டம்

தமிழக மாணவர் முன்னணி சார்பில் 26.04.2000 அன்று சென்னை கலைஞர் கருணாநிதி நகரில் உள்ள பத்மா சேஷாத்திரி ஆங்கில வழிப்பள்ளியை இழுத்துப்பூட்டும் போராட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது. இப்போராட்டத்தை விளக்கி தஞ்சை, சேலம் மற்றும் காஞ்சியில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன.

**தஞ்சாவூர்**

18.07.2000 அன்று தஞ்சை கீழவாசலில் தோழர் சி. குணசேகரன் (நகரத் தலைவர் த.மா.மு.) தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் நா.வைகறை ந.மதிவாணன் (நகரச் செயலாளர், த.மா.மு.) கு. இராமகிருட்டிணன், இராசசேகரன், சிவநேசன், க.மாதவன் ஆகியோர் உரையாற்றினர். ரெ.மகேந்திரன் நன்றி கூறினார்.

**காஞ்சி**

20.07.2000 அன்று காஞ்சி வட்ட த.மா.மு. சார்பில் மேட்டுத் தெரு காமராசர் சிலை, டோல்கேட் பகுதிகளில் போராட்ட போராட்டத்தை விளக்கி தோழர்கள் ச.யோகநாதன் (மாவட்டச் செயலர் த.தே.பொ.க.) அ.வளவன் (இணைப் பொதுச் செயலாளர் த.மா.மு.) இரா.வெங்கடேசன் வட்ட அமைப்பாளர் த.இ.மு. தீ பகலவன் (த.மா.மு.) ஆகியோர் உரையாற்றினர். கே.பொன்னம்பலம் நன்றி கூறினார்.

**சேலம்**

த.மா.மு. சார்பில் சேலம் அரசு கலைக் கல்லூரியிலிருந்து 24.07.2000 அன்று பேரணி புறப்பட்டு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம், மிகச் சிறப்பாக எழுச்சியுடன் நடைபெற்றது. தோழர் ச. பிந்துசாரன் தலைமை தாங்கினார். சிந்தனையாளர் திரு மா. அர்த்தநாரி (தமிழ்ச்சான்றோர் பேரவை) ஊர்வலத்தைத் தொடக்கி வைத்தார்.

தோழர்கள் ச.அர மணிபாரதி (பொதுக்குழு உறுப்பினர் த.தே.பொ.க.) சி. இளந்திரையன் (உலகத் தமிழர் பண்பாட்டு கழகம்), கோ.வேல்நம்பி (தமிழ்ச்சான்றோர் பேரவை) லிங்கேசுவரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். தோழர் கே. தமிழ்ச்செல்வன் நன்றி கூறினார்.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்வழிக்கல்வி இல்லாத பத்மா சேஷாத்திரி பள்ளியை இழுத்துப் பூட்டினார்கள் மாணவர்கள்

## தமிழக மாணவர் முன்னணி போராட்டம் : 100 மாணவர்கள் கைது

சென்னை கலைஞர் கருணாநிதி நகரில் உள்ள பத்மா சேஷாத்திரி ஆங்கில வழிப்பள்ளியை தமிழ் வழிக் கல்வி கோரும் தமிழக மாணவர் முன்னணி மாணவர்கள் 26.7.2000 அன்று இழுத்துப் பூட்டினார்கள்.

தமிழ் வழிக் கல்வியை முற்றிலும் புறக்கணிப்பதுடன், தமிழை ஒரு மொழிப்பாடமாகக் கூட பெரும்பாலான மெட்ரிகுலேசன் பள்ளிகளும், சி.பி.எஸ்.இ. பள்ளிகளும் ஏற்றுக் கொள்வதில்லை. தமிழ்நாட்டில் தமிழ்மொழியை கற்பிக்காமல் இருப்பது, தமிழ் மண்ணுக்குச் செய்யும் துரோகமாகும்.

எனவே, தமிழக அரசு மெட்ரிகுலேசன் வாரியத்தை மூடி மெட்ரிகுலேசன் பள்ளிகளையும், சி.பி.எஸ்.இ. பள்ளிகளையும் அனுமதிக்கக் கூடாது என்ற கோரிக்கையை முன் வைத்து இப்போராட்டம் நடைபெற்றது.

அடையாளமாக பத்மா சேஷாத்திரி பள்ளியை அன்று காலை 11.00 மணிக்கு தமிழக மாணவர் முன்னணி மையக்குழு உறுப்பினர் தோழர் க. மாதவன் தலைமையில் மாணவர்கள் இழுத்துப் பூட்டினர். அப்போது 35 மாணவர்களை கே.கே.நகர் காவல் துறையினர் கைது செய்தனர்.

அதே நேரம் சென்னை உதயம் திரையரங்குப் பகுதியிலிருந்து பத்மா சேஷாத்திரி பள்ளி நோக்கி தமிழக மாணவர் முன்னணி இணைப் பொதுச் செயலாளர் தோழர் அ.வளவன் தலைமையில் தமிழ் வழிக் கல்விக்கு ஆதரவாக முழக்கம் இட்டு ஊர்வலமாக வந்த 65 மாணவர்களை, இ.எஸ்.ஐ. மருத்துவமனை அருகே காவல்துறையினர் தடுத்து கைது செய்தனர்.

கைதானவர்களை சாலிகிராமம் கோல்டன் திருமண மண்டபத்தில் சிறை வைத்தனர்.

கைதானவர்களை வாழ்த்தி தோழர்கள் பெ.மணியரசன், அ.பத்மநாபன், அரு.கோபாலன், ச.யோகநாதன், நா.வைகறை, உதயன் ச.அர.மணிபாரதி உட்பட பலர் உரையாற்றினர்.

தஞ்சை, காஞ்சி, சத்தியமங்கலம், திண்டிவனம், சென்னை உள்ளிட்ட பகுதிகளிலிருந்து மாணவர்கள் இப்போராட்டத்தில் பங்கேற்றனர்.

மாலையில் காவல் துறையினர் அனைவரையும் விடுதலை செய்தனர்.

## சிந்தனையாளன் நடத்தும் கட்டுரைப்போட்டி

தமிழீழ விடுதலை :
பார்ப்பனர் போக்கும் தமிழர் கடமையும்

என்னும் தலைப்பில் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

* கட்டுரை 450 வரிகளுக்குள், தாளின் ஒரு பக்கத்தில், தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். வரும் கட்டுரைகள் திருப்பி அனுப்பப்பெறமாட்டா.
* கட்டுரைகள் தக்க வரலாற்றுச் சான்றுகளுடன் எழுதப்பட வேண்டும்.
* பரிசுக்குரிய மூன்று கட்டுரைகள் சிந்தனையாளன் ஆசிரியர் குழுவினால் தேர்வு செய்யப்படும். இக்குழுவின் முடிவே இறுதியானது.
* பரிசுகள் : முதற்பரிசு ரூ 2,000, இரண்டாம் பரிசு ரூ1,500, மூன்றாம் பரிசு ரூ1,000
* கட்டுரைகள் அனுப்பும் ஒவ்வொருவர்க்கும் ஓராண்டுக்குச் சிந்தனையாளன் இதழ் அன்பளிப்பாக விடுக்கப்படும்
* **கட்டுரை வந்து சேரவேண்டிய கடைசி நாள்: 31.8.2000 வியாழன்.**
* கட்டுரைப் போட்டித் தொடர்பாகக் கடிதப் போக்குவரத்து ஏற்கப்படமாட்டாது.
* தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரையாளர்களுக்கு உரிய பரிசுத் தொகை 17.9.2000 அன்று தந்தை பெரியார் அவர்களின் 122வது பிறந்த நாள் விழாவில் அளிக்கப்பெறும்.

கட்டுரை அனுப்பிட முகவரி : ஆசிரியர், 'சிந்தனையாளன்'
(கட்டுரைப்போட்டி)
19, முருகப்பா தெரு சேப்பாக்கம், சென்னை 600 005.



படிப்பகம்

www.padippakam.com



# அந்தமானில் தமிழர்கள் ஓரங்கட்டப்படுகிறார்கள்

சுப.கரிகால்வளவன்

1964 ல் சாஸ்திரி சிரிமாவோ பண்டார நாயக்கே ஒப்பந்தத்தின்படி 1974, 1975, 1976 என மூன்று பிரிவாக தமிழ் குடும்பங்கள் கட்சால் தீவில் குடியமர்த்தப்பட்டன. 26 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையிலிருந்து கொண்டு வந்து தீவில் குடியமர்த்திய அரசு அந்த அப்பாவித் தமிழர்களை ஏதோ ஒரு வகையில் ஏமாற்றியுள்ளது என்பது மட்டும் உண்மை.

அதேவேளை பாக்கிஸ்தான் பிரிவினையின்போது பல நூறு பங்காளதேசி குடும்பங்களுக்கு 15 ஏக்கர் நிலமும் பலவித சலுகைகளும் அளிக்கப்பட்டுள்ளன. இன்றும் புதிதாக தீவிற்குள் ஊடுருவி வரும் பங்களாதேசிகள் நில ஆக்கிரமிப்பு செய்து செட்லர் ஆகி விடுகின்றனர். மொத்தம் சுமார் 40,000 பங்களாதேசிகள் கல்கத்தா வழியில் தீவிற்குள் வந்து குடி புகுந்துள்ளனர். அவர்களுக்கு அதிகார வர்க்கத்தினரும் தீவின் வங்காள இன நாடாளுமன்ற உறுப்பினரும் முழு ஆதரவு அளித்து வருகின்றனர்.

தமிழகர்களின் சிக்கல் மட்டும் எந்த அரசியல் வாதியாலும் பேசப்படுவதில்லை. கொடி பிடிக்க, கோசங்கள் எழுப்ப, சுவரொட்டிகள் ஒட்ட, வாக்குகள் பெறும் போது தமிழர்கள் தேவை. அனைத்தும் முடிந்த பின்னர் தமிழர்களின் மீது வழக்குகள் போடப்படுகின்றன.

27 ஆண்டுகிளாக தமது உரிமைகளுக்காக சலுகைகளுக்காக தமது நாட்டிலேயே போராடும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. பிற செட்லர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளும், உரிமைகளும் கட்சால் தீவு செட்லர் தமிழர்களுக்கு மறுக்கப்படுவது சில அரசியல் காரணங்களுக்காகத்தான் என்பது தெளிவு.

இப்பிரச்சினைகளை வலியுறுத்தி கட்சால் தமிழ் மக்கள் சாலை மறியல், மரம் வெட்டும் போராட்டம் உண்ணா விரதப் போராட்டம், என பல போராட்டம் நடத்தியுள்ளனர். போராட்டங்கள் நடத்தப்படும் போது மட்டும் பலவித பொய்யான வாக்குறுதிகளைக் கூறி அரசியல்வாதிகளும் அதிகாரவர்க்கமும் அவர்களின் போராட்டங்களை கைவிட வைக்கின்றனர். இங்குள்ள திராவிட கட்சித் தலைவர்களும், தேசிய கட்சிகளின் தமிழ் தலைவர்களும் சுய நலத்துடன் செயல்பட்டு வருகின்றனர்.

இங்குள்ள தமிழர்கள், கட்சி, சாதி, மதம் என பலவித கருத்து வேறுபாடுகளால் பிளவுபட்டுள்ளனர். இதனை தமக்கு ஆதரவாக பயன்படுத்தி கொள்கின்றனர் அரசியல் தலைவர்கள், தீவில் இரண்டாவது பெரிய இனமாக இருக்கும் தமிழ் மக்களுக்கு எதிரான சதி வேலைகள் நடைபெற்று வருகின்றன,

தமிழர்களின் குடிசைகள் உடைப்பு, கடை ஒதுக்கீடுகளில் தமிழர்களுக்கு உரிய இடமின்மை, உள்ளூர் சான்றிதழ் வழங்குவதில் பாரபட்சம். இப்படியாகத் தமிழர்கள் தீவிற்கு வந்து குடியேறுவதைத் தடுக்கும் பல நடவடிக்கைகள். ஆனால், காவல் நிலையத்தில், வழக்கு மன்றத்தில், மருத்துவமனையில் தமிழர்களின் கூட்டமே மிக அதிகம்.

கடந்த 6.6.2000 அன்று கட்சால் தமிழர்கள் தமது கோரிக்கையை வலியுறுத்தி போராட்டம் நடத்திய போது தற்செயலாக அங்கு வந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மனோரஞ்சன்பக்தா அவர்களை சுற்றி வளைத்து தம்மோடு போராடும்படி வேண்டினர் நம் தமிழ்மக்கள். அதனை ஏற்றுக்கொண்ட பக்தா அவர்களோடு இணைந்து போராடினார். ஆனால் இப்பிரச்சினை அரசியலாக்கப்பட்டது. அந்தத் தமிழர்கள் மீது பொய் வழக்கு போடப்பட்டது.

அரசியல் தலைவர்கள் கட்சால் தமிழர்கள் விடுதலைப்புலிகள். தீவிரவாதிகள் என சித்தரிக்கிறார்கள். சில வடநாட்டு இதழ்களில் உண்மைக்குப் புறம்பான செய்திகள் வெளியிடப்பட்டன. புலிகளின் தளம் கட்சாலில் அமைந்துள்ளதாகக் கூறியுள்ளனர்.

தமிழர்களுக்கு எதிரான பொய்ப் பிரச்சாரங்களை முடுக்கிவிட்டு அமைதியான இத்தீவில் இனக்கலவரம் மூட்ட சில அரசியல் வாதிகள் திட்டமிட்டுள்ளனர் என்பது மட்டும் உண்மை. தற்போது சில அரசுத்துறைகளில் வேலை வாய்ப்புகளை வழங்கும்போது தமிழர்கள் மட்டும் ஓரங்கட்டப்படுகின்றனர்.

தமிழர்களுக்கு எதிரான பிரச்சாரங்களை செய்யும் இனவெறிப்



படிப்பகம்

www.padippakam.com

பத்திரிக்கைகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் சவுக்கடி கொடுக்கும்படியாக 17.6.2000 அன்று போர்ட் பிளையர் நகரில் அனைத்துக்கட்சி தமிழ் தலைவர்களும் கூடி தி. இந்துஸ்தான் டைம்ஸ் இதழை தீயிட்டு கொளுத்தினோம்.

தீவின் தமிழர்களின் சிக்கல் தீரவேண்டுமானால் தமிழகத்திலிருந்து தமிழர்கள் தீவில் வந்து குடியேற வேண்டும். சுற்றுலா, விடுதி, கணிப்பொறி, நிதியகம், கட்டிடத் தொழிலாளிகள், ஆட்டோ, டேக்சி ஓட்டுநர்கள், உணவு, பலகாரம் தயாரிப்பாளர்கள் மற்றும் (சிப்பி, மரம், மண சம்பந்தப்பட்ட) கைவினைத்தொழில் வியாபாரிகள் எனப்பலரும் நல்ல கல்வியறிவுள்ள மக்களும் வந்து முதலில் சுயமாக தொழில் தொடங்குதல் வேண்டும்.

இங்கு தமிழுணர்வுள்ள தலைவர்கள் இத்தமிழர்களுக்கு நல்ல வழிகாட்டியாக இருக்க முடியும். இராஜேந்திர சோழன் தென்முனைத்தீவான கேம்பல்பே காலாத்தி நதியோரம் இறங்கி ஓய்வு எடுத்து கொண்டதற்கான சான்றுகள் உள்ளன.

அங்குள்ள சோம்பன் பழங்குடியின மக்களின் பேச்சு வழக்குகள் மற்றும் உடலமைப்புகள் தமிழர்களை ஒத்து காணப்படுகின்றன. தீவின் வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டவர்கள் தமிழர்கள். தீவின் சமூக பொருளாதார, அரசியல் வாழ்க்கை முறைக்கும், நாகரீக வாழ்க்கை முறைக்கும் வழி அமைத்தவர்கள் தமிழர்கள். எனவே மிகவும் பிற்படுத்தப்பட்ட அந்தமான் நிக்கோபார்த் தீவுகளில் வசித்து வரும் தமிழர்களது சிக்கலைத் தமிழ்த் தாயகத்தில் வாழும் தமிழுணர்வாளர்கள் அறிந்து அதனை தீர்க்க நல்ல வழி காட்டுதல் வேண்டும்.

(குறிப்பு: கட்டுரையாளர்
அந்தமான் முரசு இதழின் ஆசிரியர்.)

## த.தே.பொ.க. சிறப்புப் பேரவைக் கூட்டம்

தஞ்சை மாவட்ட த.தே.பொ.க., த.இ.மு. த.மா.மு. அமைப்புகளின் உறுப்பினர் பேரவைக் வட்டம் 23.7.2000 அன்று தஞ்சை பெசண்ட் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. தோழர் பழ.இராசேந்திரன் (நகரச் செயலாளர், த.தே.பொ.க.) தலைமையில் நடைபெற்ற இப்பேரவைக் கூட்டத்தில், அண்மையில் வெளிநாட்டிற்கு பயணம் செய்து திரும்பிய தோழர் பெ.மணியரசன் தனது பயண அனுபவங்கள் பற்றியும், உறுப்பினர்களுக்கான கடமைகள் குறித்தும் சிறப்புரையாற்றினார்.

தோழர் க. பழநிமாணிக்கம் (மாவட்டச் செயலாளர் த.தே.பொ.க.) நன்றி கூறினார்.

## தமிழக இளைஞர் முன்னணி பயிற்சி வகுப்பு

தஞ்சை மாவட்ட த.இ.மு. சார்பில் 09.07.2000 அன்று தஞ்சை பாவேந்தர் அரங்கத்தில் முழுநாள் பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

தோழர் ரெ.சிவராசு (மாவட்டத்தலைவர் த.இ.மு.) தலைமை தாங்கினார். தோழர் ச.மணிவண்ணன் (மையக்குழு உறுப்பினர்,) த.இ.மு. தமிழ்த்தேசத் தன்னுரிமையும் தமிழக கட்சிகளும் என்ற பொருளில் வகுப்பு எடுத்தார்.

பிற்பகலில் அமைப்பும் கடமையும் என்ற பொருளில் தோழர் நா.வைகறை வகுப்பு நடத்தினார். பின்பு தோழர்களின் பல்வேறு வினாக்களுக்கு இருவரும் விடையளித்தனர்.

தோழர் இரா.சு.முனியாண்டி (நகரச் செயலர் த.இ.மு.) நன்றி கூறினார்.

## பகுத்தறிவாளர் மயிலாடுதுறை இராசமாணிக்கம் மறைவு

மயிலாடுதுறை பெரியார் இயக்க முன்னோடியும், தமிழீழ உணர்வாளருமான மிசா கி.இராசமாணிக்கம் அவர்கள் 3.7.2000 அன்று காலமானார்.



அவர் எழுதி வைத்த விருப்ப உறுதியின்படி சிதம்பரம் மருத்துவக் கல்லூரிக்கு அவரது உடல் வழங்கப்பட்டது. அவரது விழிகள் கொடையாக வழங்கப்பட்டன.

தந்தை பெரியார் கொள்கையில் பற்றுறுதியும், தமிழ்த் தேசியத்தில் நம்பிக்கையும் கொண்ட கி.இராச மாணிக்கம் அவர்களுக்கு தமிழர் கண்ணோட்டம் இறுதி வணக்கம் செலுத்திக் கொள்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# கார் காலம்

தணிகைச் செல்வன்

சிந்திரி உற்பத்தியை விடச்
சிகாகோ இறக்குமதியே லாபகரம்
எனவே
உர ஆலைகளை
உடனே மூடுங்கள்


✪

பம்பாய் சர்க்கரையை விடப்
பாகிஸ்தான் சர்க்கரை பாதிவிலை
எனவே இனி
கரும்பாலைகளின் கதவடைப்போம்

✪

குறைந்த விலையில் கோதுமை வேண்டுமா?
வாங்கிடன் கப்பலை வரவேற்போம்
பஞ்சாப் - இனி பயிரிடவேண்டாம்

✪



சேலம் இரும்பைவிட
ஜெர்மனி இரும்பு சகாயவிலை
இரும்பாலைகளை இழுத்து மூடுவோம்

✪

நெய்வேலி நிலக்கரியைவிட
ஆஸ்திரேலிய நிலக்கரி
அரைவிலைக்குக் கிடைக்கிறது
தோண்டியது போதும்
நிறுத்துங்கள் நெய்வேலியை

✪

அசாம் எண்ணெயை விட
அரேபிய எண்ணெயே ஆதாயம்
இனியும் தேவையா
எண்ணெய்க் கிணறுகள்

✪

பீட்டர் இங்லாண்டு சட்டைகள்
வீதியெல்லாம் கொட்டிக் கிடக்கையில்
பின்னி மில்லைத் திறக்கக் கோருவது.
தேசத்துரோகம் அல்லவா?

✪

சென்னைக் கைலியை விட
ஜப்பான் கைலி மலிவுவிலை
கைத்தறிகள் இனி எதற்கு
அவற்றைக் கல்லறையில் புதைப்போம்

✪

நாமக்கல் முட்டையைக் காட்டிலும்
நார்வே முட்டை விலை மலிவு
இனி கோழிப்பண்ணைகளைக்
கூண்டோடு மூடுவோம்
உலகத் தரத்தில் உப்பு கிடைக்கையில்
உள்ளூர் உப்பு வேண்டியதில்லை
உப்பளங்களை உடனே மூடுங்கள்

✪

கற்காலச் சின்னங்கள்
கட்டுமரங்களை விட்டெறியுங்கள்
கடலோரமெங்கும்
இறால் பண்ணைகளைப் பயிரிடுங்கள்
வேலை இன்மையால்
குப்பத்துக் குடிசைகளின் வயிறு எரியும்
எரியட்டுமே!
தேசத்தின் கஜானாக்களில்
டாலர் குவியுமே!

✪

பூண்டு மஞ்சள் வெங்காயம்
சுக்கு கடுகு சீரகம்
வெந்தயக் கீரை
வேப்பிலைப் பட்டை
வல்லாரைக் கீரை முதல்
வாழையிலைச் சாறுவரை



படிப்பகம்

www.padippakam.com

நம் பாட்டி அறிந்த
நாட்டு மருந்துகள் எல்லாம்
இனி நமக்கு உரிமையில்லை
உலகம் சுருங்கிவிட்டதால்
நம் உரிமைகள்
கப்பலேறி விட்டனவாம்
எனவே இனி,
அமெரிக்க அனுமதியில்லாமல்
மஞ்சள் முகமே வருக
என்று நம் கவிஞர்கள்
திரைப்பாட்டு எழுதத்
தடை வரப்போகிறது.

✪

அண்ணா நமக்குத் தந்த
ஆயுட்காலப் பரிசு
மெட்ராஸ் ஸ்டேட் என்பதைத்
தமிழ்நாடு என மாற்றியதுதான்.
அதற்கு நாம்
அவருக்குக் காணிக்கை செலுத்த வேண்டாமா?
செலுத்துவோம்.
எதிர்வரும் அவர் நூற்றாண்டில்
தமிழ்நாடு என்பதை
இங்கிலீஷ் நேஷன் என்று
பெயர் மாற்றம் செய்து
அவர் பாதங்களில் வைப்போம்.
பள்ளிகளில்
இனி தமிழ்த்தாய் வாழ்த்து கூட
ஆங்கிலத்தில் இருக்குமாறு
ஆணையிடுவோம்.

✪

நினைவில் வை.
இனி தேசத்தின் திசை
கிழக்கல்ல - மேற்கு
புரிகிறதா?

✪

புரிகிறது அறிஞர்களே புரிகிறது
ஆனால்,
ஒன்று மட்டும் புரியவில்லை
இந்த ஏழைக்கு.

✪

தொழிலும் மொழியும்
அந்நிய மயமாகிவிட
உழைப்பினத்தை வெளியேற்றிவிட்டு
உள்ளூர்த் தொழில்களைப் பலியிட்டுவிட்டால்
பிழைக்குமா நம் நாடு சொல்லும் - இங்கு
முளைக்குமா சின்னஞ்சிறு புல்லும்?

✪

முட்டாளே முனகாதே
நாடெங்கும் கார்கள் தயாரிக்கிறோம்
கார்களைக் கடனுக்குத் தருகிறோம்.
நாளுக்கு நானூறு கார்
சாலைக்கு வருவதைப் பார்
ஏரோடிய நிலங்க்ளில் எல்லாம்
காரோடும் காட்சியைப் பார்
இந்தியக் குடியரசின் பொன்விழாப் பரிசு
அடுத்த திட்டத்தில் ஆளுக்கொரு கார்!
இனி கவலை ஏன்!
கார்களைச் சாப்பிடுங்கள்
கார்களைக் குடியுங்கள்
காரோடு உறங்குங்கள்
சபாஷ்! ஒரு வழியாக
புதிய மில்லினியத்துக்கு
நாமும் தகுதி பெற்று விட்டோம்
இந்தச் சுதந்திர தினத்தில்
வாருங்கள் கொடியேற்றுவோம்
வெள்ளை மாளிகையில்!

✪


## அறிவிப்பு

தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சி ஊர்தி நிதி அளித்தோர் பட்டியல் அடுத்த இதழில் வெளிவரும்.

இதுவரை ஊர்தி நிதி அளிக்காதோர் நிதி அளித்து உதவிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

- பொதுச்செயலாளர், த.தே.பொ.க.

தமிழர் கண்ணோட்டம்

தமிழ்த்தேசிய மாத இதழ்

பொருளியல் நெருக்கடிகளுக்கிடையே இவ்விதழ் வந்துகொண்டுள்ளது. சீர்செய்ய பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் அன்பளிப்பும், சந்தாத் தொகையும் அனுப்ப உதவுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

- ஆசிரியர்.

தமிழர் கண்ணோட்டம்
53 அ சமீன்தார் குடியிருப்பு,
புது ஆற்றுச்சாலை,
தஞ்சாவூர் - 613 001. தொ.பே. 32994




படிப்பகம்

www.padippakam.com

# நேரான விடைகள்

☛ பசுவதைத் தடை சட்டம் கொண்டுவர வலியுறுத்தி சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக சங்கராச்சாரியார் அறிவித்திருப்பதைப் பற்றி தங்கள் கருத்து என்ன?

கோ.இராமகிருட்டிணன், ஈரோடு

❑ உயிர்வதை கூடாது என்பது ஜீவகாருண்யக்கொள்கை. பசுவதை மட்டும் கூடாது என்பது பார்ப்பனியக் கொள்கை. மனிதர்களில் உயர்வு தாழ்வு கற்பிக்கும் வர்ணாசிரம தர்மத்தின் நீட்சியாக பிராணிகளில். உயர்வு தாழ்வு பார்த்து பசு மாமிசத்தை மட்டும் உண்பதற்கு தடைவிதிக்க கூறுகிறார் ஜெயேந்திர சரஸ்வதி.

மாடுகள் கொல்லப்படக்கூடாது என்று அக்கறைப்படும் ஆர்.எஸ்.எஸ்ஸின் அந்தரங்கத் தலைவர் ஜெயேந்திர சரஸ்வதி பாபர் மசூதி இடிப்பையொட்டி நடந்த வகுப்பு கலவரங்களில் மனிதப் படுகொலைகளை நிறுத்தக்கோரி உண்ணாவிரதம் இருந்திருக்கலாமே! பாகிஸ்தான் பிரிவினையின்போது நடந்த வகுப்புக் கொலைகளை நிறுத்தக்கோரி காந்தி உண்ணாவிரதம் இருந்தாரல்லவா?

மாட்டுக்கறி மலிவானது, புரதச்சத்து மிகுந்தது. பசுவதை தடைச் சட்டம் கூடாது. உழவிற்குத் தேவையான மாடுகளை உற்பத்தி செய்து கொள்ளலாம்.

☛ மனிதனை விஞ்சிய இயற்கை சக்தியை கடவுளென்று சொன்னால் என்ன?

எஸ். மணிகண்டன், நாகை

❑ இயற்கை சக்தி முக்கியம்தான். மனித சமூகத்தைப் பொறுத்தவரை சக்தியைப் பயன்படுத்தும் திறன் மிக முக்கியமானது. அணுசக்தி இயற்கையில் இருக்கிறது. ஆயிரமாண்டுகளுக்கு முன்பும் அது இயற்கையில் இருந்தது. ஆனால் மனிதன் கையாளத்தொடங்கிய பின்தான் அந்த சக்தியே பயன்பாட்டிற்கு வருகிறது. ஆக, மனிதன்தான் இயற்கையின் சக்தியை ஆளுகிறான்.

அணுசக்தியை ஆக்கப்பணிகளுக்கு பயன்படுத்த வேண்டுமே தவிர, அழிவுபணிகளுக்கு பயன்படுத்தக் கூடாது என்றும் மனிதர்கள் கொள்கை வகுக்கிறார்கள், ஆபத்து இல்லாத அணுசக்தியே கிடையாது என்பதால் அணுசக்தி பயன்பாட்டையே தடைசெய்ய வேண்டும் என்றும் மனிதர்கள் கொள்கை வகுக்கிறார்கள்.

இயற்கையில் ஆற்றல் இருக்கிறது. ஆனால் அதற்கு மனம் இல்லை. மனம்சார்ந்த அறிவு இல்லை. மனிதனின் கையைவிட ஏ.கே.47 துப்பாக்கி வலிமையானதுதான். ஆனால் அது மனிதனின் கைக்குள் அடக்கம் என்பதுதான் உண்மை.

ஆகவே மனிதனுக்கு வெளியே இருக்கும் இயற்கை ஆற்றல் கடவுளும் இல்லை, மனிதனைவிட மேலானதும் இல்லை. மனிதனும், இயற்கையின் ஓர் உறுப்புதான்.

☛ கரும்பின் விலை டன்னுக்கு ரூ1,000 என்று கலைஞர் அறிவித்திருப்பதையும், ஜெயலலிதா எதிர்ப்பது நியாயமா?

இராமசாமி, வாண்டையார் இருப்பு.

❑ ஜெயலலிதாவும், கருணாநிதியும் தங்கள் இருவரில் ஒருவர் எதைச் செய்தாலும் இன்னொருவர் எதிர்ப்பது என்பதை அரசியல் தத்துவமாக்கிக் கொண்டவர்கள். அவர்களை விடுங்கள்.

தமிழக முதல்வரின் இந்த அறிப்பை விவசாயிகள் ஏற்றுக் கொள்ளவில்லையே. 100கிலோ கரும்புக்கு 10 கிலோ சர்க்கரை கிடைத்தால்தான் டன்னுக்கு ரூ1,000 என்று கலைஞர் அறிவித்திருக்கிறார். தமிழ்நாட்டில் பெரும்பாலான ஆலைகளில் 10 சதவீத பிழிவுத் திறன் கிடைப்பதில்லை. 8.5 விழுக்காட்லிருந்து 9.5.விழுக்காடு வரை பிழிவுத் திறன் கொண்ட ஆலைகளே அதிகம். எனவே தமிழக அரசின் அறிவிப்பால் விவசாயிகளுக்குப் பலன் இல்லை.

8.5 விழுக்காடு பிழிவு திறன் உள்ள ஆலைப் பகுதியிலும் கரும்புக்கு டன்னுக்கு ரூ,1,000 என்று அறிவிப்பதே நியாயம்!

☛ பெண்ணின் திருமண வயது 21 என்று வாகனங்களில் எழுதப்பட்டிருக்கிறதே சரியா?

க. தமிழ்ச்செல்வி, தஞ்சை.

❑ பெண்ணின் திருமண வயது 'திரைப்படங்களில் 16. வாகனங்களில் 21. சட்டத்தில் 18.

☛ சட்ட அமைச்சர் ராம்ஜேத்மலானியைப் பதவி விலகச் செய்தது சரியா?

கோ.இராமலிங்கம், திண்டிவனம்

❑ பம்பாயில் வகுப்புக் கலவரத்தைத் தூண்டி இஸ்லாமியமக்கள் படுகொலைக்கு காரணமாய் இருந்த பால்தாக்கரே கைது செய்யப்படுவதைத் தவிர்க்கும் வகையில் மூன்று ஆண்டுகளுக்குமேல் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படாத வழக்குகள் தானே காலாவதியாகிவிடுமென்று சட்ட அமைச்சர் பொறுப்பில் இருந்துக்கொண்டு ராம்ஜேத்மாலானி பகிரங்கமாகக் கூறியது குற்றம்.



படிப்பகம்

www.padippakam.com

ஃபோபர்ஸ் பீரங்கி ஊழலில் சம்பந்தப்பட்டுள்ள இந்துஜாவிற்கு இந்திய அரசின் தலைமை வழக்கறிஞர் சோலி சோரப்ஜி வேறொரு வழக்கில் தனிப்பட்ட முறையில் தொகை வாங்கிக் கொண்டு ஆலோசனைக் கூறியது குற்றமில்லை என்று வாஜ்பாயி மூடிமறைப்பதும் குற்றம். அதேபோல் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆனந்த் செய்த தவறுகளையும் வாஜ்பாயி மூடிமறைக்கத் தேவையில்லை.

ராம்ஜேத்மலானி பதவிவிலகியது பற்றி வருந்தவேண்டியதில்லை. வாஜ்பாயி பதவி விலகாமலிருப்பதுதான் வருத்தத்திற்குரியது.

☛ *அண்ணா இருந்திருந்தால் எம்.ஜி.ஆர் தி.மு.க.விலிருந்து பிரிந்து அ.தி.மு.க.வை தொடங்கியிருக்கமாட்டாரல்லவா?*

மா. சிங்காரம், காரைக்குடி.

❑ நீங்கள் சொல்வது சரியாக இருக்கலாம். ஆனால் கலைஞர் அண்ணாவிடமிருந்து பிரிந்து தனிக்கட்சி தொடங்க வேண்டிய சூழல் உருவாகியிருந்தால் என்ன செய்வதாம்? இன்னார் உயிரோடு இருந்தால் இன்னது நடந்திருக்கும் அல்லது நடந்திருக்காது என்று ஊகித்து முடிவு செய்வதால் பலனொன்றுமில்லை.

## சட்டக்கல்வி தனியார் மயமாக்குவதை எதிர்த்து மாணவர்களின் போராட்டம்

**கு. இராமகிருட்டினன்**

கோவை அவினாசிலிங்கம் மகளிர் பல்கலைக்கழகம் சட்டக் கல்லூரி தொடங்க அனுமதி பெற்றுள்ளதாகவும் அக்கல்லூரியைத் திறக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அறிவிப்புகள் வந்தவுடன் கோவை அரசு சட்டக் கல்லூரி மாணவர்கள் கொதித்தெழுந்தனர். தொடர்ந்து மதுரை, சென்னை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள அரசு சட்டக் கல்லூரி மாணவர்களும் போராட்டத்தில் குதித்தனர்.

தமிழ்நாட்டில் மேற்கண்ட ஐந்து அரசு சட்டக் கல்லூரிகள் தவிர சேலத்தில் ஒரு தனியார் சட்டக் கல்லூரியும் செயல்படுகிறது. அரசு சட்டக் கல்லூரிக்கும் தனியார் சட்டக் கல்லூரிக்கும் மாணவர் சேர்க்கை, கட்டணம் போன்றவற்றில் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடுகள் இருக்கின்றன. அம்பேத்கர் சட்டக் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் அரசு சட்டக் கல்லூரிகளுக்கு நுழைவுத் தேர்வு நடத்தப்பெற்று தேர்ச்சிப் பெறுகிற மாணவர்களுக்கு இட ஒதுக்கீட்டு அடிப்படையில் சேர்க்கை அளிக்கப்படுகிறது.

சேலம் தனியார் கல்லூரியில் நிர்வாகத்தின் சொந்த அளவுகோலுக்கு ஏற்ப சேர்க்கை நடக்கிறது. இடஒதுக்கீடும் பின்பற்றப்படுவதில்லை. நன்கொடைத் தொகையும் கல்விக் கட்டணமும் தனியார் கல்லூரியில் ஏழைகளுக்கு எட்டாத உயரத்தில் இருக்கின்றன. அவினாசிலிங்கம் நிகர்நிலைப் பல்கலைக்கழகத்திற்குள் புதிய சட்டக் கல்லூரி வந்தால், சேர்க்கை மட்டும் அல்ல தேர்வும் அம்பேத்கர் பல்கலைக்கழக விதிமுறைப் படி நடக்காது. அம்பேத்கர் பல்கலைக்கழகத்தில் முழுக்க முழுக்க தேர்வு அடிப்படையில் மதிப்பெண் வழங்கப்படுகிறது.

அவிநாசிலிங்கம் நிகர்நிலை பல்கலைக்கழகத்தில் எழுத்துத் தேர்வுக்கு 50 விழுக்காடு மதிப்பெண்களும் அகமதிப்பீட்டிற்கு 50 விழுக்காடு மதிப்பெண்களும் வழங்கப்படுகின்றன. இதனால் மாணவர் தரம் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது.

அனைத்திந்திய பார் கவுன்சில் தொடர்ச்சியாக தனியார் சட்டக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கும் திட்டத்தில் உள்ளது. தமிழகத்தில் புதிதாக சட்டக் கல்லூரி தொடங்க அனுமதி இல்லை என்று அம்பேத்கார் சட்டப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அறிவிக்கிறார். தமிழக சட்ட அமைச்சர் ஆலடி அருணாவோ கோவை தனியார் கல்லூரிக்கு அனைத்திந்திய பார் கவுன்சில் அனுமதி வழங்கி உள்ளதால் நாங்கள் ஒன்றும் செய்வதற்கில்லை என்று முதலில் தெரிவித்தார்.

தனியார் சட்டக் கல்லூரி தொடங்கக் கூடாது என்ற போராட்டம் ஐந்து சட்டக் கல்லூரிகளுக்கும் பரவி சூடுபிடித்த பிறகு, கோவையிலும், மதுரையிலும் மாணவ மாணவியரின் சாகும் வரையிலான பட்டினிப்போராட்டம், மாணவிகள் மயங்கி விழுதல், கைது செய்யப்படுதல், சாலை மறியல் என்று தீவிரம் அடைந்த பிறகு, மாணவர்களுடன் தமிழக அரசு பேச்சு வார்த்தை நடத்தி அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம் சட்டக் கல்லூரி தொடங்க அனுமதி தரமாட்டோம் என்று அமைச்சர் ஆலடி அருணா உறுதி தந்துள்ளார். இதற்குப் பிறகு போராட்டம் நிறுத்திக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த உறுதி மொழியை தமிழக அரசு நிறைவேற்றுமா?



படிப்பகம்

www.padippakam.com



தஞ்சை ப்ரகாஷ்

# ஓர் இலக்கிய நதி

- சுகன்

இலக்கியம் ப்ரகாஷ்சுக்கு கடைசி வரை கசக்கவே இல்லை. உயிர் ஒடுங்கும் அந்த கடைசி நிமிடங்களில் கூட...... நினைவு தப்பியும், தப்பாமலும் ஊடாடி கிடந்த அந்த இலக்கிய நதியின் எண்ணம் முழுக்க எழுத்தாகவும், புத்தகம் பற்றியதாகவும் தான் இருந்திருக்கிறது.

பேனாவை பிடித்து எழுதுகிற மாதிரியும் புத்தக அலமாரியை குடைவது மாதிரியும் 'அட என்ன விமரிசையா அங்க இலக்கிய கூட்டம் நடக்குது' என சொன்னபடியும் அவரது கடைசிநாள் அசைவுகள் இருந்ததாக, ப்ரகாஷ் துணைவியார் மங்கையர்க்கரசி அவர்கள் சொன்னபோது, தொண்டை வறண்டு துக்கம் முளைத்தது.

எந்த இலக்கியச் செய்தி ஆகட்டுமே! உள்ளூர் முதல் உலகம் வரை அவரது உகட்டு நுனியில் தயாராய் இருக்கும். கேட்டதும் அருவியென பாய்ந்து கொட்டும்.

ப்ரகாஷின் படைப்புகள் பிரச்சினைக்கு உரியவை பெரும்பாலும் மறுக்கப்பட்டவை. இதழ்களும், பதிப்பகங்களும் அவரது எழுத்தை கண்டு மிரண்டன. ஒப்பனை இல்லாத அந்த எழுத்துகள் பல இம்சைகளை வரவழைத்து விடுமோ என்று அஞ்சினர்.

ஆனந்த விகடனில் அவரது 'அங்கிள்' கதை வெளிவந்தபோது பரபரப்பு ஆனது. எப்படி நீ இதை எழுதலாம் என்று அவரிடம் மல்லுக்கு நின்றனர். ப்ரகாஷ் சமாளித்தார். "என்னை சந்திக்க வந்த என் கதாபாத்திரம்" என்று அதையும் சிறுகதையாக்கி சுந்தரசுகன் 75வது வியர்வை சிறப்பிதழில் படர விட்டார்.

'கதா' விருதுபெற்ற "பற்றி எரிந்த தென்னை மரம்" கூட ஒரு மறுக்கப்பட்ட படைப்புதான். கும்பகோணம் தொழுநோய் மருத்துவமனை வெள்ளிவிழா மலருக்காக ப்ரகாஷ்சிடம் கதை கேட்டிருந்தனர். தொழுநோய் வந்த ஒரு பெண்ணை மையமாக வைத்து எழுதித் தந்த ப்ரகாஷ்சின் கதை அவர்களால் மறுக்கப்பட்டது. பின் அது புதிய பார்வையில் வந்து 'கதா' விருததை அவருக்குத் தந்தது.

"எழுத்துன்னா அதில் கடந்த காலம் இருப்பதைவிட நிகழ்காலம் இருப்பதே அவசியம்" என்பது ப்ரகாஷ்சின் கொள்கை.

அவரது "கள்ளம்" நாவலும், "கரமுண்டார் வீடு" நாவலும் கூட தமிழில் மிக வித்தியாசமான நாவல்கள். "கள்ளம்" நாவலில் உயர் சாதியினர் கலையை வியாபாரமாக்கி பம்மாத்து பண்ணும் அவலத்தை வெளிச்சம் போட்டு காட்டியதுடன், மாளிகையின் சுவர்களில் முடங்கிய கலையை, சேரிக்கும் எடுத்துச் சென்று பரப்பும் ஒரு புதிய அத்தியாயத்தை ப்ரகாஷ் முன்வைக்கும் நுணுக்கம் அபாரமானது.

கள்ளர்களும், பள்ளர்களும் ஒருவரோடு ஒருவர் பின்னி பிணைந்துக் கிடந்த வாழ்வை சொல்ல வந்தது கரமுண்டார் வீடு.

ப்ரகாஷ்சின் படைப்புகள் அச்சில் வந்தது என பார்த்தால் முதலில் 'அங்கிள்' சிறுகதைத் தொகுப்பு, பலவருடங்கள் கழித்து "கள்ளம்" நாவல், அடுத்து கரமுண்டார் வீடு நாவல், இப்போது மூன்று மாதங்களுக்கு முன் 'மேபல்' சிறுகதைத் தொகுப்பு.

ப்ரகாஷ் சொந்தமாய் அச்சகம் வைத்து 'பி.கே' புக்ஸ் என்று பதிப்பகமும் வைத்திருந்தார். அதில் பலரின் படைப்புகளை அம்பை, வண்ணநிலவன் என்று கொண்டு வந்திருக்கிறார். தன் படைப்பை தானே போட வெட்கினார் ப்ரகாஷ்.

"ஒரு படைப்பாளன் நான் என்ன எழுதியிருக்கேன்னா என்று விளக்கம் கொடுப்பது மாதிரியான அபத்தம் வேறொன்றும் இல்லை" என்று சொல்லும் ப்ரகாஷ் தன் படைப்பு பற்றி பேசியதை விட மற்றவர் படைப்பு பற்றி பேசியதுதான் அதிகம்.

"அறிவு ஜீவி" என அடையாளமிடும் அந்தக் கண்கள், படித்து படித்துக் கருத்துகளால் வீங்கிக் கிடந்தது



படிப்பகம்

www.padippakam.com

போன்ற அந்தத் தலை, எதையும் அலட்சியமாய் இகழும் சிரிப்பு. அந்தத் தாடி அதிலே விரல் நுழைத்து வாசிக்கும் லயம்... எவரையும் அசத்தும் அந்த பிருமாண்டமான தோற்றம், அம்சமான உடம்பு இதெல்லாம் மறக்க முடியாதவை. அந்த உடம்புக்கு அவ்வளவு சீக்கிரம் மரணம் வந்திருக்காது.

"சும்மா இலக்கிய கும்பல்", "ஒளிவட்டம்", "கதைசொல்லி", "தளி" இலக்கிய அமைப்பு, என்று பல அமைப்புகளை வித்தியாசமான கூட்டங்களாக்கி தஞ்சையில் பலரையும் வியக்க வைத்தவர் ப்ரகாஷ்.

அவர் நடத்திய பத்திரிக்கைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொன்றிலிருந்து வேறுபட்ட புதுமைகள்... கடித இலக்கியத்திற்கென்றே தமிழில் முதல் முறையாக 'சாளரம்'. மறுக்கப்பட்ட படைப்புகளை மையமாக வைத்து குயுக்தம், அவரது 'பாலம்' இதழ் நிகழ்த்திய பரபரப்பு. நீண்ட நாள் எழுதாமல் இருந்த எம்.வி.வெங்கட்ராம் அவர்களை அழைத்து மீண்டும் "காதுகள்" என்கிற நாவலை பாலத்தில் எழுத வைத்து, எம்.வி.வியின் புதிய பரிமானத்தை காட்ட வைத்தார். அந்த நாவலுக்குதான் சாகித்திய அகாடமி விருதும் கிடைத்தது.

கடைசியாக அவர் நடத்திய "வெ.சா.எ." வெங்கட்சாமி நாதன் என்கிற தனிப்பட்ட ஒருவரின் எழுத்துகளை மட்டுமே தாங்கி வந்த புது முயற்சி....

அவரது பத்திரிகை முயற்சி எல்லாவற்றிலும் ஏகப்பட்ட "நஷ்டம்" அது பற்றி சோர்வோ, கவலையோ ப்ரகாஷிடம் என்றென்றும் இருந்ததில்லை. அடுத்து, அப்புறம் என தாவி ஓடிக்கொண்டே இருந்தார்.

இன்னும் பல புதுமையான இதழ்களை கொண்டு வரும் அவரது கனவுலகம் முடிவற்றது. 'ப்ருகத்' என்கிற இதழுக்கான, பல வண்ண ஆப்செட் அட்டையை மட்டும் அடித்து வைத்திருந்தார். 'வண்டல்' என்கிற தஞ்சை மண்வாசனையோடு ஒரு இதழ் வரவேண்டி, பத்து வருடம் முன்பே அதற்கான தலையங்கம் எல்லாம் எழுதி வைத்திருந்தார்.... "இலக்கியம் பலருக்கு பொழுதுபோக்கு, ப்ரகாஷ்க்கு அதுதான் ஜீவன்."

அவரது வாழ்வில் எத்தனையோ வேலைகள் செய்திருக்கிறார். ரயில்வேயில் சிலநாள் சி.ஐ.டி. வேலை, அஞ்சலக குமாஸ்தாவாக சிலநாள், அச்சக அதிபராக, ரப்பர்ஸ்டாம்ப் வெண்டராக, பதிப்பக உரிமையாளராக, பழமண்டி ஏஜெண்டாக, பத்திரிகை முகவராக, முரசொலி ப்ரூப் ரீடராக, கண்ணதாசன் உதவியாளராக, பத்திரிகை நிருபராக, பிளாக் மேக்கராக, டிசைனராக, ஓட்டல் அதிபராக இப்படி பல வகைப்பட்ட தொழில்களில் ப்ரகாஷ் புழங்கியிருக்கிறார். எல்லாவற்றில் இருந்தும் வெளியே வந்திருக்கிறார்.

அவரை எந்தத் தொழிலோடும் ஒட்ட விடாமல் செய்தது அவரோடு இறுகப் பிணைந்து கிடந்த இலக்கிய மோகினிதான்.

அவர் இறந்ததற்கு முன் ஒரு மாதம் வெளியில் எங்கும் வரவிடாமல் செய்திருந்தது அவரை தின்று கொண்டிருந்த நோய். ப்ரகாஷ் வீட்டில் இருந்த அந்த தனிமைதான் அவரை அதிகமாக எழுதவும் வைத்தது. சுந்தர சுகன் 14ம் ஆண்டு மலருக்காக அயராது எழுதித்தந்த தஞ்சையின் 'முதல் சுதந்திரப் போர் என்ற மிக நுட்பமான அவரது குறுநாவலுக்கான வரலாற்று ஆதாரங்களை அந்த மூச்சிறைப்புக்கு இடையிலும் சரஸ்வதி மகால் சென்று சேகரித்து வந்திருக்கிறார். "புறா சோக்கு" நாவலை முடித்து விட்டதாகவும், சரிசெய்ய வேண்டியதுதான் பாக்கி என்றும் சொல்லியிருந்தார்.

சாதித்திய அகாடமிக்காக க.நா.சு. பற்றிய அவரது வாழ்வின் அபாரமான அத்தியாயங்களை மிக அற்புதமாக எழுதி முடித்திருந்தார். அந்த. க.நா.சு நூல் ப்ரகாஷின் எழுத்துப்பணியில் மிக உன்னதமானது. இன்னும், இன்னும் எழுத வேண்டும், எழுதி எழுதி எல்லாவற்றையும் சொல்லி விட வேண்டும் என்கிற துடிதுடிப்போடு இருந்த வேளையில்தான் ப்ரகாஷின் மரணம் நிகழ்ந்து விட்டது.

"அட எழுதி என்ன ஆகப்போகுது இப்போ, எவன் போடறேன்ங்கிறான் இப்போ" என்று எப்போதும் அல்ட்சியமாய் இருக்கும் ப்ரகாஷ், தீவிரப்பட்டு எழுத ஆரம்பித்த அந்த அற்புத வேளையில் காலம் அவரைக் களவாண்டு போனது. 27.7.2000 அன்று அந்த இலக்கிய நதி மரணம் என்னும் கடலுக்குள் முற்றிலுமாகப் புகுந்து உருமறைத்துக் கொண்டது.


**மணமகன் தேவை**

*பி.காம்., படிப்பும் தட்டச்சுப் பயிற்சியும் முடித்த 29 வயதுள்ள பெண்ணுக்கு மணமகன் தேவை. சாதி, மதம் தடையில்லை.*

*தமிழ் இன உணர்வினால் உந்தப்பட்டு ஈழவிடுதலைக்காதரவான பிரச்சாரப் பணிகளில் ஈடுபட்டிருந்த இம் மணமகளது தந்தை காவல் துறையால் பழிவாங்கப்பட்டு, வழக்குப்போடப்பட்டு அரசு வேலையை இழந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.*

*தொடர்பு முகவரி:*

*தங்கத்துரை சாமுவேல்*
*37 சுந்தரம் நகர்,*
*6ஆவது குறுக்குத் தெரு, மேற்கு விரிவாக்கம்*
*மருத்துவக் கல்லூரி சாலை, தஞ்சாவூர் - 613 004.*




படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்நாட்டுக்கு தில்லி அரசின் நிதி வெட்டு

- வடமலை

தில்லி அரசு நியமித்த பதினோராவது நிதிக்குழுவின் பரிந்துரைகள் தமிழ்நாட்டை வஞ்சிப்பதாக உள்ளன. தமிழகம் மட்டுமின்றி ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய தென்மாநிலங்களும் இப்பரிந்துரையால் பாதிக்கப்பட்டுள்ளன. இப்பரிந்துரைகள் பற்றி மாநில அரசுகளின் கருத்தைக் கேட்காமலேயே ஒருதலைப்பட்சமாக தில்லி அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்திய அரசமைப்பு சட்டப்படி 'மாநில' அரசுகளுக்கு விற்பனைவரி தவிர மற்ற வகை வரி விதிக்கும் அதிகாரம் இல்லை. எல்லா வரிகளும் தில்லி அரசுக்கே சொந்தம். ஆயினும் 'மாநில' அரசுகளுக்கே மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்புகள் அதிகம். எனவே செலவும் அதிகம். தில்லி அரசு பார்த்து மாநிலங்களுக்கு பிச்சை போடுகிற ஏற்பாடே உள்ளது. தில்லி அரசின் வரிகளில் ஒரு சில வரி இனங்களே மாநில அரசுகளோடு பகிர்ந்து கொள்ளக் கூடியவை.

தில்லி அரசின் வரி வருவாயிலிருந்து மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யவும், இந்த ஒதுக்கீட்டுத் தொகையை மாநிலங்களுக்கு இடையே பகிர்ந்தளிப்பதற்கான வழிவகைகள் காணவும் அரசமைப்பு சட்டப்படி தில்லி அரசு ஐந்தாண்டுக்கு ஒருமுறை நிதிக்குழுவை (Finance Commission) நியமிக்கிறது. இந்த நிதிக்குழுவை நியமிப்பதிலோ, அதன் அலுவல் வரம்பை தீர்மானிப்பதிலோ 'மாநில' அரசுகளின் கருத்தை தில்லி அரசு கேட்பதில்லை.

இப்போது 2000 - 2005 - ஆம் ஆண்டுகளுக்கு நிதிப் பகிர்வை முடிவு செய்ய தில்லி அரசு நியமித்த 11ஆவது நிதிக்குழு தனது பரிந்துரையை அரசுக்கு அளித்தது. அவசர அவசரமாக தில்லி அரசு இதனை ஏற்பதாக அறிவித்துள்ளது.

மாநிலங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட நிதியில் 10வது நிதிக்குழு தமிழ்நாட்டுக்கு அளித்த பங்கு 5.8% இதிலேயே பல குறைபாடுகள் உண்டு. ஆனால், இப்போதைய 11ஆவது நிதிக்குழு அதைவிட மோசமாக தமிழ்நாட்டுக்கு 4.97% நிதி ஒதுக்கியுள்ளது. 2000-2005 ஐந்தாண்டு காலத்திற்கு இந்த நிதிவெட்டு 4500 கோடி ரூபாய் ஆகும். அதாவது ஆண்டுக்கு 900 கோடி ரூபாய் வெட்டப்பட்டுள்ளது.

தில்லி அரசின் **மொத்த வரிவருவாயிலிருந்து** குறைந்தது 33% மாநிலங்களுக்கு வேண்டும் என்பது அனைத்து மாநில அரசுகளின் கோரிக்கையாகும். கடந்த 10ஆவது நிதிக்குழு தில்லி அரசின் **மொத்த வருவாயில்** 29% மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட பரிந்துரைத்தது.

ஆனால் 11ஆவது நிதிக்குழு தில்லி அரசின் வரிவருவாயில் வழக்கமான செலவு போக உள்ள **நிகர வருமானத்தில்** 29.5% மாநிலங்களுக்கு பகிர்ந்தளித்துள்ளது. மொத்த வரி வருவாயில் இது 28% ஆகும். அதாவது ஒட்டுமொத்தமாக மாநிலங்களின் பங்கு ஒரு விழுக்காடு வெட்டப்பட்டுள்ளது.

இந்த ஒதுக்கீட்டை மாநிலங்களிடையே பகிர்ந்தளிப்பதில் தமிழ்நாட்டை வஞ்சித்துள்ளது நிதிக்குழு. மாநிலங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட நிதியில் 10வது நிதிக்குழு தமிழ்நாட்டுக்கு அளித்த பங்கு 5.8% இதிலேயே பல குறைபாடுகள் உண்டு. ஆனால், இப்போதைய 11ஆவது நிதிக்குழு அதைவிட மோசமாக தமிழ்நாட்டுக்கு 4.97% நிதி ஒதுக்கியுள்ளது. 2000-2005 ஐந்தாண்டு காலத்திற்கு இந்த நிதிவெட்டு 4500 கோடி ரூபாய் ஆகும். அதாவது ஆண்டுக்கு 900 கோடி ரூபாய் வெட்டப்பட்டுள்ளது.

பின் தங்கிய மாநிலங்களை கைதூக்கி விடுவது என்ற பெயரால் கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்கிறது தில்லி அரசு. மக்கள் தொகை பெருக்கம், கல்வியில் பின்தங்கிய தன்மை போன்றவற்றால் பாதிக்கப்பட்டதாகக் கூறி பீகார், உ.பி. மேற்கு வங்கம், ராஜஸ்தான் முதலிய மாநிலங்களுக்குக் கூடுதல் பங்கீடு வழங்கப்பட்டுள்ளது. அதற்கேற்றாற்போல் தென் மாநிலங்களின் பங்கு குறைக்கப் பட்டுள்ளது.

குடும்பக் கட்டுப்பாடு, கல்வி, சமூக நலத்திட்டங்கள், நிதி ஆதாரங்களை சொந்த



படிப்பகம்

www.padippakam.com

முறையில் திரட்டிக் கொள்வது, ஆகியவற்றில் ஒப்பீட்டளவில் திறனுடன் செயல்படும் தமிழகம், கேரளம் போன்ற மாநிலங்கள் தண்டிக்கப்படுவது எந்த வகையிலும் நியாயமில்லை. பின்தங்கிய மாநிலங்களுக்கு உதவ வேறு தற்காலிக சிறப்பு திட்டங்களைத்தான் தில்லி அரசு கைக்கொள்ள வேண்டும்.

இவ்வளவு பெரிய வஞ்சகத்தை பா.ஜ.க. கூட்டணிக் கட்சியான தி.மு.க. தில்லி அமைச்சரவைக் கூட்டத்தில் எதிர்க்காதது ஏன்? நாற்காலி அரசியலுக்கு இவர்கள் எதையும் செய்வார்கள் போலும்.

தில்லி அரசு மாநிலங்களுக்கு அளிக்க வேண்டிய இன்னொரு நிதிப்பங்கீட்டிலும் கை வைத்துள்ளது.

வரி ஏய்ப்பு செய்தவர்களிடமிருந்து கணக்கில் வராத வருமானத்திற்கு வரி தண்டுவதற்காக என்று தில்லி அரசு 1997ஆம் ஆண்டு "தானாக முன்வந்து கணக்கு காட்டும் திட்டம்" என்ற ஒன்றைக் கொண்டு வந்தது. இந்தக் கறுப்புப் பணக்காரர்களுக்கு சலுகை விகிதத்தில் வரி விதிக்கப்பட்டது. இத் திட்டத்தில் திரளும் வருமானத்தில் 77.5% ஐ மாநிலங்களுக்கு. அளிக்க தில்லி அரசு ஒத்துக் கொண்டது.

இப்போது இதிலிருந்து தில்லி அரசு பின் வாங்கியுள்ளது. பத்தாவது நிதிக்குழு பரிந்துரைத்த 29% பங்கீட்டில் இந்தத் தொகையும் அடங்கும் எனக் கூறுகிறது. இது நியாயமற்றது. ஏனெனில், "தானாக முன்வந்து கணக்கு காட்டும் திட்டம்" மூலம் வெளிவந்த பணம், கடந்த பல ஆண்டுகளாக வரியாகக் கட்டப்படாத கறுப்புப் பணமாகும்.

ஒரு வேளை முறையாக இவர்கள் வரிகட்டியிருந்தால் அதில் மாநிலங்கள் தமது பங்கைப் பெற்றிருக்கும். அதாவது இது மாநிலங்களுக்குக் கொடுபடாத பங்காகும் (deffered share). ஆனால் 10- ஆவது நிதிக்குழு 1994-1999 ஐந்தாண்டுக்கான வரிவருமானப் பங்கீடுபற்றி மட்டுமே பரிந்துரைக்க முடியும். எனவே, சென்ற ஐந்தாண்டுக்கான 29% பங்குத்தொகையிலிருந்து "தானாக முன்வந்து வரிகட்டும் திட்டத்தின்" மூலம் வந்த வருமானப் பங்கை தனியாகவே வைக்க வேண்டும். 29% க்கு உட்பட்டதாக இத்தொகை இருக்க முடியாது.

ஆனால், தில்லி அரசு வல்லடியாக இந்த நியாயத்தை மறுத்து விட்டது. இதனால் மாநிலங்களுக்கு வரவேண்டிய நிலுவைத் தொகை ரூ 3500கோடி மறுக்கப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி மாநிலங்கள் தில்லி அரசுக்கு. ரூ 526 கோடி திருப்பிச் செலுத்த வேண்டுமாம்!

மாநிலங்களிடைக் குழுவைக் கூட்டி பாதிக்கப்பட்ட மாநில அரசுகளின் கருத்தைக் கேட்டு இந்த பாதிப்பை தில்லி அரசு உடனடியாக சரி செய்ய வேண்டும்.

மாநில அரசுகள் தில்லியிடம் நிதி கேட்டு கெஞ்சுவதைவிடுத்து, அனைத்து வரிகளையும் விதித்து, வசூலிக்கும் அதிகாரம் பெறப் போராட வேண்டும். தில்லி ஒன்றிய அரசுக்கு, ஒன்றியத்தில் இணைந்துள்ள மாநிலங்கள் பார்த்து நிதி அளிக்கும் நிலை வரவேண்டும்.

**மணமக்களுக்கு வாழ்த்து**

தஞ்சை, கோரிகுளம் புதுத்தெரு நினைவில் நிற்கும் ந.ஆறுமுகம் - திருமதி புஷ்பம் ஆகியோரின் புதல்வரும் தோழர் ஆ.வேலாயுதம் அவர்களின் தம்பியுமான செல்வன் **ஆ. ஆனந்தனுக்கும்,** கம்பர் நத்தம் திரு சி.துரைராசு - திருமதி பானுமதி ஆகியோரின் புதல்வி செல்வி **து. ஜெயந்திக்கும்** திருமண விழா 7.7.2000 அன்று தோழர் இராசேந்திரசோழன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. மணமக்கள் சார்பில் தமிழர் கண்ணோட்ட வளர்ச்சிக்கு ரூபாய் 250 வழங்கினார்கள்.

மணமக்கள் நீடு வாழ்க.

**மணமகள் தேவை**

35 வயதுள்ள பள்ளி முதல்வராகப் பணியாற்றும் எம்.ஏ., பி.எச்டி., படித்துள்ள மணமகனுக்கு மணப்பெண் தேவை.

சாதி, மதம், வரதட்சணை தடையில்லை. விதவையாய் இருந்தாலும் தடையில்லை.

தொடர்புக்கு
மு அய்யப்பன்
17 காமராசர் இரண்டாவது தெரு,
பீபி குளம், மதுரை - 625 002.

**முகவரி**

சாதி மறுப்புத் திருமணம் செய்து கொள்ள முன்வருவோர் அணுகவேண்டிய முகவரி :

கோ.ச. சோலைமாரியப்பன்
தமிழர் உறவின் முறை,
73 துக்காம்பாளையம் தெரு,
குடந்தை,
தஞ்சை மாவட்டம்.



படிப்பகம்

www.padippakam.com

# இலண்டனில் பெ.மணியரசன் உரை

ஐரோப்பிய நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களின் எழுச்சி விழாக்களில் கலந்து கொள்வதற்காக த.தே.பொ.க. பொதுச் செயலாளர் பெ.மணியரசன் ஜெர்மனி, இங்கிலாந்து, டென்மார்க், நார்வே, நெதர்லாந்து, பிரான்சு, ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்தார்.

ஓயாத அலைகள் மூன்றாவது கட்டச் சமரில் ஆணையிறவுப் பெருந்தளத்தை சிங்களர் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுதலைப்புலிகள் கைப்பற்றியதால் ஏற்பட்ட உணர்ச்சி வெள்ளம் புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களிடம் கரைபுரண்டு ஓடுகிறது.



விடுதலைப் புலிகள் இறுதி வெற்றியை ஈட்ட எல்லா வழிகளிலும் உதவிடும் வேகத்தில் அங்கு தமிழர்கள் பணியாற்றுகிறார்கள். கலைவிழாக்களையும் எழுச்சி விழாக்களையும் நடத்துகிறார்கள்.

ஜெர்மனியில், ஸ்டுட்கார்ட், கோர்ண நகரங்களிலும், இங்கிலாந்தில் இலண்டனிலும், டென்மார்க்கில் ஹேர்னிங் நகரிலும், நார்வேயில் ஒஸ்லோவிலும், நெதர்லாந்தில் தி ஹேக் நகரிலும்; பிரான்சில், துலூஸ், பாரீஸ் நகரங்களிலும் ஸ்விஸில் ஜுரிச்சிலும் நடந்த கலைப் பண்பாட்டு எழுச்சி விழாக்களில் கலந்து கொண்டு பெ.மணியரசன் பேசினார்.

கலைமாமணி புஷ்பவனம் குப்புசாமி - அனிதா குப்புசாமி குழுவினரின் எழுச்சி இசை எல்லா இடங்களிலும் பெரும் வரவேற்புடன் நிகழ்ந்தது.

இலண்டன் மாநகரில் வெம்பிலி கருத்தரங்கக் கூடத்தில் அன்று நடந்த எழுச்சி விழாவில் மூவாயிரம் பேர் கூடியிருந்தனர். அதுதான் அந்த அரங்கத்தின் கொள்ளளவு. அதற்கு மேல் வந்த மக்களை மண்டப நிர்வாகிகள் திருப்பி அனுப்பி விட்டனர். IBC தமிழ் வானொலியில் நிகழ்ச்சிகள் நேரடி ஒலிபரப்பு செய்யப்பட்டதால் வீட்டிலிருந்தவாறே கேட்குமாறு கூட்ட ஏற்பாட்டாளர்கள் வானொலி மூலம் அறிவிப்புக் கொடுத்தனர்.

இலண்டனில் தோழர் பெ. மணியரசன் ஆற்றிய உரை வருமாறு:

வரலாற்று விந்தைகளைக் கொண்ட இலண்டன் மாநகரத்தில் நாம் கூடியுள்ளோம். நான் விந்தை என்று குறிப்பிட்டது தேம்ஸ் ஆற்றிலே தொங்கிக் கொண்டிருக்கும் கோபுரப் பாலத்தை நினைத்துக் கொண்டு அல்ல. ஜனநாயகத்தின் முதல் குரல் என்று வர்ணிக்கப்படும் மக்னகார்ட்டா தொடங்கி Bill of Rights எனப்படும் மக்கள் உரிமைச் சட்டம் வரை இயற்றி மக்களாட்சியின் மகத்துவத்தை உலகிற்கு எடுத்துக் காட்டிய இங்கிலாந்தின் தலைநகரத்தில் மன்னராட்சியின் தொலு பீடங்கள் இன்றும் கோலோச்சும் முரண்பாட்டை வைத்து இந்த நகரம் விந்தையான நகரம் என்று நான் குறிப்பிடவில்லை.

உலகத்தின் முதற்பெரும் ஏகாதிபத்தியத்தின் தலைநகரான அதே இலண்டன் மாநகரம் தான். அந்த நாள் தொட்டு இந்தநாள் வரை பூமிப் பந்தெங்கும் போராடும் புரட்சியாளர்களின் சரணாலயமாக விளங்கிவருகிறது. ஒரு பக்கம் ஏகாதிபத்தியச் சூறைக்காற்று, மறுபக்கம் ஜனநாயகத்தின் இளந்தென்றல்! இதனால்தான் இந்த நகரத்தை விந்தையான நகரம் என்று குறிப்பிட்டேன். மாபெரும் புரட்சியாளரும் கம்யூனிசத் தத்துவத்தின் தந்தையுமான காரல் மார்க்சை அவர் பிறந்த ஜெர்மனியும் புகுந்த பிரான்சும் விரட்டின. இறுதியில் அவருக்கு அடைக்கலம் தந்தது இதே இலண்டன்தான்.

ஈழவிடுதலைப் புரட்சியின் ஒப்பற்ற தளபதியான நம் அன்பு உடன் பிறப்பு தளபதி கிட்டு அவர்கள் தங்கிப் பணியாற்றத் தேர்ந்தெடுத்த இடம் இதே இலண்டன்தான் ஆனால் ஐயகோ, அவருக்கு அடைக்கலம் தரமறுத்துவிட்டது இதே இலண்டன். இதையெல்லாம் எண்ணித்தான் இலண்டன் விந்தையான நகரம் என்று குறிப்பிட்டேன்.



படிப்பகம்

www.padippakam.com

தளபதி கிட்டு அவர்களுக்கு அடைக்கலம் தரவில்லை. என்பதற்காக இந்த நகரத்தை நான் வெறுக்கவில்லை. பல்லாயிரக்கணக்கான தமிழர்களுக்கு இந்த நாடு அடைக்கலம் தந்திருக்கிறது. அதற்காக இந்த நாட்டிற்கும் நகரத்திற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலண்டன் மாநகரத்தில் தங்கி தளபதி கிட்டு அவர்கள் பணியாற்றிய காலம் ஒரு பொற்காலம். ஐந்து கண்டங்களிலும் சிதறிக்கிடக்கும் புலம் பெயர்ந்த தமிழர்களை ஓர் அமைப்பின் கீழ்க் கொண்டு வர அவர் அப்போது எடுத்த முயற்சியின் பலன்தான் இன்று நாம் இங்கே கூடியிருப்பது.

புகழ்பெற்ற வெம்பிலிக் கருத்தரங்க மண்டபத்தில் நடைபெறும் இந்த எழுச்சி விழாவிற்கு அலை அலையாக வந்துள்ளீர்கள். ஏனெனில் இது அலைகளின் கொண்டாட்டம். இங்கு போடப்பட்டிருக்கும் ஆசனங்கள் கூட அலை அலையாகப் பொருத்தப்பட்டுள்ளன.

கடலுக்குள் ஆயிரம் அலைகள் காத்துக் கிடக்கின்றன. கரையேறி வந்தவை . மூன்றே மூன்று அலைகள். அவற்றில்தான் ஆனைகள் அடித்துச் செல்லப்பட்டன. ஓநாய்கள் இழுத்துச் செல்லப்பட்டன. அந்த வெற்றியைக் கொண்டாடத்தான் இங்கே கூடியிருக்கிறோம்.

வெற்றி என்னும் போது நாம் இறுதி வெற்றியை இனிமேல்தான் பெறவேண்டும். பாலைவனப் பயணத்தின் நடுவிலே வந்த பசுஞ்சோலை போல நீண்ட நெடிய விடுதலைப் போராட்டத்தின் இடையே இளைப்பாறிக் கொள்ள கிடைத்த வெற்றி ஆனைஇரவு முகாம் மீட்ட வெற்றி.

ஆனால் உங்கள் சோகத்தை நானறிவேன்; ஐரோப்பிய உடுப்புகளுக்குள் தமிழீழ நினைவுகளைச் சுமந்துகொண்டு வாழ்வதை நானறிவேன். இதோ நமது எரிமலை ஏட்டில் கவிஞர் வியாசன் பாடுகிறார்:

பனைமரமே நீ நலமா?
பக்கத்தே கிளை பரத்தி
நிழல் விழுத்தி நிற்கும் பூவரசும் சுகம்தானா?
வளவெங்கும் பூத்து வாசலிலும் பூச்சொரியும்
வேப்பமரம் சுகமா?
கரிக்குருவி,
புலுனி,
புறா,
யாவும் சுகம்தானா?
நானிருந்த போது வந்து
கூவும் குயில் நலமா? வரையிலே கூடுகட்டி
கன்னற் குரலாலென் காதினிலே தேன்சொரிந்த
வண்ணக் குருவியின்னும் வாழ்கிறதா என்வீட்டில்?
எல்லாம் உளதா? ஏதேனும் குறைகிறதா?
நள்ளிரவில் கேட்கிறதாம் நாயோலம்.
நாம் திரிந்த
நெல்லுவயலெங்கும் நெரிஞ்சிப்பூ பூத்துள்தாம்
சாகும் பொழுதெந்தன் தாய்வீட்டில் சாகேனோ?
வேகும் பொழுதென்னூர் வெளிச்சுடலை வேகேனோ?

கூடுகலைக்கப்பட்ட குருவிகள் போல் சிங்களரின் இனப் படுகொலை தாங்கமுடியாமல் உயிர் ஓலம் எழுப்பி நாடுகள் பல கடந்து இங்கு வந்து சேர்ந்திருக்கிறீர்கள். இப்படி துன்பங்களைச் சுமப்பதற்கு நீங்கள் என்ன தவறு செய்தீர்கள்?

சிங்களரைப் பார்த்து, நீங்களும் வாழுங்கள் எங்களையும் வாழவிடுங்கள். என்று சொன்னீர்கள். இது குற்றமா?

சிங்கள மொழி மட்டுமே ஆட்சி மொழி என்று சட்டம் இயற்றி தமிழ் மொழியை அடிமைப்படுத்தினார்கள். தமிழர்களின் பொருளாதார உயிர்ப்பாக விளங்கிய வேலை வாய்ப்பைப் பறிக்கும் வகையில் மாணவர்களின் உயர்கல்வியைத் தடுக்க விதிகள் செய்தார்கள். சிங்கள மாணவர்களுக்குக் குறைந்த மதிப்பெண்களும் தமிழ் மாணவர்களுக்கு அதிக மதிப்பெண்களும் என்று நிர்ணயித்து மேற்கல்விக்கு செல்வதற்கு தடை போட்டார்கள் இதைத் தரப்படுத்துதல் என்றார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக தமிழர்களின் தாயகத்தை, அடையாளத்தை சிங்களர்கள் மறுத்தார்கள் . மறுப்பதோடு மட்டுமின்றி அழிக்கவும் செய்தார்கள்.

1983 ஜுலை மாதம் என்ன நடந்தது? வரலாற்றில் அது கருப்பு ஜுலை என்று பதிவாகியிருக்கிறது. காட்டிலே மனிதர்கள் விலங்குகளை வேட்டையாடுவார்கள் ஆனால் அன்று நாட்டிலே விலங்குகள் மனிதர்களை வேட்டையாடின.

எங்கு பார்த்தாலும் மனிதச் சதைகள் - மனித உறுப்புகள் சிதறிக் கிடந்தன. தமிழன் கறி கிலோ இவ்வளவு ரூபாய் என்று சிங்களன் பலகை எழுதி மாட்டியிருந்தான். வெளிக்கடைச் சிறையிலே போராளிகள் படு பயங்கரமாக கொலை செய்யப்பட்டார்கள். பல்லாயிரக்கணக்கானோர் உயிர் பறிக்கப்பட்டது. நம் சகோதரிகள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

நாடெங்கும் ஓலம்; அழுகுரல்; ஒப்பாரி! திக்கற்றுப் போனோமே என்ற திகைப்பு! அப்பொழுதுதான் ஒரு குரல் எழுந்தது. அந்தக் குரல் ஓர் இளைஞனிடமிருந்து வந்தது,

நெஞ்சை நிமிர்த்துங்கள் தோழர்களே - இனி
நேருக்கு நேர் நின்று பார்த்திடுவோம் - சிங்கள
வஞ்சகரை அவர்
வாசலில் சென்று வெற்றி கொள்வோம்!

என்றது அந்தக் குரல்! அதுதான் வீரத் தளபதி பிரபாகன் குரல்.



படிப்பகம்

www.padippakam.com

ஈழத்தில் தமிழர்களுக்கு எத்தனை தலைவர்கள் இருந்தார்கள். நாடறிந்த தலைவர்கள்; உலகறிந்த தலைவர்கள். ஈழவிடுதலைப்போருக்கு எந்தெந்த நாட்டிலிருந்து படை உதவி வரும் என்று பட்டியல் போட்ட தலைவர்கள். இவர்களெல்லாம் ஜுலை இனப் படுகொலை நேரத்தில் எங்கோ ஒதுங்கி விட்டார்கள். வரலாற்றின் வேகத்திற்கு அவர்களால் ஈடுகொடுக்க முடியவில்லை.

இதே இங்கிலாந்து நாட்டில் ஒரு கதை உண்டு. குதிரைப் பந்தயம் நடந்து கொண்டு இருந்தது. மைதானத்தைச் சுற்றி ஆயிரக்கணக்கானோர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். குதிரைகள் ஒன்றையொன்று விஞ்சி ஓடிக் கொண்டிருந்தன. தேசிங்கு ராஜன் கதையில் வரும் நீலவேணிக் குதிரை போல, ராஜபுதனத்து சேட்டக் குதிரை போல அவைகள் வேகமாக ஓடிக்கொண்டிருந்தன.



ஜெர்மன் ஸ்டுட்காட் நகரத்தில் 17.6.2000 அன்று நடந்த எழுச்சி விழாவில் தமிழிசைப் பாணர் தேனிசை செல்லப்பா குழுவினர் பாடிய தமிழர் தாகம் என்ற குறுந்தட்டை பெ..மணியரசன் வெளியிடுகிறார். ஈழப் போர் முனையில் வீரச் சாவடைந்த போராளி ஒருவரின் அன்னை திருமதி சிவா அவர்கள் குறுந்தட்டைப் பெற்றுக் கொள்கிறார்கள். அருகில் இருப்பவர் ஸ்டுட்கார்ட் பொறுப்பாளர் திரு சிவநேசன் ஆசிரியர்.

ஒரு குதிரை எல்லாக் குதிரைகளையும் முந்திக் கொண்டு முன்னால் ஓடியது. இன்னும் சில அடி தூரம் ஓடினால் வெற்றிக் கோட்டைத் தாண்டி விடலாம். அப்பொழுதுதான் முதுகிலே ஜாக்கி இருக்கிறானா என்று திரும்பிப் பார்க்கிறது குதிரை. குதிரை ஓடிய வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் ஜாக்கி கீழே விழுந்து கிடக்கிறான். ஜாக்கி இல்லாமல் வெறும் குதிரையாக வெற்றிக் கோட்டைத் தாண்டினால் ஒத்துக் கொள்வார்களா நம் வெற்றியை என்று குதிரை நினைத்தது. கணநேரத்தில் வேடிக்கை பார்க்கும் கூட்டத்திற்குள் புகுந்து ஒருவரைத் தூக்கி முதுகிலே போட்டுக் கொண்டு ஓடி வெற்றி பெற்றது குதிரை.

இதே போல்தான் ஈழத்தில் வரலாற்றுக் குதிரை ஓடிய வேகத்தில் தாக்குப் பிடிக்க முடியாமல் அதன் மீது அமர்ந்திருந்த தலைவர்கள் விழுந்து விட்டார்கள். அப்பொழுது குதிரை வந்து தன்னை தூக்கட்டும் என்று காத்திருக்காமல் திடீரென்று பாய்ந்து குதிரையின் முதுகில் உட்கார்ந்து கொண்டு அதன் பிடரியைப் பிடித்து ஓட்டியவர்தான் தலைவர் பிரபாகரன்.

அவர் போர் ஆற்றலில் மட்டுமல்ல அரசியல் ராஜ தந்திரத்திலும் வல்லவராக விளங்குகிறார். உலகத்தில் வெளியாகும் முக்கிய இராணுவ நூல்களையெல்லாம் அவர் உடனடியாகப் படித்து விடுகிறார். அவரைப் படிக்க உலகம் காத்துக் கொண்டிருக்கிறது.

ஓயாத அலைகள் 3ன் வெற்றிக்குப் பிறகு - ஆனையிறவு முகாமைக் கைப்பற்றிய பிறகு விடுதலைப் புலிகள் மீது உலகத்தின் பார்வை மேலும் அழுத்தமாகத் திரும்பியுள்ளது. ஆனையிறவு சமர் விடுதலைப் புலிகளின் போர் ஆற்றலுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு.

மார்ச் 26 ஆம் நாள் மாலை நேரம். கட்டைக் காடு, வெற்றிலைக்கேணி, ஆழியவளை, கட்டைக்கரை ஓரமெங்கும் போராளிகள்; அவரவர் கூடவேண்டிய இடங்களில் கூடி நிற்கின்றனர். சமர் முனையில் வெவ்வேறு கடமைகளுக்காகப் பிரிந்து செல்லவேண்டியவர்கள். விடை கொடுப்பதும் விடை பெறுவதும் என ஒரே ஆரவாரம், நகைச்சுவைப் பேச்சு, கும்மாளம்! ஆனால் இவர்கள்தான் சமர் முனையில் கர்ண கடூரமாக சண்டையிடும் போராளிகள்.

இதோ கடலில் ஓர் காட்சி விடுதலைப் புலிகளின் படகுகளை எதிரியின் 16 டோரா படகுகள் சூழ்ந்து கொண்டு பீரங்கி மழை பொழிகின்றன. ஆழ்கடலில் எதிரியின் கட்டளைக் கப்பல்! வேட்டுச் சத்தங்களால் கடல் அதிர்கிறது. விடுதலைப் புலிகளின் படகுகள் கடலைக் கிழித்துக் கொண்டு சுழல்கின்றன. வானத்தில் தீக் கோளங்கள் பறந்தன. ஆனாலும் இறுதியில் சிங்களனின் படகுகளை சுக்கு நூறாக்கிப் பாதை திறந்து கொண்டு முன்னேறினர் விடுதலைப்புலிகள்.

தரையிலே இன்னொரு காட்சி! ஏப்ரல் இரண்டாவது வாரம். ஏ.9 என்றும் கண்டி வீதி என்றும் அறியப்படும் கண்டியிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் நெடுஞ்சாலை. காலை 6.30 மணி. கொடி காமத்திலிருந்து சிங்களப் படை முன்னேறி வருகிறது. அதை வழிமறித்துத் தாக்க வேண்டிய பொறுப்பு சோதியா மகளிர் படை அணிக்கு வழங்கப்பட்டிருந்தது. சோதியா படையணியின் தளபதி லெப்.கேணல் துர்கா!

எதிரியின் படையணியை வழிமறித்துத் தாக்க வேண்டும். எதிரியின் டாங்கி, விடுதலைப் புலிகளின்



படிப்பகம்

www.padippakam.com

நிலைகளைத் தாக்கி அழித்துக் கொண்டு முன்னேறுகிறது. கணிசமான போராளிகள் வீரச்சாவடைந்தனர். காயமடைந்தவர்கள் பலர்.

தடுத்து நிறுத்த டாங்கி எதிர்ப்பு ஆயுதம் சோதியா மகளிர் படைஅணியிடம் இல்லை. என்ன செய்வது? ஒரு பெண் போராளி அப்பொழுதுதான் புதிதாக போர் முனைக்கு வந்தவள் பதுங்கு குழியிலிருந்து நடப்பதை பார்த்துக் கொண்டு இருக்கிறாள். ஒரு முடிவுக்கு வந்தவளாக பதுங்கு குழியிலிருந்து எழுந்து தனது கை எறி குண்டை டாங்கியை நோக்கி வீசினாள். டாங்கி பாதை மாறிச் சென்று தப்பித்தது. மேலும் அது முன்னேறியது. அதைப் பார்த்த அந்த படைப் பிரிவின் தலைவி செல்வி பதுங்கு குழியிலிருந்து எழுந்து டாங்கியின் அருகே ஓடிச் சென்று தனது கைக் குண்டை வீசி எறிந்தாள். பீரங்கியின் குண்டு மழை அவளைச் சாய்த்தது. வீரச் சாவடைந்தாள். ஆனால் எதிரியின் டாங்கி அத்துடன் நின்றது. அலைஅலையாக போராளிகள் வருவார்களோ என்று அஞ்சி டாங்கி படை அத்தோடு நின்றது. டாங்கியும் சேதமடைந்தது.

விடுதலைப் புலிகள் ஆயுதத்தை வைத்து சண்டை செய்கிறார்கள். அதனால் முடியாத போது உயிரைவைத்து சண்டை செய்கிறார்கள்.

ஆனையிறவு மீட்பின் இறுதிச் சமர் ஏப்ரல் 22ம் நாள் அல்லிப்பளை - கிலாளி நீரேரியில் நடந்தது. அந்த நீரேரியில் ஐந்தாண்டுகளுக்கு முன் நடந்தது நினைவிருக்கிறதா? 1995ல் சூரியக் கதிர் என்று சந்திரிகாவால் பெயர் சூட்டப்பட்டு நம் மக்களின் யாழ் தாயகத்தை ஆக்கிரமித்ததே சிங்களப் படை, அப்போது எம் மக்கள் உயிரையும் மானத்தையும் காத்துக் கொள்ளும் நோக்கோடு முதியவர், பெண்கள் என எல்லோரும், பலர் குழந்தைகளை தூக்கிக் கொண்டு படகின்றி இதே நீரேரி வழியாக நடந்து சென்றார்கள்.

அடைக்கலம் தேடி வன்னிப் பெருநிலத்திற்கு புறப்பட்ட அப்பாவிப் பெண்களையும் ஆண்களையும் சிங்கள வெறியர்கள் விமானத்தில் இருந்து குண்டு வீசிக் கொன்றார்கள். இரத்தத்தால் சிவந்தது நீர் ஏரி. அடையாளம் தெரியாத பிணங்கள் மிதந்து அலைந்தன.

அதே நீரேரியில் இப்பொழுது சிங்கள படை சிக்கிக் கொண்டது. பிணம் பிணமாய் விழுந்தனர். கையை இழந்து ஓடினர். கால்களை இழந்து மிதந்தனர். மறுபடியும் நீரேரி இரத்தத்தால் சிவந்தது. தன் மடியிலேயே தன் மக்களை பலிகொண்ட பகைவர்களை பழி தீர்த்துக் கொண்டது நீரேரி. அவலத்தை கொடுத்தவன் அவலத்தைப் பெற்றுக் கொண்டான். துன்பத்தை விதைத்தவன் சோகத்தை அறுவடைசெய்தான். எஞ்சியோர் தலைதெறிக்க ஓடினர். ஏப்ரல் 22 நண்பகலோடு அவர்கள் ஆனையிறவு முகாமை விட்டு முற்றிலுமாக ஓடிவிட்டார்கள்.

ஏப்ரல் 23 காலை மணி 9.52. வென்று வாழ்வதே தனது விதி என்று விதித்துக் கொண்ட தமிழர்கள் சார்பாக ஆனையிறவில் கேணல் பானு புலிக் கொடி ஏற்றினார்.

அடுத்த நாட்களில் பளையைக் கைப்பற்றினர். ஏப்ரல் 28 காலை பளை அருகே கேணல் பால்ராஜ் - கேணல் தீபன் - கேணல் பானு மூவரும் கண்டி வீதியில் கைகுலுக்கிக் கொண்டார்கள். அத்தோடு ஆனையிறவுச் சமர் நிறைவடைந்தது.

விடுதலைப்புலிகள் கொரில்லாக்கள் மட்டுமல்ல. கொரில்லாப்படையாக இருந்து மரபுப் படையாக வளர்ந்தவர்கள். என்பதை உலகம் கண்டுகொண்டது. ஆனையிறவு வெற்றிக்கு ஈடாக வரலாற்றில் வியட்நாம் விடுதலைப் போரில் வியட் காங்குகள் அடைந்த தியன் - பியன் - பூ (Dien-Bien-Phu) வெற்றியை இராணுவ நோக்கர்கள் கணிக்கிறார்கள்.

பிரெஞ்சு ஏகாதிபத்தியப் படை வியட்நாமை ஆக்கிரமித்திருந்த காலம். மாபெரும் புரட்சியாளர் ஹோச்சிமின் தலைமையில் வியட்நாமியர்கள் போரிட்டார்கள். வியட்நாம் விடுதலைப் போராளிகளான வியட்காங்குகளின் முகாம்களுக்குச் செல்லும் வழங்கல் பாதையை (Supply route) தடுக்கும் வகையில் சிமோன் மற்றும் நட்சா பிரதேசத்தில் பிரெஞ்சுப் படை முகாம் அமைத்தது. இதுதான் தியன் - பியன் - பூ

வியட்காங் படையினர் இந்த முகாமைச் சுற்றி வளைத்து தாக்கித் தகர்த்தனர். பிரெஞ்சுப் படையின் தளபதி டு-காஸ்டரிஸ் தலைமையில் பதினாறாயிரம் பிரெஞ்சுப் படையாட்கள் வியட்நாம் புரட்சிப் படையிடம் சரண் அடைந்தார்கள். இந்த வெற்றிதான் வியட்நாம் விடுதலைக்கு திறவுகோலாய் அமைந்தது. அதேபோல் ஆனையிறவில் பதினைந்தாயிரம் சிங்களப் படையினர் தப்பி ஓடினர். தப்பி ஓட விடுதலைப் புலிகள் பாதை ஒன்றைத் திறந்து விட்டனர். ஆனையிறவு வெற்றி ஈழ விடுதலைப் போரின் இறுதி வெற்றிக்குத் திறவுகோலாய் அமைந்துள்ளது.

அடுத்து, யாழ்ப்பாணம் விழப்போகிறது என்று எதிர்பார்த்தோமே ஏன் இன்னும் விழவில்லை என்று சிலர் கேட்கிறார்கள். சிங்களர்களுக்கே கூட ஆச்சிரியமாக இருக்கிறது. எப்பொழுது எதை எப்படிச் செய்வது என்பது தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனுக்குத் தெரியும். ஒரு பொன்மொழி உண்டு. ஒருவரின் மௌனத்தைப் புரிந்து கொள்ள முடியாதவர்களால் அவரது பேச்சையும் புரிந்து கொள்ள முடியாது.

இப்பொழுது பிரபாகரனின் மௌனத்தைச் சிங்களர்கள் மட்டுமல்ல உலகமே புரிந்து கொள்ள முயற்சிசெய்கிறது. யாழ்ப்பாணம் விரைவில் விடுதலைப் புலிகள் வசம் வந்து சேரும். நாம் தமிழ் ஈழத்தில் சந்திக்கக் கூடிய காலம் வரும். நன்றி.



படிப்பகம்

www.padippakam.com

# நுகர்வுப் பண்பாட்டு நுகத்தடியில் ஐரோப்பா

பெ.மணியரசன்

"நுகர்வுப் பண்பாடு" என்ற தொடர் அண்மைக் காலமாக அதிகப் புழக்கத்தில் இருக்கிறது. நுகர்வு என்பது துய்த்தல், பயன்படுத்துதல் என்ற பொருளுடைய சொல். நுகர்வுப் பண்பாடு என்று சொல்லும் போது, பொருள்களைத் துய்க்கும் பண்பாடு என்ற நேர்பொருளில் பயன்படுத்தப்படவில்லை. பொருள்களை மிகையாகத் துய்ப்பது, பொருட்களை துய்ப்பதையே இலக்காகக் கொண்டு வாழ்வது என்ற விமர்சனப் பொருளில் பயன்படுத்தப்படுகிறது.

காண்பதனைத்தையும் சொந்தமாக்கிக் கொண்டு, அவற்றைத் துய்த்து விடவேண்டும் என்ற நுகர்வு வெறி நுகர்வியம் (Consumerism) என்று அழைக்கப்படுகிறது. தேவைக்காகப் பொருள்கள் என்பதைப் பொருள்களுக்காகத் தேவை என்று இது மாற்றி விடுகிறது.

நுகர்வு இல்லாமல் மனித உயிர் இல்லை, வாழ்வில்லை. ஆனால் நுகர்வே மனித இலக்காக ஆகிவிடக் கூடாது. ஆண் பெண் இடையே எழும் பாலியல்வேட்கை மனித இருத்தலுக்கு அடிப்படையானது, காதல் போற்றப்படுகிறது. ஆனால் அவ்வேட்கையில் வரம்பற்ற நாட்டம் கொண்டிருப்பவரைக் காமுகர் என்று சமுதாயம் விமர்சிக்கிறது. அது போல்தான் நுகர்வுப் பண்பாடு.

எதுவுமே அளவுக்கதிகமாகப் போகும்போது அது, தொடர்புடைய தனி மனிதரை மட்டுமின்றி சமூக ஒழுங்கமைப்பையும் ஆட்டி அசைத்து விடுகிறது.

வழக்கம்போலவே, இந்த நுகர்வுப் பண்பாடும் மேற்குலகிலிருந்து கிழக்குலகிற்குத் திணிக்கப்பட்ட ஒன்று. பெரும் வணிக நிறுவனங்களும் பன்னாட்டு முதலாளிய அமைப்புகளும் தங்கள் பொருள்களின் சந்தைத் தேவைகளைப் பெருக்கத் திட்ட மிட்டு நுகர்வுப் பண்பாட்டைப் பரப்பி வருகின்றன,

நுகர்வுப்பண்பாடு, பொருள் சார்ந்ததாகவும் மனம் சார்ந்ததாகவும் இருக்கிறது. புறவாழ்க்கை சார்ந்ததாகவும் அகவாழ்க்கை சார்ந்ததாகவும் இருக்கிறது. உணவு, உடை, உறையுள், ஒப்பனை சார்ந்த பொருள்களில் தேவைக்கதிகமான நாட்டம் கொள்தல் புறவாழ்க்கை சார்ந்தது. பாலியல் வேட்கைக்குக் கடிவாளம் போடாமல் அலையவிடுவது அகவாழ்வு சார்ந்தது. அதே போல் சமூக அக்கறையின்றி தனது அறிவாற்றல், அதன் மகோன்னதம் அதற்கான தேவைகள் என்ற அளவில் தன்னை முதுகு ஓட்டில் சுருக்கிக் கொள்ளும் நத்தைபோல் சுருக்கிக் கொள்ளும் அறிவுஜீவிகளும் அகநிலை நுகர்வுவாதிகள் ஆவர்.

நுகர்வுப் பண்பாடு இப்பொழுதோ இருபதாம் நூற்றாண்டிலோ தோன்றியதாகக் கருதமுடியாது. முதலாளிய உற்பத்தி முறையின் வளர்ச்சியினூடே இதுவும் வளர்ந்து வருகிறது.

பிரஞ்சுப்புரட்சி 1789 ஆம் ஆண்டு தொடங்கியதிலிருந்து பாரீஸ்கம்யூன் 1871 ஆம் ஆண்டு வெற்றி பெற்று முதல் சமதர்ம ஆட்சி நிறுவப்பட்டு அது வீழ்ச்சி அடையும் வரையிலான சுமார் ஒரு நூற்றாண்டு காலம் பிரான்சில் புரட்சிகளும் கொந்தளிப்புகளும் கோலோச்சின.

புரட்சி மனப்பான்மையிலிருந்து இளைஞர்களைத் திசை திருப்ப, பிரான்சில் நுகர்வுப் பண்பாடு பரப்பப்பட்டது. மாணவர்களிடையே பாலியல் பிரசுரங்கள், படங்கள் விநியோகிக்கப்பட்டன.

காலப்போக்கில் ஐரோப்பாவெங்கிலும் வட அமெரிக்காவெங்கிலும் நுகர்வுப் பண்பாடு அந்தந்த நாட்டின் சூழலுக்கேற்ப் வளர்ந்தது.

இன்று நுகர்வியம் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு வளர்ந்துவிட்டது. அதாவது வளர்த்து விட்டார்கள். பண்ட உற்பத்தி மற்றும் வழங்கலில் அரசுக்கு எந்தப் பங்கும் இருக்கக்கூடாது. இவற்றை வணிக நிறுவனங்களே மேற்கொள்ளும். இதற்குப்பெயர் தாராள மயம். கணிப்பொறிகளின் உதவியுடன் பெருக்கெடுக்கும் உற்பத்தி வெள்ளத்தை வாங்கிக் கொள்ள, தாங்கிக் கொள்ள பெருஞ்சந்தை தேவை. உலகெங்கும் பொருட்களைத் தங்கு தடையின்றி விற்றால்தான் பெருஞ் சந்தை கிடைக்கும். இதற்குப் பெயர் உலக மயமாக்கல்! ஜெகம் ஜோதி மயம் என்பது போல் உலகம் முதலாளி மயம்! வரம் கொடுத்தவன் தலையிலேயே கால் வைப்பது போல், இப்போது நுகர்வியம் முதலாளிய மேற்கு உலகத்தைப் பதம்பார்க்கத் தொடங்கிவிட்டது.

ஐரோப்பிய நாடுகளில் குழந்தைப் பிறப்பு விகிதம் குறைந்துவிட்டது. இதனால் வேலைக்கு ஆள்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இன்னும் ஐம்பதாண்டுகளில் இந்த ஆள்பற்றாக்குறை மேலும் மேலும் அதிகமாகி பயங்கர விளைவுகளை அந்நாடுகளில் ஏற்படுத்தும் என்று அந்நாட்டு அறிஞர்கள், அரசியலார் ஆகியோர் அஞ்சுகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

இதைவிட, இருக்கின்ற ஆட்களில், அறிவியல், மருத்துவம், உயர் தொழில் நுட்பம் போன்ற துறைகளுக்கு உள்நாட்டுக் குடிமக்களில் தகுதியான ஆட்கள் கிடைப்பது குறைந்து வருகிறது. உயர்கல்வி கற்ற நபர்களின் பற்றாக்குறை மேலும் மேலும் அதிகரித்து வருகிறது.

அடுத்த இருபதாண்டுகளில் ஐரோப்பாவின் மக்கள் தொகை மூன்று கோடி குறையும் என்று கணக்கிடப்படுகிறது. இப்பொழுதுள்ள குழந்தைப் பிறப்புக் குறைவு விகிதத்தை வைத்து இக்கணிப்பு செய்யப்பட்டுள்ளது. அதாவது ஐரோப்பிய சமூகத்தில் இளைஞர்களைவிட வயோதிகர்களின் எண்ணிக்கை விகிதம் கூடுதலாக இருக்கும். இளைஞர்களும் தங்களின் இருபதுகளில் தான் நிரந்தர வேலைக்குப் போவார்கள். இதனால் உழைப்புக்குத் தேவையான ஆட்கள் கிடைக்காத நிலை ஏற்படும்.

இப்பொழுதுள்ள நிலவரப்படி, ஆறுகோடி மக்கள் தொகை கொண்ட பிரான்சுக்கு, ஆண்டுக்கு 7,50,000 புதிய உழைப்பாளர்கள் தேவை. இவ்வளவு பேர் பிரான்சு நாட்டிலிருந்து மட்டும் கிடைக்கமாட்டார்கள், ஆள் பற்றாக்குறை உள்ளது. வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டும். ஆனால் மேலும் மேலும் வெளிநாட்டவர் அகதிகள் என்ற வடிவிலோ, உழைப்பாளிகள் என்ற வடிவிலோ குவிவதை உள்நாட்டு மக்களும் தலைவர்களும் விரும்பவில்லை. இப்படி ஒரு முரண்பாடு தோன்றியுள்ளது.

ஜெர்மனியில் 75,000 வேலையிடங்கள் காலியாக உள்ளன. தகுதியான நபர்கள் கிடைக்காததே காரணம். தகுதியான வெளிநாட்டவரை ஏற்பதற்காக, அமெரிக்கா (USA) போல, ஜெர்மனி இப்போது புதிதாக பச்சை அட்டை (Green card) முறையைக் கொண்டுவந்துள்ளது. அதாவது வேலையின் அடிப்படையில் குடியுரிமை வழங்கும் திட்டம்.

ஆனால் ஜெர்மனியில் அயலவர்க்கெதிரான வெறுப்பும் போராட்டமும் வளர்ந்து வருகிறது. அயலவர் வந்து, ஜெர்மனியின் அசல் குடிமக்களின் தாயகத்தை ஆக்கிரமித்துக் கொள்கிறார்கள், பண்பாட்டுத் தூய்மையைக் கெடுக்கிறார்கள், வேலைவாய்ப்பைப் பறித்துக் கொள்கிறார்கள் என்று ஜெர்மானியரில் ஒரு பகுதியினர் கருதுகின்றனர். இவர்களது புதிய பாசிச அமைப்பு அங்கு வளர்ந்து வருகிறது. கடந்த ஜுலை மாதம் பிற்பகுதியில் ஜெர்மனியின் டுசல்டோர்ஃப் நகரத் தொடர்வண்டி நிலையத்தில் அயலார் எதிர்ப்பு அணியினர் வெளிநாட்டவர் மீது கைக்குண்டு வெடித்தனர். இதில் 9பேர் காயமடைந்தனர். இவர்கள் முன்னாள் சோவித் ஒன்றியத்திலிருந்து வந்தவர்கள். இவர்களுள் அறுவர் யூதர்கள்.

ஜெர்மனி தற்காலிகக் குடியுரிமை வழங்கும் பச்சை அட்டைகள் வழங்க முன்வந்த போதும், அங்கு அயலவர்க்கெதிரான புதிய பாசிசக் கட்சி செயல்படுவதால் தகுதியுள்ள வெளிநாட்டவர் தேவையான எண்ணிக்கையில் வருவார்களா என்பது ஐயமே!

உள்நாட்டுப்போர் மற்றும் கலவரம் காரணமாகப் புலம் பெயர்ந்த மக்கள், ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் ஏராளமாக வாழ்கிறார்கள். ஈழத்தமிழர்களும் கணிசமாக வாழ்கிறார்கள். பெரும்பாலும் எல்லோர்க்கும் வேலை கிடைத்துவிடுகிறது.

ஆனால் தங்கள் தாயக உரிமையில் அயலார்க்குப் பங்கு கொடுப்பதா, தங்கள் பண்பாடு என்னாகும், இதனால் தங்கள் எதிர்காலம் என்ன ஆகும் என்ற கேள்விகளால், அயலவர் வருகையைத் தடுக்கவும், குறிப்பாக புலம்பெயர்ந்த மக்களின் வருகையை நிறுத்தவும் இந்நாடுகள் சிந்திக்கின்றன.

தங்கள் நாடுகளுக்குப் புலம் பெயர்ந்து வரும் அயலவர் வருகையைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக 15 நாடுகளின் ஐரோப்பிய ஒன்றிய நீதித்துறை மற்றும் உள்நாட்டு அமைச்சர்கள் கூட்டம் அண்மையில் நடந்தது. மீண்டும் வரும் நவம்பர் 30, டிசம்பர் 1 ஆகிய நாட்களில் இந்நாடுகளின் நீதித்துறை மற்றும் வெளியுறவு அமைச்சர்கள் சந்தித்துப் பேசிப் புலப்பெயர்வு தொடர்பாக சில முடிவுகள் எடுக்க உள்ளனர்.

ஒரு பக்கம் பிறப்பு விகிதத்தின் வீழ்ச்சி; இதனால் குறைந்த பட்சத் தேவைக்கும் குறைவான மக்கள் தொகை; வெளி நாடு களிலிருந்து உழைப்பாளிகளைக் கவர்ந்திழுக்க வேண்டிய தேவை! மறுபக்கம் புலம் பெயர்ந்து வரும் மக்களைத் தடுக்கத் திட்டங்கள் வெளி நாட்டவர் வருகைக்கு எதிர்ப்பு இந்த சுயமுரண்பாடு தங்கு தடையற்ற முதலாளிய வளர்ச்சி பெற்றெடுத்த நுகர்வுப் பண்பாட்டின் திருவிளையாடல்!

பிறப்பு விகிதம் குறையக் காரணம் என்ன? கணிசமான இளம் ஆண்களும் பெணகளும் குழந்தை பெற்றுக் கொள்ள விரும்பவில்லை. குழந்தை ஒரு சுமை என்று கருதுகிறார்கள். பிள்ளைப்பாசம் என்பதை நுகர்வுப் பண்பாட்டு வெறி என்னும் தீ எரித்து விட்டது. தாங்கள் தொந்தரவில்லாமல், மகிழ்ச்சியாக வாழ்ந்தால் போதும் என்ற எண்ணம் மேலோங்கியுள்ளது.

ஒரு பக்கம் பிறப்பு விகிதத்தின் வீழ்ச்சி; இதனால் குறைந்த பட்சத் தேவைக்கும் குறைவான மக்கள் தொகை; வெளி நாடு களிலிருந்து உழைப்பாளிகளைக் கவர்ந்திழுக்க வேண்டிய தேவை! மறுபக்கம் புலம் பெயர்ந்து வரும் மக்களைத் தடுக்கத் திட்டங்கள் வெளி நாட்டவர் வருகைக்கு எதிர்ப்பு இந்த சுயமுரண்பாடு தங்கு தடையற்ற முதலாளிய வளர்ச்சி பெற்றெடுத்த நுகர்வுப் பண்பாட்டின் திருவிளையாடல்!

சமதர்ம சமுதாய அமைப்பாக இருந்தால், சமூகப்பொறுப்பில் அதாவது அரசின் கண்காணிப்பில் குழந்தை வளர்ப்பு இல்லங்களைக் கட்டி பராமரிக்கலாம். ஆனால் முதலாளிய அரசுகள், குழந்தை பெற்றுக் கொள்வதற்கு



படிப்பகம்

www.padippakam.com

ஊக்கத் தொகை தருகின்றன. குழந்தையை வளர்க்கவும் தொகை தருகின்றன. இருப்பினும் தங்களோடு பிள்ளையை வைத்து வளர்ப்பதை இவர்கள் சுமையாகக் கருதுகிறார்கள். தங்கள் குழந்தையைத் தாங்க மறுப்போர் சமூகத்தை எப்படித் தாங்குவார்கள்? சமூகத் தொண்டிற்காகக் குழந்தையே வேண்டாம் என்று முடிவெடுத்த தம்பதிகள் சிலரா சிகா இயக்கங்களில் உண்டு. அவர்கள் தனிவகையினர்.

இது எதிர் வினையை உண்டாக்குகிறது. வளர்ந்து விட்ட பிள்ளைகள் முதுமை அடைந்த பெற்றோரைப் பாதுகாப்பதில்லை. ஆண்டுக்கு ஒரு தடவைப் பெற்றோரைப் போய்ப் பார்ப்பது கூட கிடையாது, மூத்த பெற்றோர்கள் முதுமை இல்லங்களில் காலங்கழிக்கிறார்கள். முதியவர்கள் தங்கள் மீது பாசம் காட்டும் நாய்களை வளர்க்கிறார்கள்.

பதினெட்டு வயது அடைந்து விட்டால், பிள்ளைகள் பெற்றோர் வீட்டை விட்டுப் பறந்து விடுகிறார்கள். கோழி குறிப்பிட்ட நாட்கள் கழித்துக் தன் குஞ்சுகளைப் பிரித்துவிடும். ஆனால் மனித வாழ்க்கையும் மனிதத் தேவையும் முழுக்க முழுக்கப் பிராணிகளுடையவை போல இல்லையே! கணிசமான இளம் ஆண்களும் பெண்களும் பிஞ்சில் பழுத்து, கட்டுப்பாடற்ற பாலியல் இன்பங்களைத் துய்த்து விடுவதால், உயர்கல்வி நாட்டம் குறைந்து, பத்தாம் வகுப்பிற்கு மேல் ஒரு தொழில் கல்வி படித்து வேலைக்குப் போய்விடுகிறார்கள். சொந்தக் காலில் நின்று, அகப், புற இன்பங்களைத் துய்ப்பதில் முனைப்புக் காட்டுகிறார்கள். எனவே, உயர்கல்வி கற்பதற்குக் குறைவான நபர்களே வருகிறார்கள். இதனால், உயர்தொழில் நுட்பப் பணிகளுக்கு ஐரோப்பிய நாடுகளில் ஆள்பற்றாக்குறை ஏற்படுகிறது.

கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே, கீர்த்தியுடன் வாழ்ந்த கிரீசும், இத்தாலியும் ஐரோப்பாவின் ஏழைக் குடில்களாக மாறிப்போனதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று, அந்நாடுகளின் மக்கள், பாலியல் இன்பங்களுக்கு மிகை முன்னுரிமை கொடுத்துச் சீரழிந்ததாகும் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். நுகர்வுப் பண்பாட்டின் ஒரு பகுதியே வரம்பற்ற பாலியல் நாட்டம். இவ்வாறு குறிப்பிடுவதால் இந்தியாவில் உள்ள கற்புக் கோட்பாடு, பாலியல் உரிமை மறுப்பு போன்ற பத்தாம் பசலித் தனங்களை நாம் ஏற்றுக் கொள்வதாகப் பொருள் அல்ல. ஐரோப்பாவின் பாலியல் நுகர்வியத்திற்கும் இந்தியாவில் உள்ள பாலியல் ஒடுக்குமுறைக்கும் இடைப்பட்டசரியான, சமூக ஒழுங்குடன் கூடிய புதிய பாலியல் சுதந்திரம் வளர வேண்டும்.

பாட்டாளி வர்க்கத்திற்கென்று வரையறுக்கப்பட்ட சித்தாந்த ஒழுங்கு இருப்பதுபோல், முதலாளி வர்க்கத்திற்கு ஒரு சித்தாந்த ஒழுங்கு கிடையாது. முதலாளி வர்க்த்திற்குத் தன்னலத்தில் இருக்கும் அக்கறை அளவிற்கு சமூக நலத்தில் அக்கறை கிடையாது. ஒன்றையொன்று விஞ்சி, ஒன்றையொன்று அழித்து முன்னேறும் போட்டி மனப்பான்மையை, தன்னல மனப்பான்மையை சமூகம் முழுமைக்கும் பரப்பி விடுகிறது முதலாளியம். எனவே நுகர்வுப் பண்பாட்டின் விளைநிலமாக முதலாளிய சமூகச் சூழல் அமைந்து விடுகிறது.

தேவை (demand), வழங்கலைத் (supply) தீர்மானிப்பதுதான் ஆரோக்கியமான பொருளியல் வளர்ச்சி. ஆனால் இன்றையத் தாராளமயத்தில், வழங்கல், தேவையைத் தீர்மானிக்கிறது. அபரிமிதமாக, வகைவகையாக உற்பத்தி செய்யப்படுகிறது. மக்கள் அவற்றை வாங்கும் மனநிலையை உருவாக்கப் பிரம்மாண்டமான விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. இப்போக்கு மக்களை வெறும் நுகர்வோராகக் குறுக்கிவிடுகிறது.

> பாட்டாளி வர்க்கத்திற்கென்று வரையறுக்கப்பட்ட சித்தாந்த ஒழுங்கு இருப்பதுபோல், முதலாளி வர்க்கத்திற்கு ஒரு சித்தாந்த ஒழுங்கு கிடையாது. முதலாளி வர்க்த்திற்குத் தன்னலத்தில் இருக்கும் அக்கறை அளவிற்கு சமூக நலத்தில் அக்கறை கிடையாது. ஒன்றையொன்று விஞ்சி, ஒன்றையொன்று அழித்து முன்னேறும் போட்டி மனப்பான்மையை, தன்னல மனப்பான்மையை சமூகம் முழுமைக்கும் பரப்பி விடுகிறது முதலாளியம். எனவே நுகர்வுப் பண்பாட்டின் விளைநிலமாக முதலாளிய சமூகச் சூழல் அமைந்து விடுகிறது.

திணிக்கப்படும் வழங்கல் அதாவது சந்தையில் குவிக்கப்படும் மிதமிஞ்சிய பண்டங்கள் சமூக உறுப்பினர்களுக்கு சீராகக் கிடைக்க வழியில்லாததால், மற்றவரைப்போல் நுகர முடியாதவர்கள் மனதில் விரக்தியும் தோல்விக்குறுகுறுப்பும் ஏற்படுகின்றன.. இம் மனப்பான்மை பல்வேறு சமூகச் சிக்கல்களை உருவாக்குகின்றது..

சமதர்மம், சமூக நீதி போன்ற மார்க்சிய வழிப்பட்ட சமூக அறம் முதலாளிய அரசியல் களத்தில் முன்னிறுத்தப்படுவதில்லை. பொதுவான சேமநலம் (welfare) மட்டுமே முதலாளியத்தில் முன்வைக்கப்படுகிறது. இதனால் தாராளமயம் மற்றும் உலக மயம் உருவாக்கும் நுகர்வுப் பண்பாட்டிலிருந்து மக்களை மடை மாற்றிட, தகுந்த தத்துவ வெளிச்சம் இல்லாமல் போய்விடுகிறது.

இன்று ஐரோப்பிய அமெரிக்க முதலாளிய உலகம் நுகர்வுப் பண்பாட்டில் விளைந்த தீங்குகளை அறுவடை செய்து கொண்டுள்ளது. இந்தத் தீங்குகளை இந்தியா போன்ற நாடுகளுக்கு அது ஏற்றுமதி செய்து வருகிறது. இதனை எச்சரித்துத் தமிழ் மக்களை விழிப்படையச் செய்யவேண்டியது தமிழ்த் தேசியர்களின் கடமை.



படிப்பகம்

www.padippakam.com

# பழைய பக்கங்களிலிருந்து.......

(பழைய தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் விவசாயத் தொழிலாளிகள் நிலை எப்படி இருந்தது என்பதற்கு அப்போதைய விவசாயிகள் இயக்கத் தலைவர் தோழர் பி. சீனிவாசராவ் எழுதிய தஞ்சை ஜில்லாவில் நடப்பதென்ன என்ற சிறு நூலிலிருந்து சில பகுதிகள் தரப்பட்டுள்ளன. இந்நூல் 1947ல் வெளியானது.)

தொகுப்பு : அமரன்

## தஞ்சை ஜில்லாவில் நடப்பதென்ன?

1947 ஆம் ஆண்டு ஜனவரி 3ந்தேதி கும்பகோணத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடந்தது. அக்கூட்டத்தில் மந்திரி கரத் திருத்துறைப்பூண்டி தாலுகாவில் "குட்டி நவகாளி" நடத்தப்பட்டு வருகிறது. கொள்ளை, கொலை, கொள்ளி வைத்தல் முதலிய கொடுமைகள் முற்றிவிட்டன. நாங்கள் முதலாளித்துவத்தை எதிர்க்கிறோம் என்று சொல்லிக் கொண்டு விவ்சாயிகள் நாசம் பண்ணுகிறார்கள் என்று பிரசங்கம் செய்தார். நெடுநாள் ஏங்கிக் கிடந்த சந்தர்ப்பம் இப்பொழுதாவது வாய்த்தது என்று கருதிய "பாரததேவி" போன்ற தினசரிப் பத்திரிகைகள் விடாதே கிஸான் சபையை என்று தலையங்கங்கள் தீட்டின. இதைப் படித்த தஞ்சை மிராசுதார்கள் துள்ளிக் குதித்தார்கள் 'கிஸான் சபையை சட்ட விரோதமாக்க வேண்டும் என்று அறிக்கை விட்டனர்.

'கிஸான் சபையையும் கம்யூனிஸ்ட் கட்சியையும் சட்டவிரோதமாக்கிவிடப் போவதாக மந்திரிமார்கள் தங்களுக்கு வாக்குறுதி தந்திருக்கிறார்கள்' என்று மிராசுதார்கள் பறையடிக்க ஆரம்பித்தார்கள். தங்கள் உடல் பொருள் ஆவி மூன்றையும் மிராசுதாரர்களுக்கே தத்தம் செய்துவிட்ட பெரும்பெரும் காங்கிரஸ் தலைவர்களும் இடைவிடாமல் இதனையே நாடு முழுவதும் பிரச்சாரம் செய்தார்கள்.

பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நஞ்சை வயல்களைச் சொந்தமாகக் கொண்டு இன்பத்தில் முங்கி மூழ்கும் ஒரு சில பெருமிராசுதார்களுக்குத் துதி பாடிய காங்கிரஸ்காரர்கள் லட்சக்கணக்கான தரித்திர உழவர்களைத் தான் ஒழித்துக்கட்ட முனைந்தார்கள்.

அன்று 1 வடபாதிமங்கலம் தியாகராஜ முதலியார் குடும்பத்திற்கு மட்டும் 15,000 நஞ்சை நிலம் 2. குன்னியூர் சாம்பசிவ அய்யரின் குடும்பத்தார்களுக்கு 6000 ஏக்கர் நெல் வயல்களும், 500 ஏக்கர் தென்னந்தோப்புகளும் சொந்தம் 3, ராவ்பகதூர் சாமியப்ப முதலியாருக்கு 2,500 ஏக்கர் நஞ்சை நிலம் சொந்தம் 4, கே.எம். தேசிகர் என்ற (காங்கிரஸ் எம்.எல்.ஸி) தேச பக்த தீன தயாபரருக்கு 1,500 ஏக்கர் நஞ்சை வயல்கள் சொந்தம். இவர் குறுவை நெல் விற்பனையில் அரிசிடமிருந்து போனஸாக பெற்ற பணம் மட்டும் 25000 ரூபாய் 5 மூலங்குடி கோபாலகிருஷ்ண அய்யருக்கும் அவரது சொந்தக் காரர்களுக்கும் 2,000 ஏக்கர் நிலம் சொந்தம். ஏழைப்பட்ட விவசாயிகளை கசக்கிப் பிழிந்துதான் மிராசதார்கள் செல்வம் கொழுத்தார்கள் இவற்றுடன் ஆயிரக்கணக்கான நஞ்சைநிலங்களை சொந்தமாகக் கொண்ட கோவில் டிரஸ்டிகளாகவும், கிராமக் கமிட்டி தலைவர்களாகவும் இருந்தார்கள். கோவாப்சேட்டிவ் சொஸைட்டிகளிலும் இவர்களே அடைந்து கொண்டு லட்சக்கணக்கில் லாபமடைந்து அரண்மனை போன்ற பளிங்கு மாளிகையில் வாழ்ந்தார்கள். தஞ்சை மாவட்ட மக்களின் பொருளாதார வாழ்க்கையே இவர்களின் இரும்புப் பிடிக்குள் சிக்கி மூச்சடைத்துக் கிடந்தது.

½ மரக்கால் நெல்லுக்கு ஆதிதிராவிட மக்கள் தங்கள் குடும்பத்தார்களுடன் பண்ணையாட்களாக நாள்முழுவதும் வேலை செய்தார்கள். பண்ணையாட்களும் அவர்களுடைய மனைவி மக்களும் நிலத்துடன் பிணைக்கப்பட்டு பிறப்பிலேயே அடிமைகளாக இருக்கவேண்டியிருந்தது. இவர்களுக்கு ஒருவேளைதான் சுடு கஞ்சி கிடைக்கம். பண்ணையார்களின் சொந்த நிலத்தில் குடிசைகளில் பலநாட்கள் பட்டினியுடன் வாழ்க்கை சோகமாகக் கிடந்தது. படிப்பைப் பற்றி நினைக்கவே வழியற்று உடுத்திக்கொள்ள துணியற்று கோவணத்துடன் மிராசுதார்களின் சவுக்கடிகளுக்கு அஞ்சி வாழ்நாட்களை ஓட்டிக் கொண்டிருந்தார்கள்.

மடத்துக்கும் கோவிலுக்கும் சொந்தமான நிலங்களில் நடைபெறும் சுரண்டல் இதற்குமுன் கூறியதை எல்லாம் தூக்கிவாரியடித்துவிடும். மடத்து நிலங்கள் பணக்கார குத்தகைதாரர்களுக்கு விடப்பட்டு அந்த நிலத்தை ஏழை விவசாயிகளுக்கு அதீத குத்தகைக்கு விட்டு ஏழைவிவசாயிகளை கசக்கிப் பிழிந்தார்கள். இப்படி வந்த பணத்தையெல்லாம் உல்லாச வாழ்க்கைக்கு மடாதிபதிகள் வாரியிறைத்தார்கள்.

மிராசுதார்களின் இத்தகைய



படிப்பகம்

www.padippakam.com

மனிதத் தன்மையற்ற சுரண்டலையும் பயங்கரச் செயல்களையும் எதிர்ப்பதற்காகவே 1943ல் தஞ்சை ஜில்லாவில் கிசான் சபை ஏற்படுத்தப்பட்டது. கிசான் சபா இயக்கத்தின் முன்னணி வீரர்களாக கம்யூனிஸ்ட்டுகள் விளங்கினார்கள். முதன் முதலில் மன்னார்குடி தாலுக்காவிலுள்ள தென்பரை கிராமத்தில்தான் கிசான்சபை தோன்றியது. தென்பரை கிராமம் ஒரு மடத்துக்குச் சொந்தமானது. மடத்தின் விவசாய நிலத்திற்கான வாடகையை ஆண்டுதோறும் ஏற்றிக் கொண்டே இருந்தது மடம். இதனை எதிர்த்து கிசான்சபை கிளர்ச்சியில் இறங்கியது. குண்டர்களையும் போலீஸ்படைகளையும் ஏவிய மடத்திற்கு எதிராக விவசாயி மக்கள் தளராமல் போராடி அரைகுறை வெற்றியில் போராட்டம் முடிந்தது. நில வாடகையும் ஓர் அளவு குறைக்கப்பட்டது. அன்று முதல் ஹரிஜன விவசாயிகளிடமும் பண்ணையாட்களிடமும் கிசான் சபை காட்டுத் தீ போல் பரவியது.

பொதுக் கிணறுகளில் தண்ணீர் எடுக்கத் தடை, சேரிகளிலும், கிணறுகள் கிடையாது., தூரத்தில் சாதி இந்துக்களை பார்த்துவிட்டால் உடனே தரையில் விழுந்து கும்பிட வேண்டும். இதுதான் அன்றைய தஞ்சை ஜில்லா ஹரிஜனங்களின் நிலமை. சமுகத்துறையிலும், பொருளாதாரத் துறையிலும் நசுக்கப்பட்டு கிடந்த இந்த மக்களுக்கு சுடர்விட்டு பிரகாசிக்கும் ஜோதியாக விளங்கியது கிசான்சபை. 1944இல் மன்னார்குடியில் 15,000 பேர் கொண்ட விவசாயிகள் மாநாட்டை பெரும் எழுச்சியுடன் கூட்டினார்கள். சாதி இந்துக்களான மிராசுதார்கள், குத்தகைதார்கள், சிறு விவசாயிகள் ஆகியோருடன் ஹரிஜனக் கூலி விவசாயத் தொழிலாளர்களும் ஒற்றுமை காண்பது தங்களுக்கு பேராபத்து என்பதை உணர்ந்த மிராசுதார்கள் பிரித்தாளும் சூழ்ச்சியில் இறங்கினார்கள். சாதி இந்துக்களிடமிருந்த சாதித்துவேசத்தை பயன்படுத்தி கிசான் சபையை ஒழித்துக்கட்ட முனைந்தார்கள். இப்பொழுதுதான் கிசான்சபை மகத்தான எழுச்சியைப் பெற்றது. குண்டர்களின் தாக்குதல்களையும், மிராசுதார்களின் கைவரிசையையும் கிஸான்சபை பொடிபொடியாக்கியது.

1944 டிசம்பரில் மிராசுதார்கள், ஜில்லா அதிகாரிகள், கிஸான் தலைவர்கள் அடங்கிய முக்கூட்டு மாநாடு நடைபெற்றது. கூலி உயர்வாக நாளொன்றுக்கு ½மரக்கால் நெல் ¾ மரக்காலாக உயர்த்தப்பட்டது. ஆனால் இவ்வொப்பந்தத்தை மிராசுதார்கள் மீறி அடியாட்களை ஏவினார்கள். அரசாங்கம் 1945 ஜனவரி முதல் 2 மாதங்கள் வரை கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தத் தடை விதித்தது. கிசான் சபை தலைவர்களான மணலி கந்தசாமிக்கும் சேரங்குளம் ஆர். அமிர்தலிங்கத்துக்கும் ஜில்லாவை விட்டு வெளியேறுமாறு உத்தரவு பிறப்பித்தது. கிசான் சபையை ஒழித்துவிட்டதாக மிராசுதார்களும் அதிகாரிகளும் இன்பக் கனவு கண்டார்கள் ஆனால் பகற்கனவாய் முடிந்தது.

## விருத்தாசலம் இராசு மறைவு



இராசு அண்ணன் என்று தமிழின உணர்வாளர்களால் அன்புடன் அழைக்கப்பெற்ற விருத்தாசலம் சி.இராசு அவர்கள் 15.7.2000 அன்று இயற்கை எய்தினார் என்ற செய்தி நெஞ்சத்தை வாட்டுகிறது. திராவிட நாடு அமைந்த பிறகு திருமணம் செய்து கொள்வோம் என்று தந்தை பெரியாரிடம் இரத்தத்தினால் கையொப்பமிட்டு உறுதி செய்த 12 இளைஞர்களில் இராசுவும் ஒருவர். அதே போல் அவர் இறுதி வரை திருமணம் செய்து கொள்ளாமல் இருந்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஒன்றியச் செயலாளராகப் பணிபுரிந்தார். இந்தி எதிர்ப்புப் போராட்டம், ஈழத் தமிழருக்கான போராட்டம், 1962ல் விலைவாசி உயர்வுக்கெதிரான போராட்டம், மிசா சட்டத்தை எதிர்த்து சிறை என பல தடவை சிறை சென்றவர்.

சிறந்த தமிழ்த் தேசிய உணர்வாளரும், ஈழ விடுதலை ஆதரவாளருமான அண்ணன் சி.இராசு தமிழுக்காக, தமிழருக்காக நடைபெறும் நிகழ்வுகளில் கட்சிக்கு அப்பாற்பட்டு பங்கு கொள்ளுபவர்.

ஈழவிடுதலைக்கு ஆதரவாக நூல் வெளியிட்டார் என்று குற்றஞ்சாட்டி ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் இவர் மீது வழக்கு தொடுத்தார்கள்.

அண்ணன் இராசுவின் மறைவு தமிழ்த் தேசிய சக்திகளுக்கு பேரிழப்பு. அவருக்கு தமிழர் கண்ணோட்டம் இறுதி வணக்கம் செலுத்திக் கொள்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# பாரிசில் பெரியார் தோசை

பாரிஸ் லா சேப்பல் - தமிழர்களும் இந்திய நாட்டினரும் அதிகம் வாழும் பகுதி. அங்கு பாண்டிச் சேரி உணவகம் என்ற பெயரில் உணவு விடுதி உள்ளது. திரு சிவா அவர்களும் நானும் 11.07.2000 அன்று பகல் உணவுக்கு அங்கு போனோம். உணவு வகைப் பட்டியலில் (மெனுவில்) பெரியார் தோசை என்று இருந்தது. அது என்ன பெரியார் தோசை என்று கேட்டோம். அங்கு பணியாற்றும் காரைக்கால் நாகராசு வெங்காயத் தோசைதான் பெரியார் தோசை என்றார். வெங்காயம் என்ற சொல்லை மேடைப் பேச்சில் பெரியார் பயன்படுத்துவார்.

மகிழ்ச்சியோடு பெரியார் தோசை வாங்கிச் சாப்பிட்டோம். மறுபடியும் பட்டியலைப் பார்த்தோம். கீழே பிராமண தோசை என்று போடப்பட்டிருந்தது. பிராமண தோசை என்றால் என்ன என்று கேட்டதற்கு காய்கறி வைக்கப்பட்ட பெரிய தோசை என்றார்.

உணவகத்தின் உரிமையாளர் மயிலாடுதுறை மைதீன். அவரிடம் பெரியார் தோசைக்குப் பாராட்டுத் தெரிவித்து விட்டு, பிராமண தோசை என்ற பெயரை மாற்றிவிடுங்கள், அது ஒரு சாதிப் பெயராக உள்ளது என்றோம். அடுத்ததடவை பட்டியல் அச்சிடும்போது அவ்வாறே செய்கிறேன் என்றார்.

## ஜெர்மனியில் வானம் பார்த்து ஏங்கும் விவசாயி

ஜெர்மனியில் உள்ள ஸ்டுட்கார்ட் நகரத்தில் 17.06.200 அன்று நடைபெற இருந்த தமிழர் எழுச்சி விழாவில் கலந்து கொள்வதற்காக முதல் நாளே அங்கு சென்று விட்டோம். புஷ்பவனம் குப்புசாமி குழுவினரும் நானும் ஸ்டுட்கார்ட் புறநகர் பகுதியில் ஈழத் தமிழர் இல்லத்தில் தங்கியிருந்தோம்,

காலையில் பக்கத்திலிருந்த விவசாய நிலங்களைப் பார்ப்பதற்காகப் போனோம். விசைப்பலகை கோவை நடராசன், தஞ்சாவூர் தவில் கிணற்றடியான், தபேலா இராசகோபால் ஆகியோரும் நானும் கோதுமை வயல்களை சுற்றி வந்தோம்.

கோதுமை வயல்களுக்கிடையே ஒரு திடல். அதில் ஒரு பெரியவர் காய்கறி, பூச்செடிகள் பயிரிட்டிருந்தார். அவரிடம் சென்று அந்த சாகுபடி பற்றி விசாரித்தோம். அவர் இந்தியா வந்திருப்பதாகவும் கேரளா அழகான இடம் என்றும் சொல்லிக் கொண்டே, பதினைந்து நாட்களாக மழைபெய்யவில்லை; பக்கத்தில் ஸ்டுட்கார்ட்டில் மழை பெய்து முழங்கால் அளவுக்கு தண்ணீர் ஓடியது. இங்கு மழை பெய்யவில்லை. இதோ பாருங்கள் ஸ்ட்ரா பெர்ரி வாடி வதங்கிவிட்டது என்று சோகமாகக் கூறிக்கொண்டே அச்செடிகளை பிடுங்கிக் காட்டினார். விவசாயியின் துயரம் தமிழ்நாட்டிலும் ஜெர்மனியிலும் ஒரே மாதிரிதான் இருக்கும் போல் இருக்கிறது என்று மனதிற்குள் நொந்து கொண்டேன்.

# காற்று போனபோக்கில் கரை சேர்ந்து கொள்ளுங்கள்

டென்மார்க்கில் சிவா, கரண் என்று இரண்டு மாணவர்கள், புலம் பெயர்ந்து வந்து அங்கு உயர்நிலைப்பள்ளியில் படித்துக் கொண்டிருக்கிற ஈழத் தமிழர்கள் அவர்கள். அவர்கள் ஈழத்தில் சிங்களர்கள் நடத்தும் இனப்படுகொலையிலிருந்து தப்பிக்க ஒரு முகவர் மூலம் 1994 ஆம் ஆண்டு நவம்பர் 17 மாஸ்கோ வந்து சேர்ந்தார்கள். ஓராண்டு அங்கு தங்கியிருந்தார்கள்.

மாஸ்கோவிலேயே பசியும் பற்றாக்குறையும் வேலையில்லாத் திண்டாட்டமும் நிலவியதால் எப்படியாவது மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குப் போய்விடவேண்டும் என்று இவர்கள் முடிவெடுத்தார்கள். மாஸ்கோவில் ஒரு முகவருக்கு பணம் கொடுத்து இதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

இவர்களைப்போலவே இன்னும் பல ஈழத் தமிழர்கள் அந்த முகவர் மூலம் சேர்ந்து மொத்தம் 94 பேர் புறப்பட்டார்கள். ரஷ்யா - லித்வேனியா எல்லையில் ஒரு கிராமத்தில் இவர்களை அந்த முகவர் தங்க வைத்தார். கீழே பன்றிகள் மேலே பரணில் இவர்கள் தங்க இடம். ஒரே கொசுத் தொல்லை. அந்த முகவர் லித்துவேனிய காடுகள் வழியே வேற்று நாடுகளுக்கு போகுமாறு சொல்லி விட்டுவிட்டார்.

94 பேர்களும் காடுகளில் அலைந்து இலைதழைகளைத் தின்று பசியாற்றி ஒரு வாரத்தைக் கழித்தார்கள். இதற்கிடையே லித்துவேனிய நாட்டின் போலீசார் இவர்களைப் பிடித்து காவலில் வைத்தார்கள். அங்கிருந்து அந்த முகவரை காவலர்கள் மூலம் தேடிப் பிடித்து மறுபடி பயணம் புறப்பட்டார்கள்.

இரண்டு மீன் பிடி படகுகளை ஏற்பாடு செய்து வேற்று நாடுகளுக்கு அகதிகளாக போய்ச் சேருமாறு அனுப்பி வைத்தார் முகவர்.

மீன் பிடி படகுகளை ஓட்டியவர்கள் நடுக் கடலில் கொண்டு வந்து நிறுத்திக் கொண்டு, கொஞ்ச தூரத்தில் கரைவந்து விடும், காற்று தெற்கு நோக்கி அடித்தால் டென்மார்க் போய் சேர்வீர்கள், வடக்கு நோக்கி அடித்தால் நார்வே போய் சேர்வீர்கள், நாங்கள் புறப்படுகிறோம் என்று சொல்லி இவர்களை விட்டுவிட்டு அவர்கள் வேறொரு படகில் போய்விட்டார்கள்.

கடலில் ஓரிரு நாட்கள் பயணம் செய்து ஒரு படகு மட்டும் கரை சேர்ந்தது. கரை சேர்ந்த அவர்கள் தாங்களே வலிய காவல் துறையை அணுகி தங்களை அகதிகளாக ஏற்குமாறு கூறினார்கள். அத்துடன் இன்னொரு படகு கரைசேரவில்லை அவர்களைக் காப்பாற்ற ஏற்பாடு செய்யுங்கள் என்றும் கூறினார்கள். காவல் துறையினர் ஹெலிகாப்டர் மூலம் இன்னொரு படகில் ஊசி குத்தும் உறை பனிக் காற்றில் விரைத்துப் போய் இருந்த அவர்களை தூக்கிக் கொண்டுவந்து சிகிச்சை அளித்து காப்பாற்றினார்கள். காற்று தெற்கு நோக்கி அடித்திருக்கிறது. அதனால்தான் டென்மார்க் வந்து சேர்ந்திருக்கிறார்கள். புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்கள் அவ்வளவு துன்பங்களுக்கிடையேதான் போயிருக்கிறார்கள்.

குறிப்பு : 23.07.2000 அன்று தஞ்சையில் நடந்த த.தே.பொ.க. மாவட்டப் பேரவையில் தோழர் பெ.மணியரசன் சொன்ன செய்திகள்.

படிப்பகம்

www.padippakam.com



# தினம் தீயிட்டாள்...!

- நிவேதிதா

கயிறு கட்டி
கன்னி கழித்து
பொருள் சேர்க்க
போனது...
தூரதேசம்

ஓய்வில்லா... புது
புகுமனைக்குள்
ஒட்டாத உறவு
கட்டாத...
கால்விலங்கு

சிறு பொழுது
சிரிப்பில்
சிக்கிய குழவி...
போனவன்
பெயர் சொல்ல
போராடுகிறது...!

சாதியில்
விலையற்று
விற்றவன்
வீதியின்
விசாரிப்பில்

காணி
கட்டுமனை
காசுபணக்
கவலையில்
பருவத்தின்
பக்குவம் அறியா
தாய்...!

கத்தும்
கால்நடைகளை
காளைக்கு ஒட்டும்
சுற்றம்

செல்வம் சேர்க்க
சென்றவன்
போகுமிடத்தில்
பொருட் பெண்டிர்
சேரல்...
பொதுப்பண்பு

கற்புடன்
காமத்தின்
கட்டவிழ்க்க
திறந்த மனதுக்குள்
தவிக்கும்
தாளிட்ட உடலை
தினம்... தீயிட்டாள்...

## கார்கிலும் ஆனையிறவும்

(வாசகர் கடிதம்)

சூலை 26 அன்று கார்கில் ஓராண்டு நினைவு நாள் இந்திய அரசாங்கத்தாலும் தமிழக அரசாங்கத்தாலும் கொண்டாடப்பட்டது. அவரவர் வீடுகளில் மெழுகுவர்த்தி ஏற்றி கார்கிலில் இறந்துபோன இராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துமாறு அரசாங்கம் கேட்டுக்கொண்டது. தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களும் கார்கில் நினைவு நாள் நிகழ்ச்சிகளில் உற்சாகமாக கலந்து கொண்டார். தமது இந்திய தேசிய பக்தியை பிரகாசமாக வெளிப்படுத்திக் கொண்டார்.

காஷ்மீரிகள் மண்ணில் இந்தியப்படையினர் நடத்திய போரில் மரணம் அடைந்த கார்கில் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்த இவ்வளவு அக்கறை காட்டும்போது, இல்லாத இந்திய தேசியத்தின் பெயரால் இவ்வளவு தூரம் கார்கில் வெற்றிவிழா கொண்டாட்டங்களை நடத்தும்போது, தமிழ் இனத்தின் உரிமைக்கு போராடி மடிந்த ஈழப்போராளிகளுக்கு தமிழர்கள் அஞ்சலி செலுத்த தடை விதிப்பது ஏன்? ஆனையிறவு வெற்றியை தமிழ்நாட்டில் கொண்டாட தடைவிதிப்பது ஏன்?

இல்லாத இந்தியதேசியத்திற்கே இவ்வளவு உணர்ச்சி இருக்கும்போது இரத்தமும் சதையுமாய்இருக்கின்ற தமிழ இன உறவிற்கு எவ்வளவு உணர்ச்சிகள் இருக்கும்? ஆனையிறவு வெற்றி விழாஎன்று செய்தி வெளியிட்டதால் தான் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் சிதம்பரத்தில் நடைபெற இருந்தஈழத்தமிழர் ஆதரவு எழுச்சிமாநாட்டைத் தடை செய்ததாக தமிழக சட்டப்பேரவையில் முதலமைச்சர் முழங்கினார். தமிழன் நாதியற்றவனா?

-பூங்குழலி, மயிலாப்பூர்.

படிப்பகம்